# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1806 - 2013 අප්‍රේල් මස 12 වැනි වැනි සිකුරාදා - 2013.04.12

*1806 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1028 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவு திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1043 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | 1044 | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**- (i) பாதுகாப்புச் சேவைகள் ஏவல் மற்றும் பணியாட்டொகுதிக் கல்லூரி (திருத்தம்) சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(ii) ஏர்ல் குணசேகர மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

**கவனிக்க.**- இவ்வர்த்தமானியின் பகுதி V இல் 2010 ஆம் ஆண்டின் காலாண்டிற்கான (சனவரி - மாச்சு) புத்தகப் பெயர்ப்பட்டியலொன்று ஆங்கில மொழியில் மட்டும் பிரசுரிக்கப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, *அதாவது 2013, மே மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, ஏப்பிறல் மாதம் 19 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பதவிகள் — வெற்றிடம்

## வலல்லாவிட பிரதேச சபை

பதவி வெற்றிடம்

மேல்மாகாண அரச சேவையில் வலல்லாவிட பிரதேச சபையில் வெற்றிடமாகியுள்ள பின்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்காக இவ் அறிவித்தலில் தரப்படும் தகைமைகள் உள்ள வலல்லாவிட பிரதேச சபை எல்லைக்குள் வசிப்பவர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் இங்கே வழங்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப ஒழுங்கமைத்துக்கொண்ட விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்தி, செயலாளர், வலல்லாவிட பிரதேசசபை, மீகாதென்ன என்ற விலாசத்திற்கு 2013, ஏப்பிரல் மாதம் 30 ஆந் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கவும்.

| தொடர் எண் | பதவி பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பளத்திட்டம் (மாதாந்தம்) | கல்வித்தகைமையும் ஆட்சேர்ப்பு முறையும் |
|---|---|---|---|---|
| 01 | சாரதி II தரம் | 02 | PL 3-2006 A<br>ரூபா 12,470-10×130-10 ×145-10×160-12×170-ரூபா 18,860 | கல்விப்பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதித்த பாடசாலையில் குறைந்தது தரம் (8) சித்தியடைந்திருக்க வேண்டும்.<br>**தொழிற் தகைமைகள் :**<br>(1) தனியார்/வாடகை வாகனம் மற்றும் சிறியரக வாகனம் (வேன்) ஓட்டுதல் தொடர்பாக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேர்ச்சி தொடர்பான சான்றிதழ் பெற்றுள்ளமை (ஆட்சேர்ப்பு தினத்திற்கு மூன்று வருடத்திற்கு முன் பெற்றுள்ளமை.)<br>(2) வாகன ஓட்டுனராக மூன்று வருட அனுபவம் இருக்க வேண்டும்.<br>(3) பெருந்தெருக்கள் சட்டம் தொடர்பான அறிவு இருக்க வேண்டும்.<br>**வேறு தகைமைகள்**<br>(1) உயரம் குறைந்தது 5 அடிக்கு மேல் இருக்க வேண்டும்.<br>(2) பகல் இரவு நேரங்களில் சிறந்த கண்பார்வை உள்ளவராக இருக்க வேண்டும். |
| 02 | வெளிக்கள தொழிலாளர் | 06 | PL 1-2006 A<br>ரூபா 11,250-10×120-10 ×130-10×145-12×160- ரூபா 17,600 | கல்விப்பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதித்த பாடசாலையில் குறைந்தது ஐந்தாம்/ஆறாம் தரம் சித்தியடைந்திருக்க வேண்டும். |
| 03 | சுகாதார தொழிலாளர் | 04 | PL 1-2006 A<br>ரூபா 11,730-10×120-10 ×130-10×145-12×160- ரூபா 17,600 | கல்வித்தகைமை பார்க்கப்படமாட்டாது. |
| 04 | தகனச்சாலை இயக்குனர் | 01 | PL 1-2006 A<br>ரூபா 12,210-10×130-10 ×145-10×160-12×170- ரூபா 18,600 | 1. **உள்ளக விண்ணப்பதாரிகளுக்காக.**- குறைந்தது தரம் 8 அல்லது 9 சித்தியடைந்திருக்க வேண்டும்.<br>2. **வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்காக** : தேசிய பொது கல்வி சான்றிதழ் (சாதாரண தரம்) பரீட்சையில் அல்லது கல்வி பொது தராதரப் பத்திரம் (சாதாரண தரம்) பரீட்சையில் ஏதாவது இரண்டு பாடங்கள் சித்தியடைந்திருக்க வேண்டும். |

| தொடர் எண் | பதவி பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பளத்திட்டம் (மாதாந்தம்) | கல்வித்தகைமையும் ஆட்சேர்ப்பு முறையும் |
|---|---|---|---|---|
| 05 | தகனச்சாலை உதவி இயக்குனர் | 01 | PL 1-2006 A<br>ரூபா 11,250-10×120-10 ×130-10×145-12×160- ரூபா 17,600 | குறைந்தபட்சம் ஒன்பதாம்/எட்டாம் தரம் சித்தியடைந்திருக்க வேண்டும். |
| 06 | இயந்திர இயக்குனர் | 02 | PL 1-2006 A | குறைந்தபட்சம் பத்தாம் தரம் சித்தியடைந்திருக்க வேண்டும்.<br><br>**தொழிற் தகைமைகள் :**<br>(1) முழுப்பாரம் 34 டொன்னுக்கு அதிகமான பாரமுடைய மோட்டார் வாகனம், பாரடேளர் மற்றும் 32 பேருக்கு மேற்பட்ட பயணிகளை கொண்டு செல்வதற்கான அனுமதிப்பத்திரம் உள்ள பேரூந்து ஓட்டுவதற்கான மோட்டார் போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேர்ச்சி தொடர்பான சான்றிதழ் இருக்க வேண்டும்.<br>(2) குறைந்த உயரம் 5 அடி 6 அங்குலம் ஆகும்.<br>(3) ஆட்சேர்ப்பதற்கு பிரேரித்துள்ள பதவிக்கான (இலக்கம் 1 கீழ் குறிப்பிட்டுள்ள) பார இயந்திரம் இயக்குதல் தொடர்பான அரச அல்லது அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தின் ஒரு வருடத்திற்கு குறையாமல் பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும்.<br>(4) மோட்டார் பொறி விஞ்ஞானம் தொடர்பான அடிப்படை அறிவு இருத்தல் வேண்டும். |

**2. தேவையான வேறு தகைமைகள் :**

(1) விண்ணப்பப்படிவம் பெற்றுக்கொள்ளும் இறுதி நாளன்று வயது 18க்கு குறையாமலும் வயது 45 க்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் ;
(2) விண்ணப்பதாரர் பரம்பரையாக அல்லது பதிவுசெய்யப்பட்ட இலங்கையராக இருத்தல் வேண்டும் ;
(3) விண்ணப்பதாரர் வலல்லாவிட பிரதேச சபை எல்லைக்குள் குறைந்தது 5 வருடம் நிரந்தர வதிவாளராக இருத்தல் வேண்டும் ;
(4) நன்நடத்தையுடையவராகவும் சிறந்த உடல் நலம் உடையவராகவும் இருத்தல் வேண்டும் ;
(5) குற்றவியல் சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றத்தினால் குற்றவாளியாகி தண்டனை பெற்றவராக இருத்தல் கூடாது ;
(6) அரச/மாகாண சபை அல்லது கூட்டுத்தாபன சேவையில் விலக்கியவராக அல்லது அரச சுற்று நிரூபம் 44/90 கீழ் ஓய்வூதியம் பெற்றவராக இருத்தல் கூடாது ;
(7) வலல்லாவிட பிரதேச சபை அலுவலகத்தில் தற்போது பிரதியீட்டு ஒப்பந்தம் அடிப்படையில் வேலை செய்யும் சேவையாளர்களுக்கு விசேட வாய்ப்பு வழங்கப்படும் ;
(8) விண்ணப்பதாரிகள் பதவிகளுக்கு முன் குறிப்பிட்டுள்ள குறைந்த கல்வித்தகைமையை பெற்றிருத்தல் வேண்டும்.

**3. சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனை:-**

(1) இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதிய கொடுப்பனவிற்கு உரிமை உண்டு ;
(2) விதவைகள், அநாதைகள்/தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத்திட்டத்திற்கு பங்களிப்பு நிதி செலுத்துவதற்கு தாங்கள் கட்டுப்பட்டிருத்தல் வேண்டும் ;
(3) இவ் ஆட்சேர்ப்பின் நிபந்தனைகள், சட்டதிட்டங்களுக்கு புறம்பாக, தாபன விதிக் கோவையின் கீழ் விதிக்கப்படும் உத்தரவுகள், நிதிக் கோவை, அரச திணைக்கள கட்டளைகள் மற்றும் மேல் மாகாண சபை/மேல் மாகாண அரச சேவை ஆணைக்குழு / வலல்லாவிட பிரதேச சபையினால் காலத்துக்கு காலம் விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கும் உத்தரவுகளுக்கும் இசைவாக சேவையாற்ற தாங்கள் உடன்பட வேண்டும்.

**4. விண்ணப்பிக்க வேண்டிய முறை.**- (1) இவ்வறிவித்தலில் உள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தின் படி (12" × 8" அளவிலான) விண்ணப்பப்படிவம் தயார் செய்து விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்ட கடித உறையில் இடது பக்கத்தில் எழுதி 2013.04.30 ஆந் திகதிக்கு முன் செயலாளர் வலல்லாவிட பிரதேச சபை, மீகாதென்ன என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கவும்.

(தற்போது மாகாண அரச சேவையில் சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் தனது விண்ணப்பப்படிவத்தை நிறுவன தலைவர் மூலம் அனுப்பி வைக்கவும்) குறித்த தினத்திற்கு பிறகு கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்களும் முழுமையற்ற விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும்.

(2) விண்ணப்பப்படிவத்தோடு பின்வரும் சான்றிதழ்களின் நிழல் பிரதிகளை இணைக்க வேண்டும், அத்தோடு மூலப்பிரதிகளை நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிக்க வேண்டும் :-

* பிறப்புச் சான்றிதழ் ;
* கல்விச் சான்றிதழ் ;
* தனது வதிவிடத்தை உறுதிப்படுத்த பிரதேச செயலாளரின் கையொப்பமிடப்பட்ட கிராம சேவையாளர் சான்றிதழ் ;
* சமீபத்தில் பெற்றுக்கொண்ட நன்நடத்தை சான்றிதழ் இரண்டு (ஒன்று கிராம சேவகரிடம் பெற்றுகொள்ள வேண்டும்) ;
* தொழில் அல்லது அனுபவம் தொடர்பான சான்றிதழ் இருக்குமாயின் இச்சான்றிதழ் (அரச/மாகாண சபை) ;
* சேவையில் உள்ளவர்கள் தனது விண்ணப்பப்படிவத்தை நிறுவன தலைவர் மூலம் அனுப்பி வைக்கவும்.

(3) குறித்த தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(5) **ஆட்சேர்க்கும் முறை.**-

(1) விண்ணப்பதாரிகளினுள் குறிப்பிட்ட தகைமையை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் பட்டியலிடப்பட்டு நேர்முகப் பரீட்சைக்கு உள்வாங்கப்பட்டு, வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

(2) விண்ணப்பப்படிவம் கோரப்பட்ட பின்னர் அல்லது கோரப்படுகின்றபோது அல்லது ஆட்சேர்த்தலை தாமதப்படுத்தல் அல்லது மாற்றம் செய்தல் அல்லது நிராகரிக்கும் அனைத்து அதிகாரமும் பிரதேச செயலாளருக்கு உரித்தாகும்.

எம். எச். இந்திரா காந்தி,
செயலாளர்,
வலல்லாவிட பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
வலல்லாவிட,
2013, பெப்புருவரி 20.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வலல்லாவிட பிரதேச சபை**

மேல் மாகாண அரச சேவையின் .......................... பதவி

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
   (ஆ) முதலெழுத்தில் குறிப்பிடும் பெயர் :-----.
2. (i) நிரந்தர விலாசம் :-----.
   (ii) நிரந்தரமாக வசிக்கும் மாவட்டம் :-----.
3. பிறந்த திகதி :-
   2013.02.08 ஆந் திகதிக்கு வயது :- வருடம் :-----, மாதம் :-----, திகதி :-----.
4. ஆணா/பெண்ணா :-----.
5. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.
6. நீர் இலங்கைப் பிரசையா? அவ்வாறாயின் பிரஜா உரிமை (பரம்பரையா ? அல்லது பதிவு செய்தா ? என்று குறிப்பிடுக.) :-----.
7. கல்வித் தகைமை :- (சித்தியடைந்த பரீட்சை தொடர்பான விபரம்) :-
   1. சித்தியடைந்த ஆண்டு/தரம் :-----.
   2. க. பொ. த. (சா/த) பரீட்சை :-
      சுட்டெண் :-----. பரீட்சையின் ஆண்டு மாதம் :-----.

| பாடம் | சித்தி |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

க. பொ. த. (சா/த)

| பாடம் | சித்தி |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

க. பொ. த. (உ/த)

8. நீர் தற்போது பிரதேச சபையில் பணி புரிபவராயின் அச்சேவைக் காலமும் விபரமும் :-----.
9. அனுபவமும் தொழில் தகைமையும் :-----.
10. நீர் என்றாவது குற்றச்சாட்டுக்காக நீதிமன்றத்தில் குற்றவாளியாகி உள்ளீரா? :-----.

இந்த விண்ணப்பப் படிவத்தில் என்னால் சமர்ப்பிக்கப்படும் தகவல்கள் உண்மையானதும், சரியானதும் என்பதனை உறுதிப்படுத்துகின்றேன். இதனுள் அடங்கும் தகவல்கள் பொய்யானதாக இருப்பின் இப்பதவிக்கு தெரிவுசெய்யப்படுவதற்கு முன் தெரிய வந்தால் நான் தகுதியற்றவனாவதோடு, தெரிவு செய்த பின் அறிந்து கொண்டால் எந்தவொரு கொடுப்பனவும் வழங்காமல் பணியில் இருந்து இடை நிறுத்த முடியும் என்பதனை அறிவேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

**தற்போது அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்காக நிறுவன தலைவரின் சான்றிதழ்**

இந்த விண்ணப்பதாரியாகிய திரு./திருமதி/செல்வி ..................... தற்போது இத்திணைக்களத்தில்/நிறுவனத்தில் .................... பணிபுரிகின்றார். அவர் எவ்விதத்திலும் ஒழுக்காற்று தண்டனைக்கு (அறிவுறுத்தலைத் தவிர) உட்படவில்லை என்பதனை உறுதிப்படுத்துவதோடு விண்ணப்பப்படிவத்தை சான்றுப்படுத்தி சமர்ப்பிக்கின்றேன்.

-------,
நிறுவன தலைவரின் கையொப்பம்.

பெயர் :-----.
பதவிப்பெயர் :-----.
திணைக்களம்/நிறுவனம் :-----.
திகதி :-----.

4-331

---

**குருநாகல் பிரதேச சபை**

ஆரம்ப தரத்தில் தேர்ச்சி பெறாத, பகுதி தேர்ச்சி பெற்றதும் தேர்ச்சி பெற்ற பதவிக்காக ஆட்சேர்த்தல்

குருநாகல் பிரதேச சபையின் வெற்றிடமாகியுள்ள கீழ் காணப்படுகின்ற உப அட்டவணையில் காணப்படும் பதவிகளுக்கு சேர்த்துக்கொள்வதற்காக இந்த உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளை உடைய குருநாகல் பிரதேசசபை அதிகாரப் பிரிவிற்குள் நிரந்தரமாக வசிக்கின்றவர்களிடத்திலிருந்து விண்ணப்பப்படிவம் கோரப்படுகின்றது.

| தொ. இல. | பதவி | சேர்க்கப் படும் தரம் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள திட்டம் மாதாந்த (பொ.நி. சு 06/2006iv) இற்கமைய | கல்வித்தகைமை |
|---|---|---|---|---|---|
| 01 | சுகாதார தொழிலாளி | ஆரம்ப தரத்தில் தேர்ச்சி பெறாத III | 07 | ரூ.11,730-10×120-10×130-10×145-12×160-17,600/- (PL1 2006A) | 1. அரசினால் அனுமதிக்கப்பட்ட பாடசாலையில் 8 ஆம் தரம் சித்தியடைந்திருத்தல்.<br>2. இந்த செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் தினம் தொடக்கம் ஆரம்ப தரத்தில் தேர்ச்சி அற்ற பதவிக்காக அமய, தற்காலிக, ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட சேவையாளர்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட முறையில் அச்சந்தர்ப்பத்தில் காணப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தில் காணப்பட்ட கல்வித்தகைமை உரித்தாகும். |

| தொ. இல. | பதவி | சேர்க்கப் படும் தரம் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள திட்டம் மாதாந்த (பொ.நி. சு 06/2006iv) இற்கமைய | கல்வித்தகைமை |
|---|---|---|---|---|---|
| 02 | வேலைத் தொழிலாளி | ஆரம்ப தரத்தில் தேர்ச்சி பெறாத III | 13 | ரூ.11,730- 10×120- 10×130- 10×145- 12×160- 17,600/- (PL1 2006A) | 1. கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சையில் இரண்டு பாடங்களேனும் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (தெரிவுப்பாடம் அல்லாத).<br><br>2. இந்த செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் தினம் தொடக்கம் ஆரம்ப தரத்தில் தேர்ச்சி அற்ற பதவிக்காக அமைய, தற்காலிக, ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க் கப்பட்ட சேவையாளர்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட முறையில் அச்சந்தர்ப்பத்தில் காணப்பட்ட, ஆட்சேர்ப்புத் திட்டத்தில் கல்வித் தகைமை உரித்தாகும். |
| 03 | காவற் காரர் | ஆரம்ப தரத்தில் தேர்ச்சி பெறாத III | 01 | ரூ.11,730- 10×120- 10×130- 10×145- 12×160- 17,600/- (PL1 2006A) | 1. கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சையில் இரண்டு பாடங்களேனும் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (தெரிவுப்பாடம் அல்லாத).<br><br>2. இந்த செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் தினம் தொடக்கம் ஆரம்ப தரத்தில் தேர்ச்சி அற்ற பதவிக்காக அமைய, தற்காலிக, ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட சேவையாளர்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட முறையில் அச்சந்தர்ப்பத்தில் காணப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டத்தில் காணப்பட்ட கல்வித் தகைமை உரித்தாகும். |
| 04 | மின்சார தொழில் நுட்பவிய லாளர் | ஆரம்ப தரத்தில் தேர்ச்சி பெற்ற III | 02 | ரூ.12,210- 10×130- 10×145- 10×160- 12×170- 18,600/- (PL2 2006A) | 1. (அ) **வெளி விண்ணப்பதாரிகள் :**<br>கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சையில் இரண்டு பாடங்களேனும் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (தெரிவுப்பாடம் அல்லாத).<br>(ஆ) **உள்வாரி விண்ணப்பதாரிகள் :**<br>(1) மாகாண அரச சேவையில் உரிய நிறுவனத்தில் நிரந்தர பதவியில் சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்காக அரசினால் அனுமதிக்கப்பட்ட பாடசாலையில் 8 ஆம் தரம் (9 ஆம் வருடம்) சித்தியடைந்திருத்தல்.<br><br>(2) இந்த செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் தினம் தொடக்கம் ஆரம்ப தரத்தில் தேர்ச்சி அற்ற பதவிக்காக அமைய, தற்காலிக, ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப் பட்ட சேவையாளர்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட முறையில் அச்சந்தர்ப்பத்தில் காணப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டத்தில் காணப்பட்ட கல்வித் தகைமை உரித்தாகும்.<br><br>தற்போது குருநாகல் பிரதேச சபையில் நிரந்தர சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் அரசினால் அனுமதிக்கப்பட்ட பாடசாலையில் 8 ஆம் தரத்தில் (9 ஆம் வகுப்பு) சித்தியடைந்திருத்தல் வேண்டும். |

| தொ. இல. | பதவி | சேர்க்கப் படும் தரம் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள திட்டம் மாதாந்த (பொ.நி. சு 06/ 2006iv) இற்கமைய | கல்வித்தகைமை |
|---|---|---|---|---|---|
| | | | | | (இ) அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப பாடசாலையில் அல்லது தொழிற்பயிற்சி நிறுவனத்தில் அல்லது இரண்டாம் நிலை நிறுவனத்தில் மின்சார தொழில்நுட்பம் பற்றிய பயிற்சி சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>தொழில்நுட்ப திறமை- பதவிக்குரிய தொழில் பயிற்சி நிறுவனத்தினால் வெளியிடப்படும் N. V. Q. 4 தரத்தில் சான்றிதழ் பெற்றிருத்தல்.<br><br>**அனுபவம்**.- பதவிக்கு உரிய துறையில் அரச நிறுவனத்தில் அல்லது வேறு ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தில் இரண்டு வருடம் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் சேவை செய்திருத்தல். (சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்) |
| 05. | சுகாதார தொழிலாளி பரிபாலகர் | ஆரம்ப தரத்தில் தேர்ச்சி பெறாத III | 01 | ரூ.11,730- 10×120- 10×130- 10×145- 12×160- 17,600/- (PL1 2006A) | 1. (அ) வெளி விண்ணப்பதாரிகள் :<br>கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சையில் இரண்டு பாடங்களேனும் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (தெரிவுப்பாடம் அல்லாத).<br><br>2. இந்த செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் தினம் தொடக்கம் ஆரம்ப தரத்தில் தேர்ச்சி அற்ற பதவிக்காக அமைய, தற்காலிக, ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க் கப்பட்ட சேவையாளர்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட முறையில் அச்சந்தர்ப்பத்தில் காணப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டத்தில் காணப்பட்ட கல்வித் தகைமை உரித்தாகும். |
| 06. | வேலை நிருவா கத்தர் | பகுதி தேர்ச்சி பெற்ற III | 01 | ரூ. 12,210- 10×130- 10×145- 10×170- 18,600/- (PL1 2006A) | 1. (அ) **வெளி விண்ணப்பதாரிகள்** :<br>கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சையில் இரண்டு பாடங்களேனும் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (தெரிவுப்பாடம் அல்லாத).<br><br>2. தற்போது குருநாகல் பிரதேச சபையில் நிரந்தர சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் அரசினால் அனுமதிக்கப் பட்ட பாடசாலையில் 8 ஆம் தரத்தில் (9 ஆம் வகுப்பு) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br><br>இந்த செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் தினம் தொடக்கம் ஆரம்ப தரத்தில் தேர்ச்சி அற்ற பதவிக்காக அமைய, தற்காலிக, ஒப்பந்த அடிப்படையில் ஆட் சேர்க்கப்பட்ட சேவையாளர்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட முறையில் அச்சந்தர்ப்பத்தில் காணப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டத்தில் காணப்பட்ட கல்வித் தகைமை உரித்தாகும். |

| தொ. இல. | பதவி | சேர்க்கப் படும் தரம் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள திட்டம் மாதாந்த (பொ.நி. சு 06/2006iv) இற்கமைய | கல்வித்தகைமை |
|---|---|---|---|---|---|
| | | | | | தொழில்நுட்ப/தொழில்பயிற்சி நிறுவனத்தினால் வெளியிடப்படும் N. V. Q 2 அல்லது 3 தரத்தில் சான்றிதழ் பெற்றிருத்தல்.<br><br>**அனுபவம்**.- பதவிக்கு உரிய துறையில் அரச நிறுவனத்தில் அல்லது வேறு ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தில் இரண்டு வருடம் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் சேவை செய்திருத்தல். (சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்) |
| 07. | அலுவலக அலுவல் உதவியாளர்கள் | ஆரம்ப தரத்தில் தேர்ச்சி அற்ற III | 02 | ரூ. 11,730- 10×120- 10×130- 10×145- 12×160- ரூ. 17,600/- (PL1 2006A) | கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சையில் இரண்டு பாடங்களேனும் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (தெரிவுப்பாடம் அல்லாத)<br><br>இந்த செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் தினம் தொடக்கம் ஆரம்ப தரத்தில் தேர்ச்சி அற்ற பதவிக்காக அமைய, தற்காலிக, ஒப்பந்த அடிப்படையில் ஆட் சேர்க்கப்பட்ட சேவையாளர்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட முறையில் அச்சந்தர்ப்பத்தில் காணப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டத்தில் காணப்பட்ட கல்வித் தகைமை உரித்தாகும். |
| 08. | சாரதி | தேர்ச்சி பெற்ற III | 04 | ரூ. 12,470- 10×130- 10×145- 10×160- 12×170- ரூ. 18,860/- (PL3 2006A) | 1. **வெளி விண்ணப்பதாரிகள்** :<br>கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சையில் இரண்டு முறைகளுக்கு மேற்படாமல் இரண்டு விடயங்களுக்கு விஷேட சித்தியும் விடயம் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (தெரிவுப்பாடம் அல்லாத) குறைந்தபட்சம் ஒரே முறையில் விடயம் 05 இல் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br><br>2. தற்போது குருநாகல் பிரதேச சபையில் நிரந்தர சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் அரசினால் அனுமதிக்கப்பட்ட பாடசாலையில் 8 ஆம் தரத்தில் (9 ஆம் வகுப்பு) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br><br>இந்த செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் தினம் தொடக்கம் ஆரம்ப தரத்தில் தேர்ச்சி அற்ற பதவிக்காக அமைய, தற்காலிக, ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட சேவையாளர்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட முறையில் அச்சந்தர்ப்பத்தில் காணப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டத்தில் காணப்பட்ட கல்வித்தகைமை உரித்தாகும்.<br><br>தொழிற் திறமை.- பொதியில்லாத எடை ஹொன்டர் 34 இற்கு அதிக மோட்டார் முற்பகுதியும் பார ரேலர் மூலம் |

| தொ. இல. | பதவி | சேர்க்கப் படும் தரம் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள திட்டம் மாதாந்த (பொ.நி. சு 06/2006iv) இற்கமைய | கல்வித்தகைமை |
|---|---|---|---|---|---|
| | | | | | 32 பேருக்கு அதிகமான பயணிகளை கொண்டு செல்லக்கூடிய பஸ் வண்டியை செலுத்துவதற்கு மோட்டார் வாகன ஆணையாளரினால் வழங்கப்பட்ட தகுதி பற்றிய சான்றிழ் பெற்றிருத்தல் வேண்டும். (A தர சாரதி அத்தாட்சிப்பத்திரம்)<br><br>**அனுபவம்**.- வாகன சாரதியாக 3 வருட கால அனுபவம் இருத்தல் வேண்டும். (சேவை சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்) |

**2. தேவையான வேறு தகுதிகள் :-**

(i) விண்ணப்பதாரி இலங்கை குடியுரிமையுள்ளவராக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரி விண்ணப்பப்படிவம் பொறுப்பேற்கும் கடைசித் திகதிக்கு 3 வருடங்களுக்குக் குறையாத காலத்தினுள் குருநாகல் அதிகாப்பிரதேசத்தினுள் நிரந்தர வதியுனராக இருத்தல் வேண்டும். (பதிவினை கிராம அலுவலரினால் வெளியிடப்படும் சான்றிதழ் மூலம் உரிய பிரதேச செயலாளரினால் பிரதி கையொப்பமிட்டு சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.)

(iii) விண்ணப்பப்படிவம் ஏற்கப்படும் கடைசித் திகதிக்கு வயது 18 இற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தர சேவையாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.) நல்லொழுக்கமும் ஆரோக்கியமாகவுள்ளவராக இருத்தல் வேண்டும்.

(iv) குருநாகல் பிரதேச சபையில் தற்போது அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட சேவையாளர்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட வகையில் வயதெல்லை கவனத்தில் எடுக்கப்படமாட்டாது.

(v) நல்லொழுக்கமும் ஆரோக்கியமாகவுள்ளவராகவும் இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் தண்டனைக்குரிய சட்டப்படி நீதிமன்றத்தினால் குற்றவாளியாகி தண்டனை பெற்றவராக இருத்தலாகாது.

(vi) தற்போது அரச மற்றும் மாகாண அரச சேவையில் உள்ளவராயின் அவர் விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்கு 5 வருடங்களுள் ஏதேனும் குற்றங்களுக்குட்படாமல் 5 வருடங்களினுள் எல்லா சம்பள உயர்வுகளும் பெற்றிருத்தல் வேண்டும்.

(vii) ஆரம்ப தேர்ச்சி அற்ற மற்றும் பகுதி தேர்ச்சி, தேர்ச்சியுள்ள ஆட்சேர்ப்பு செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் தினமாகும் போது அந்த பதவிக்காக அமைய, தற்காலிக, ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட சேவையாளர்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட முறையில் அச்சந்தர்ப்பத்தில் காணப்பட்ட ஆட்சேர்ப்பு செயற்திட்டத்தின் கல்வித் தகைமை உரித்தாகும்.

(viii) பரவலாக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலம் தகுதியுடையோர் தேர்ந்தெடுக்கப்படுவர்.

**3. சேவையில் ஈடுபடுத்தப்படும் ஒப்பந்தம்** :

(I) இந்தப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உடையதுமாகும்.

(II) விதவைகள்/தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பு செய்தல் வேண்டும்.

(III) பதவி 3 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது.

(IV) இந்த ஆட்சேர்ப்பு ஒப்பந்தங்களுக்கு மேலதிகமாக அரச நிர்வாக ஒப்பந்தங்களுக்கும், உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் உரிய அதிகார சட்டம் /சட்டங்களுக்கு உடன்படிக்கைகளுக்கும், பொல்கஹவெல பிரதேச சபையினால் வெளியிடப்பட்ட கூற்றுகளுக்கு ஒத்ததாக நடவடிக்கை எடுப்பதற்கு உடன்படல் வேண்டும்.

**விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய ஆவணங்கள்**.- விண்ணப்பப்படிவத்துடன் கீழ் காணப்படும் சான்றிதழ்களின் பிரதி இணைக்கப்படல் வேண்டும். நேர்முகப் பரீட்சையின்போது முதல் பிரதியினை சமர்ப்பித்தல் வேண்டும்.

1. பிறப்புச் சான்றிதழ் ;
2. கல்விச் சான்றிதழ் ;
3. தங்களின் நிரந்தர பதிவினை உறுதிப்படுத்துவதற்காக பிரதேச செயலாளரின் சான்றிதழ் ;
4. மிக அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட நற்சான்றிதழ்கள் 2 உம் ( ஒன்று கிராம அலுவலரினால் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்).

அனுபவம் பற்றிய சான்றிதழ் (அரசில் அல்லது மாகாண அரச சேவையில் இருப்பவர்கள் விண்ணப்பங்களை உரிய நிறுவனத் தலைவர் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்) ஆரம்ப தகைமைகளை வழங்கியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்காக அழைப்பு விடுக்கப்படும்.

**விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முறை.**- எல்லா விண்ணப்பதாரிகளும் இங்கு கீழ் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின்படி விண்ணப்பப்படிவம் 2013.04.26 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக "செயலாளர், குருநாகல் பிரதேச சபை, மல்பிடிய, போயகனே" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் உரிய பதவியை குறிப்பிடல் வேண்டும்.

விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின் அல்லது ஏற்றுக்கொள்ளும் போது அல்லது இந்த சேர்த்துக்கொள்ளல் காலந்தாழ்த்தல் அல்லது வேறுபடுத்தல் அல்லது இந்த அறிவித்தலை தள்ளுபடி செய்தல் அல்லது திருத்தல் என்பவற்றிற்கு பூரண அதிகாரம் குருநாகல் பிரதேச சபை செயலாளரின் உரித்தானதாகும்.

ட. ட. விக்ரமசிங்ஹ,
செயலாளர்,
குருநாகல் பிரதேச சபை,

மல்பிடிய, போயகனே.
பிரதேச சபை,
குருநாகல்,
2013.03.25.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**குருநாகல் பிரதேச சபை**

தேர்ச்சி பெற்ற, பகுதி தேர்ச்சி உடைய, தேர்ச்சி அற்ற சேவையில் தரத்திலான
..................................................................பதவிக்காக ஆட்சேர்ப்பு

(1) விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :----.
(2) முதலெழுத்துக்களுடன் பெயர்:----.
(3) நிரந்தர முகவரி : ----.
(4) நிரந்தரமாக வசிக்கும் மாவட்டம்:----.
(5) பிறந்த திகதி -
ஆண்டு:----. மாதம்:----. திகதி:----.
(6) விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதிக்கு வயது
வருடங்கள்:----. மாதங்கள் :----. நாட்கள்:----.
(7) தேசிய ஆளடையாள அட்டையின் இலக்கம்:----.
(8) திருமணமானவர்/திருமணமாகாதவர் என்பது பற்றி :----.
(9) ஆண்/பெண்:----.
(10) நீங்கள் இலங்கைப் பிரசையா? அவ்வாறாயின் பரம்பரையாகவா? பதிவுமுறையிலா? :----.
(11) கல்வித் தகைமை- (சித்தியடைந்த பரீட்சை பற்றிய விபரம்) :----.
க. பொ. த. (சா/த.) பரீட்சை
வருடம் :----- பரீட்சை இலக்கம் :-----.

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

க. பொ. த. (உ/த.) பரீட்சை

வருடம் :----- பரீட்சை இலக்கம் :-----.

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| | | | |
| | | | |

(12) 1. வேறு கல்வித் தகைமை:----.

2. தொழிற் தகைமை :----.

3. சேவை அனுபவம் :----.

(i) தற்போது சேவை செய்யும் நிறுவனம் :-

(ii) தற்போது வகிக்கும் பதவி :-

(iii) அந்த பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :-

(iv) இதற்கு முன் சேவை செய்த இடமும் பதவியின் பெயரும் :-

(13) நீங்கள் எப்போதாவது நீதிமன்றத்தினால் குற்றவாளியாகி உள்ளீரா? :----.

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள், உண்மையானதும், பிழையற்றதும் என்றும் என்னால் உறுதிப்படுத்துகிறேன். இங்குள்ள தகவல்கள் உண்மையற்றதும், பிழையானதும் என்று இந்த பதவிக்கு தேர்ந்தெடுப்பதற்கு முன் தெரியவரின் நான் தகுதியற்றவர் என்றும், தேர்ந்தெடுக்கப்பட்ட பின் தெரியவரின் எவ்வித நட்டஈடும் இன்றி சேவையில் இருந்து விலக்கப்படுவேன் என்றும் நான் அறிவேன்.

------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**
**(தற்போது சேவையில் உள்ளவர்களுக்கு மாத்திரம்)**

திரு./திருமதி/செல்வி ............................................................................. இந்த நிறுவனத்தில் .......................................................... ஆக சேவையில் உள்ளார். இந்த பதவிக்காக தேர்ந்தெடுக்கப்படின் அவர் 05 வருடத்தினுள் எவ்வித தண்டனைகளுக்கும் உள்ளாகவில்லை என்று சான்றுப்படுத்துவதுடன் அவரினால் முன்வைக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தினை சிபாரிசு செய்கின்றேன்.

-------,
திணைக்கள/நிறுவனத்தலைவரின்
கையொப்பம்

திகதி :----.

4-340

## ஹம்பாந்தோட்டை மாநகர சபை

தென் மாகாண அரச சேவையிலான பதவிகள் வெற்றிடம்

ஹம்பாந்தோட்டை மாநகர சபையில் வெற்றிடங்களாகியுள்ள கீழ்வரும் பதவிகளுக்கு தகைமைகள் பெற்ற ஹம்பாந்தோட்டை மாநகர சபை எல்லைக்குள் நிரந்தர வதிவிடங்களைக் கொண்டோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

*(01)* **இலங்கை சாரதிகள் சேவை தரம்** III.-

| *தொடர் இலக்கம்* | *பதவிப் பெயர்* | *தரம்* | *வெற்றிடங்கள் தொகை* | *சம்பளத்திட்டம்* | *கல்வித்தகைமை* |
|---|---|---|---|---|---|
| 1 | சாரதி | III ஆரம்ப நிலையினர் | 07 | பீஎல்3-2006ஏ ரூ. 12,470-10×130-10×145-10×160-12×170-ரூ. 18,860 (நான்காம் சம்பள அளவுத் திட்டத்திற்கு முன் வினைத்திறன்காண் தடை.) | இரு அமர்வுகளுக்கான மேற்படாத க. பொ. த. (சா.த.) பரீட்சையில் ஏதேனும் 6 பாடங்களில் சித்தியடைந் திருத்தல் வேண்டும். |

**வேறு தகைமைகள்**.- வெற்றிடங்கள் இருக்கும் வாகன பிரிவின் கீழ், சாரதி வெற்றிடங்களின் தன்மைக்கேற்ப வாகனங்கள் செலுத்துவதில் மோட்டார் வாகன ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரமும் நிபுணத்துவம் பற்றிய சான்றிதழும் கிடைக்கப் பெற்றிருத்தல் வேண்டும். உடன் சாரதி அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெற்றதன் பின் 03 வருட அனுபவம் இருத்தல் வேண்டும். (அனுபவம் பற்றிய சான்றிதழ் இணைக்கப்படல் வேண்டும்)

**சேவைக்கு இணைத்துக் கொள்ளப்படும் விதிகள்**.- (i) அரச வர்த்தமானியில் பகிரங்க அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு, விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின், முறையான நேர்முகப் பரீட்சையொன்றும், தொழில்சார் திறமைகள் பரீட்சிக்கப்பட்ட பின் அதன் பெறுபேற்று அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்படுவர்.

(ii) மேற்படி சேவைத் துறைக்கான அனைத்து நியமனங்கள். சேவைக்கு இணைத்துக் கொள்ளப்படல் தென்மாகாண அரச சேவையில் உள்ளூராட்சித் திணைக்கள நிறுவன மோட்டார் வாகன சாரதிகள் சம்பந்தமான சாரதிகள் சேவை சட்டக் கோவையின் விதிமுறைகளுக்கு அமைவானதாக மாத்திரமே அமைய வேண்டும்.

(iii) உரிய தகைமைகளை நிறைவு செய்துள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

**விசேட குறிப்பு**.- தற்போதைக்கு ஹம்பாந்தோட்டை மாநகர சபைக்குள் சமயாசமய/தற்காலிக/கொந்தராத்து அடிப்படையில் சேவையிலிருக்கின்ற. தொடர்ந்தேர்ச்சியாக 03 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள் விடயத்தில் அதிக முன்னுரிமை வழங்கப்படும். (இது பண்பொழுக்க நடவடிக்கை கோப்பு மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.)

**சேவையில் இணைத்துக்கொள்ளப்படுவதற்கான பொது நிபந்தனைகள்** :

(i) விண்ணப்பதாரி இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(ii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அணித்தாக முன்புள்ள 03 வருடங்களாக ஹம்பாந்தோட்டை மாநகரசபை எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும். (தேர்தல் இடாப்பின் மூலமாகவோ, பிரதேச செயலாளர் வழங்கிய சான்றிதழ் மூலமாகவோ வதிவிடத்தை உறுதிப்படுத்தல் வேண்டும்.) ;
(iii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது 18 முதல் 45 வருடங்களுக்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். (அரச அல்லது மாகாண அரச சேவையிலிருக்கும் ஊழியர்களுக்கு உச்ச வயதெல்லை பாதிப்பை ஏற்படுத்தமாட்டாது);
(iv) குற்றவியல் கோவைத் தண்டனைச் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தினால் குற்றம் சுமத்தப்பட்டு தண்டனை வழங்கப்படாதவராக இருத்தல் வேண்டும் ;

(v) சிறந்த பண்பொழுக்கமும், ஆரோக்கியமான உடல் நிலை கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்படுமிடத்து ஒரு மாத காலத்திற்குள் அரச வைத்தியதிகாரி ஒருவரினால் நடாத்தப்படும் வைத்தியப் பரிசோதனைக்கு உள்ளாக்கப்படுவதுடன், அதில் உடல் ரீதியான தகைமைகளைப் பூர்த்தி செய்யத் தவறுமிடத்து நியமனம் இரத்துச் செய்யப்படும் ;

(vi) விண்ணப்பதாரி அந்தப் பதவிக்கான குறைந்தபட்ச தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

*3.* **சேவையில் இருத்தப்படுவோர் நிபந்தனைகள்** :

(i) மேற்படி பதவி நிரந்தரமானது ஓய்வூதியத்துடன் கூடியது. சேர்த்துக்கொள்ளப்படுவோர் விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு அங்கத்தவர் பணத்தைச் செலுத்துதல் வேண்டும் ;

(ii) நிரந்தர நியமனம் 03 வருட தகுதிகாண் காலத்தைக் கொண்டது ;

(iii) இதற்கு மேலதிகமாக தாபனக் கோவையின் சட்டதிட்டங்களுக்கும், தென் மாகாண சபையின் மூலம் இடைக்கிடை பிறப்பிக்கப்படும் கட்டளைகளுக்கும், தென்மாகாண ஆளுநரின் விதந்துரைப்புகளுக்கேற்பவும் தென் மாகாண அரச சேவை ஆணைக்குழு அவ்வப்போது செயற்படுத்தும் வேறு கட்டளைகளுக்கும். உள்ளூராட்சி ஆணையாளர் உட்பட உள்ளூராட்சி நிறுவனத் தலைவர்களின் கட்டளைகளுக்கும் ஏற்ப செயற்படுவதற்கு அனைத்து ஊழியர்களும் கட்டுப்பட்டவராவர்.

*(02)* **அலுவலக சேவையாளர் சேவையின் II ஆம், III ஆம் தரங்கள்** :

| தொடர் இலக்கம் | பதவிப் பெயர் | தரம் | வெற்றிடங்கள் தொகை | சம்பளத்திட்டம் | கல்வித்தகைமை |
|---|---|---|---|---|---|
| 2 | அலுவலக சேவை உதவியாளர் II | II ஆம் தரம் துறை சாராத | 04 | பீஎல்1-2006ஏ ரூ. 11,730- 10×120- 10×130- 10×145- 12×160- ரூ. 17,600 | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஒரே தடவையில் 2 திறமைச் சித்திகளுடன் மொத்தம் 6 பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும். |
| 3 | வீதித் தொழிலாளி | III ஆம் தரம் துறை சாராத | 16 | பீஎல்1-2006ஏ ரூ. 11,730- 10×120- 10×130- 10×145- 12×160- ரூ. 17,600 | 9 ஆம் ஆண்டு சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| 4 | சுகாதாரத் தொழிலாளி | III ஆம் தரம் துறை சாராத | 25 | பீஎல்1-2006ஏ ரூ. 11,730- 10×120- 10×130- 10×145- 12×160- ரூ. 17,600 | 9 ஆம் ஆண்டு சித்தியடைந்திருத்தல் வேண்டும். |

*(03)* **தரப்படுத்தப்படாத பதவிகள்** :

| தொடர் இலக்கம் | பதவிப் பெயர் | தரம் | வெற்றிடங்கள் தொகை | சம்பளத்திட்டம் | கல்வித்தகைமை |
|---|---|---|---|---|---|
| 5 | இயந்திர இயக்குனர் | III ஆம் தரம் ஆரம்ப அரை தொழில்நுட்ப | 1 | பீஎல்2-2006ஏ ரூ. 12,210- 10×130- 10×145- 10×160- 12×170- ரூ. 18,600 | 9 ஆம் ஆண்டு சித்தியடைந்திருத்தல் வேண்டும். |

| தொடர் இலக்கம் | பதவிப் பெயர் | தரம் | வெற்றிடங்கள் தொகை | சம்பளத்திட்டம் | கல்வித்தகைமை |
|---|---|---|---|---|---|
| 6 | மின்சார தொழிலாளி | III ஆம் தரம் ஆரம்ப அரை தொழில்நுட்ப | 01 | பீஎல் 2-2006ஏ ரூ. 12,210- 10×130- 10×145- 10×160- 12×170- ரூ. 18,600 | 9 ஆம் ஆண்டு சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| 7 | தளபாட தொழிலாளி | III ஆம் தரம் ஆரம்ப அரை தொழில்நுட்ப | 01 | பீஎல் 2-2006ஏ ரூ. 12,210- 10×130- 10×145- 10×160- 12×170- ரூ. 18,600 | 9 ஆம் ஆண்டு சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| 8 | விளையாட்டுத் திடல் பொறுப்பாளர் | III ஆம் தரம் ஆரம்ப தொழில் நுட்பமற்ற | 01 | பீஎல் 1-2006ஏ ரூ. 11,730- 10×120- 10×130- 10×145- 12×160- ரூ. 17,600 | 9 ஆம் ஆண்டு சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| 9 | மரம் தரிப்பவர் | III ஆம் தரம் ஆரம்ப தொழில் நுட்பமற்ற | 01 | பீஎல் 1-2006ஏ ரூ. 11,730- 10×120- 10×130- 10×145- 12×160- ரூ. 17,600 | 9 ஆம் ஆண்டு சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| 10 | மாடறுப்பகப் பொறுப் பாளர் | III ஆம் தரம் ஆரம்ப தொழில் நுட்பமற்ற | 01 | பீஎல் 1-2006ஏ ரூ. 11,730- 10×120- 10×130- 10×145- 12×160- ரூ. 17,600 | 9 ஆம் ஆண்டு சித்தியடைந்திருத்தல் வேண்டும். |

**வேறு தகைமைகள்**.- (i) மேலே (03) ஆம் இலக்க பகுதி நேர துறைசார் பதவிகளாகிய இயந்திர இயக்குனர், மின்சாரத் தொழிலாளி, தச்சுத் தொழிலாளி ஆகிய பதவிகளுக்காக (பீஎல்2-2006ஏ) பதவிக்குரித்தான தொழில் பயிற்சி அதிகார சபை மூலம் வழங்கப்பட்ட தொழில் பயிற்சி சம்பந்தமான என்வீகிவ் 1, என்வீகிவ் 2 அல்லது 3 ஆம் தர திறமைச் சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும். அவ்வாறில்லை எனில் அதற்குச் சமனான அரச அங்கீகாரம் பெற்ற தொழில் சான்றிதழ் ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.

(ii) மேலே (03) ஆம் இலக்க பகுதி நேர துறைசார் பதவிகளுக்கு, அந்தப்பதவி சம்பந்தமான துறையில் அரச நிறுவனமொன்றில்/அரச கூட்டுத்தாபனமொன்றில் அல்லது கட்டளையியல் நிறுவனமொன்றில் அல்லது அரச அங்கீகாரம் பெற்ற வேறு நிறுவனமொன்றின் கீழ் இரண்டு வருடங்களுக்கு மேல் சேவை செய்திருக்க வேண்டும். (சான்றிதழ்கள் மூலம் உறுதிசெய்யப்படல் வேண்டும்.)

**சேவைக்கு இணைத்துக்கொள்ளப்படும் முறை**.- (1) நேர்முகப் பரீட்சை மூலம் தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

(2) குறிப்பிடப்பட்ட தகுதிகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

**விசேட குறிப்பு**.- மேலே குறிப்பிடப்பட்ட இலக்கம் 2 - 10 வரையான பதவிகளில் தற்போதைக்கு சமயாசமய/தற்காலிக/கொந்தராத்து அடிப்படையில் ஹம்பாந்தோட்டை மாநகர சபையில் சேவையிலிருக்கின்ற சிறந்த சேவைக் காலத்துடனான விண்ணப்பதாரிகள் விடயத்தில் அதிக முன்னுரிமை வழங்கப்படும். (சிறந்த சேவைக் காலத்தை நிறுவனத்தின் சேவைச் சான்றிதழ் மூலம் நிரூபிக்க வேண்டும்.)

**சேவையில் இணைத்துக்கொள்ளப்படுவதற்கான பொது நிபந்தனைகள் :**

(i) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது 18 இற்கு குயைாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரிகள் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(iii) சிறந்த பண்பொழுக்கமும், ஆரோக்கியமான உடல் நிலை கொண்டவராகவும் இருத்தல் வேண்டும் ;

(iv) குற்றவியல் கோவைத் தண்டனைச் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தினால் குற்றம் சுமத்தப்பட்டு தண்டனை வழங்கப்படாதவராக இருத்தல் வேண்டும் ;

(v) ஹம்பாந்தோட்டை மாநகர சபை அதிகார எல்லைக்குள், குறைந்தது 3 வருட கால நிரந்தர வதிவிடத்தை உறுதிப்படுத்தியிருக்க வேண்டும். (அவ்வாறு நிரந்தர வதிவிடத்தை உறுதிப்படுத்த முடியாத விண்ணப்பதாரிகள் தேவையான தொகையினராக இல்லாத பட்சத்தில் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தினுள் அமைந்துள்ள கிட்டிய உள்ளூராட்சி நிறுவன அதிகார எல்லைக்குட்பட்ட விண்ணப்பதாரிகள் பற்றிக் கவனத்தில் கொள்ளப்படும் ;

(vi) விண்ணப்பங்கள் கோரப்படுவதன் மூலம் அல்லது விண்ணப்பங்கள் கோரப்படும் கால எல்லைக்குள் அல்லது மேற்படி ஆட்சேர்ப்பை பிற்படுத்துவதற்கு அல்லது இந்த அறிவித்தலை இரத்துச் செய்வதற்கு அல்லது மாற்றங்கள் செய்வதற்கு ஹம்பாந்தோட்டை மாநகரசபை ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு.

*3.* **சேவையில் இருத்தப்படுவோர் நிபந்தனைகள் :**

(i) இலக்கம் 2-10 வரையிலான அனைத்து பதவிகளும் நிரந்தரமானது, ஓய்வூதியத்துடன் கூடியது. சேர்த்துக்கொள்ளப்படுவோர் விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு அங்கத்தவர் பணத்தைச் செலுத்துதல் வேண்டும் ;

(ii) நிரந்தர நியமனம் 03 வருட தகுதிகாண் காலத்தைக் கொண்டது ;

(iii) இதற்கு மேலதிகமாக தாபனக் கோவையின் சட்டதிட்டங்களுக்கும். தென் மாகாண சபையின் மூலம் இடைக்கிடை பிறப்பிக்கப்படும் கட்டளைகளுக்கும், தென்மாகாண ஆளுநரின் விதந்துரைப்புகளுக்கேற்பவும் தென் மாகாண அரச சேவை ஆணைக்குழு அவ்வப்போது செயற்படுத்தும் வேறு கட்டளைகளுக்கும், உள்ளூராட்சி ஆணையாளர் உட்பட உள்ளூராட்சி நிறுவனத் தலைவர்களின் கட்டளைகளுக்கும் ஏற்ப செயற்படுவதற்கு அனைத்து ஊழியர்களும் கட்டுப்பட்டவராவர்.

***விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டிய முறை.***- மேற்படி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறான மாதிரி விண்ணப்பப்படிவங்கள் போன்று தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2013.05.03 ஆந் திகதி அல்லது அத்தினத்திற்கு முன் கிடைக்கக்கூடியவாறு - ''மாநகர ஆணையாளர், ஹம்பாந்தோட்டை மாநகர சபை, ஹம்பாந்தோட்டை '' என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில், விண்ணப்பிக்கின்ற பதவியை குறிப்பிடல் வேண்டும். (தற்போது மாகாண அரச சேவையில் இருக்கின்ற விண்ணப்பதாரிகள் தான் தொழில் புரியும் நிறுவனத்தின் தலைவர் மூலம் அனுப்ப வேண்டும். விண்ணப்பங்கள் ஏ4 அளவான காகிதங்களில் தயாரிக்கப்பட்டு விண்ணப்பிக்கப்பட வேண்டும்.) பூர்த்தி செய்யப்படாத, தெளிவற்ற அல்லது குறித்த திகதியில் கிடைக்கப்பெறாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

விண்ணப்பப்படிவத்துடன் கீழ்வரும் ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் இணைத்து அனுப்பி வைக்கப்படல் வேண்டும் :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழ் ;

(இ) கல்விச் சான்றிதழ் ;

(ஈ) வதிவிடச் சான்றிதழ் (பிரதேச செயலகம் மூலம் உறுதி செய்யப்படல் வேண்டும்) ;

(உ) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட கிராம சேவையாளர் சான்றிதழ் ;

(ஊ) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட 02 நன்னடத்தைச் சான்றிதழ்கள் ;

(எ) வேறு தகைமைச் சான்றிதழ்கள் ;

(ஏ) சேவை அனுபவம் பற்றிய சான்றிதழ்கள் ;

(ஐ) சாரதிக்கான வாகனங்கள் செலுத்துவதற்கான சாரதி அனுமதிப்பத்திரத்தின் பிரதியொன்று.

நகர ஆணையாளர்,
ஹம்பாந்தோட்டை மாநகர சபை,
ஹம்பாந்தோட்டை.

ஹம்பாந்தோட்டை மாநகர சபை அலுவலகம்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**ஹம்பாந்தோட்டை மாநகர சபை**

*தென் மாகாண அரச சேவையில்.................................................................பதவி*

(1) (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
(ஆ) முதல் எழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்:----.
(2) நிரந்தர முகவரி :----.
(3) (அ) நிரந்தர வதிவிட மாவட்டம்:----.
(ஆ) நிரந்தர வதிவிட பிரதேச செயலாளர் பிரிவு :----.
(4) தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
(5) (அ) பிறந்த திகதி :- ஆண்டு:----. மாதம்:----. திகதி:----.
(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்திற்கு வயது :-
வருடங்கள்:----. மாதங்கள் :----. நாட்கள்:----.
(6) தொலைபேசி இலக்கம் :----.
(அ) கையடக்க :----.
(ஆ) வதிவிட :----.
(7) ஆண்/பெண்:----.
(8) விவாகமானவர்/விவாகமாகாதவர் :----.
(9) (அ) கல்வித் தகைமைகள் :- க. பொ. த. (சா/த.) பரீட்சை பரீட்சை இலக்கம் :-----.
வருடம் :-----.

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| | | | |

(ஆ) கிடைக்கப்பெற்ற மிக உயரிய கல்வித்தகைமை பற்றிய விபரம் :----.
(10) (அ) வேறு கல்வித் தகைமைகள் :----.
(ஆ) தொழில்சார் தகைமை :----.
(இ) சேவை அனுபவம் :----.
(11) சாரதி சேவை சம்பந்தமாக :
(அ) சாரதி அனுமதிப் பத்திர வகை :----.
(ஆ) சாரதி அனுமதிப் பத்திர இலக்கம் :----.
(இ) சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்ட திகதி :----.
(12) நீர் தற்பொழுது இந்த மாநகர சபையில் சேவையில் இருப்பவராயின் -
(அ) தற்போது வகிக்கும் பதவி :----.
(ஆ) நிரந்தர/சமயாசமய/தற்காலிக/கொந்தராத்து என்பது பற்றி :----.
(இ) மேற்படி பதவிக்கு நியமனம் பெற்ற திகதி :----.
(13) நீர் எப்போதாவது குற்றமொன்றிற்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டவரா? அவ்வாறாயின் விபரம் :----.

14. இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் நான் அறிந்த வகையில் உண்மையானவை எனவும், பிழைகள் அற்றவை எனவும் அறிவிக்கின்றேன். இதில் அடங்கியுள்ள விடயங்கள் பிழையானவை என அந்தப் பதவிக்காகத் தோந்தெடுக்கப்பட முன்னர், நிரூபிக்கப்படுமாயின், நான் தகுதியற்றவனாகக் கருதப்படவும், தெரிவு செய்யப்பட்ட பின்னர் நிரூபிக்கப்பட்டால் எந்த விதமான நஷ்டஈடுகளுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் என்பதை நான் அறிவேன்.

------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி:----.

**தற்போது அரச சேவையில் இருக்கும் விண்ணப்பதாரர்களுக்கான நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

இந்த விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி .................................................................................... இப்போது இந்தத் திணைக்களத்தில்/ நிறுவனத்தில் .......................................................... ஆக தொழில் புரிகிறார். மேற்படி பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் அவர் எந்த விதமான ஒழுக்காற்று நடவடிக்கைக்கும் (அறிவுறுத்தல் தவிர்ந்த) ஆளாகவில்லை என இத்தால் சான்றுப்படுத்துவதுடன் விண்ணப்பப் படிவத்தை விதந்துரை செய்கிறேன்.

-------,
திணைக்கள தலைவர் கையொப்பம்.

பெயர் :-----.
பதவிப் பெயர் :-----.
திணைக்களம்/நிறுவனம் (உத்தியோக முத்திரை)
திகதி :-----.

*4-393*

---

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**ஆனமடுவை பிரதேச சபை**

உள்ளூராட்சி மன்ற (நிறைவேற்றப்பட்ட யாப்பு) சட்டம்

**பிரேரணை இலக்கம் 6(3)**

1989 ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க உள்ளூராட்சி மன்றம் (தொடர்பான கட்டளைப் பிரமானத்தின் ) 2ஆவது பிரிவின் முதலாவது உபபிரிவின் (அ) பந்தியுடன் கூறப்பட வேண்டிய 261 ஆவது அதிகாரமான 1952 ஆம் ஆண்டின் 6ஆம் இலக்கம் கொண்ட உள்ளூராட்சி மன்ற (அங்கீகரிக்கப்பட்ட மேலதிக யாப்பில்) 2ஆவது பிரிவின் முதலாவது உப பிரிவின் கீழ் வடமேல் மாகாண சபையின் உள்ளூராட்சி மன்றங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி வடமேல் மாகாண சபையின் உள்ளூராட்சி மன்றங்களுக்கு பொறுப்பான அமைச்சர் அவர்களால் தயாரிக்கப்பட்ட 2010.07.16 ஆம் திகதி கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1663 ஆவது இலக்க வர்த்தமானியில் IV (அ) பிரிவில் பிரசுரிக்கப்பட்டுள்ள வடமேல் மாகாண சபையால் அனுமதிக்கப்பட்ட 2011. 04. 08 ஆந் திகதி கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1703/ 18 இலக்க அதி விசேட வர்த்தமானியில் IV(அ) பிரிவில் பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தலில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதுமான ஆனமடுவ பிரதேச சபை முறை மோசமானதும், அபாயகரமானதுமான வியாபாரநடவடிக்கைகள்,நடமாடும் வியாபாரங்கள், பிரதேச சபை எல்லைக்குள் வாகனங்கள் நிறுத்தி வைத்தல், பிரதேச சபை எல்லைக்குள் நுளம்புகள், மற்றும் கிருமிகளை அழித்தல், வீதி அலங்காரங்கள் தங்குமிடங்கள் மற்றும் தரிப்பிடங்கள் தொடர்பான அங்கீகரிக்கப்பட்ட இந்த யாப்பு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்தில் இருந்து அமுல் படுத்துவதற்கும் ஏற்றுக்கொள்வதற்கும் உள்ளூராட்சி மன்ற அங்கீகரிக்கப்பட்ட யாப்பிலுள்ள 3ஆவது பிரிவின் முதலாவது உப பிரிவின் கீழ் ஆனமடுவ பிரதேச சபையால் 2013.01.17 ஆந் திகதி நடாத்தப்பட்ட மாதாந்த சபை அமர்வில் தீர்மானிக்கப்பட்டது.

எச்.எம். உதார மதுசங்க,
தலைவர்,
ஆனமடுவை பிரதேச சபை.

ஆனமடுவை பிரதேச சபை,
2013. 01. 17.

*4-333*

# துணை விதிகள்

## மாநகர சபைகள் அதிகாரப் பிரிவுகளுக்குள் நுளம்புகளையும் நோய்க் கிருமிகளையும் இல்லாதொழித்தல் பற்றிய துணைவிதிகள்

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கமுடைய மாகாண சபைகள் (நேர் எதிர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கமுடைய உள்ளூராட்சி நிறுவனங்கள் (அங்கீகரிக்கப்பட்ட உப யாப்புக்கள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின்கீழ் உள்ளூராட்சி விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் என்னால் ஆக்கப்பட்ட கீழ்க்காணப்படும் நகல் உப யாப்புக்கள் மேற்கண்ட பிரிவின்கீழ் இவ்வாறு பிரகடனப்படுத்தப்படுகின்றது.*

*மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆவது அதிகாரம்) 267 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் 272 ஆவது பிரிவின் 5 ஆவது உப பிரிவின் (ஏ) பந்தியில் நுளம்புகளையும் நோய்க் கிருமிகளையும் அழித்தல் பற்றிய உப யாப்பை சட்டமாக்குவதற்கு மாநகரசபைக்கு அதிகாரம் அளிக்கப் பட்டிருப்பதுடன் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கமுடைய உள்ளூராட்சி நிறுவனங்கள் (அங்கீகரிக்கப்பட்ட உப யாப்பு) சட்டத்தின் 3 ஆவது பிரிவின் பிரகாரம் இவ் அங்கீகரிக்கப்பட்ட உப யாப்பை ஏற்றுக் கொள்வதற்காக தென் மாகாணத்தின் மாநகர சபைகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.*

உள்ளூராட்சி விடயங்களுக்கு
பொறுப்பான அமைச்சர்,
தென் மாகாணம்.

*2012.05.21.*

### துணைவிதிகள்

இத்துணைவிதிகள் மாநகர சபைகள் அதிகாரப் பிரிவுக்குள் நுளம்புகள் மற்றும் நோய்களைப் பரப்பும் கிருமிகள் பெருகுவதை தடுத்தல், அவற்றினை அழித்தொழித்தல் மூலம் அதிகாரப் பிரிவின் சுற்றாடலை மேம்படுத்துவதற்கும், பரவும் நோய்கள் வியாபித்தலை தடுப்பதற்குமான உப யாப்புக்கள் என அழைக்கப்படுகின்றது.

2. மாநகர சபைகள் அதிகாரப் பிரிவிற்குள் எவரொருவராலும் எந்த இடத்திலும் நுளம்புகள் அல்லது நோய்களுக்கு காரணமாகின்ற கிருமிகள் பெருகுதல் மற்றும் விருத்தியாதல் என்பவைகளுக்கு ஏதுவாகின்ற கருமங்களைச் செய்தல் அல்லது செய்வித்தல் அல்லது அவ்வாறு நடைபெற இடமளித்தல் என்பன செய்யப்படக் கூடாது.

3. நுளம்புகளையும் நோய்களுக்கு காரணமாகின்ற கிருமிகளையும் அழிப்பதற்காக மாநகர சபைகள் அதிகாரப் பிரிவிற்குள் உள்ள அனைத்து இடங்களில் வசிப்பவர்கள் அனைவரும் :

(அ) அனைத்து திறந்த நிலையிலுள்ள புட்டிகள், போத்தல்கள், பெட்டிகள், பிளாஸ்டிக் கொள்கலன்கள், டயர்கள், தேங்காய்ச் சிரட்டைகள், தேங்காய்க் கோம்பைகள் மற்றும் அவ்விடத்திலுள்ள நீர் தேங்கி நிற்கக்கூடிய பாண்டங்கள், பொருட்கள் என்பவற்றை அகற்றுவதற்கு அல்லது அழிப்பதற்கு அல்லது அவ்வாறு செய்விப்பதற்கு ஏற்பாடுகள் செய்தல் வேண்டும்.

(ஆ) வசிப்பிடம் அல்லது வசிப்பிடமல்லாத கட்டிடங்களின் மழைப் பீலிகள், தண்ணீர் வழிந்தோடும் குழாய்கள் மற்றும் வீட்டுத் தோட்டங்களில் உள்ள வடிகால்களில் தண்ணீர் வழிந்தோடுவதற்கான வழிவகை செய்தல் வேண்டும். அதற்கான தடைகள் இருப்பின் பரிசீலனை செய்து நீக்குதல் வேண்டும்.

(இ) வசிப்பிடம் அல்லது வசிப்பிடமல்லாத இடங்களிலுள்ள அனைத்து நீர்ப்பாண்டங்கள், தண்ணீர்த் தாங்கிகள், தண்ணீரைச் சேமிக்கும் வேறு பாண்டங்கள், சிறந்த நிலையில் இருக்கவேண்டியதுடன் உரிய காலத்தில் புனருத்தாரணம் செய்யப்பட்டிருப்பதுடன் அவை நுளம்புகள் மற்றும் கிருமிகள் என்பவற்றிலிருந்து பாதுகாக்கப்படக்கூடிய விதத்தில் மூடிவைக்கப்பட வேண்டியதுடன் அவற்றினுள் நுளம்புகள் அல்லது கிருமிகள் பெருகுவதை தடுக்கக்கூடிய விதத்தில் வைத்திருத்தல் வேண்டும். அத்துடன் நுளம்புகள், கிருமிகள் பெருகுவதை தடுப்பதற்கான வழிமுறைகளையும் செய்தி ருத்தல் வேண்டும்.

(ஈ) வளவுகளில் உள்ள கிணறுகள் நல்ல நிலையில் அமைந் திருக்க வேண்டியதுடன் நுளம்புகள் மற்றும் நோய்க் கிருமிகள் பெருகாவண்ணம் பாதுகாத்தல் வேண்டும்.

(உ) வெற்றாக்கக்கூடிய விதத்தில் ஆக்கஞ்செய்யப்பட்ட செயற்கை தடாகங்கள் இருப்பின் அவற்றை குறைந்தபட்சம் கிழமைக்கு ஒரு முறையாவது வெற்றாக்கிச் சுத்தப்படுத்துதல் வேண்டும்.

(ஊ) வீட்டுத் தோட்டங்களிலும் காணிகளிலும் உள்ள மதகுகளினால் வழிந்தோடும் நீர் ஒன்று சேர்வதால் நீர்க்குழிகள் ஏற்படுவதை தடுப்பதற்காக அவற்றை தினந்தோறும் பராமரித்தல் வேண்டும்.

(எ) உணவுக்காக அல்லது அலங்காரத்துக்காக வளர்க்கப்படும் தாவரங்களைத் தவிர ஏனைய அனைத்து பற்றைக் காடுகளையும், மரங்களையும் மனிதர்கள் வாழுகின்ற இடங்களாகப் பாவிக்கப்படும் கட்டிடங்கள் அல்லது நிர்மாணங்களில் இருந்து 5 மீட்டர்களுக்கு உட்பட்ட பகுதிகளில் இருந்து அகற்றுதல் வேண்டும்.

(ஏ) அனைத்து கற்குழிகள், மாணிக்கக் கற்களுக்காகத் தோண்டப்பட்ட குழிகள், மண்குழிகள் அல்லது வேறு விடயங்களுக்காக தோண்டப்பட்ட குழிகள் ஆகியவை தண்ணீர் நிரம்புவதை தடுக்கும் விதத்தில் அமைந் திருத்தல் வேண்டும்.

(ஐ) நீர் நோய்கள் கூடிய கரை நிலங்களில் உண்டாகின்ற (வளர்கின்ற) அலங்காரத் தாவரங்கள், பாசி வகைகள், யானைக்கால் நோய்ப் பாசி உட்பட நீர்த் தாவரங்களும், நுளம்புகள், கிருமிகள் விருத்தியாவதற்கு ஏதுவாகின்றதென அறியக்கூடிய வேறு தாவரங்கள் என்பவற்றை அகற்றி அழிக்கவேண்டியதுடன் அத்தாவரங்கள் தண்ணீர் ஓடும் வழியாக மிதந்து செல்வதை தடைசெய்ய தடுப்புகள் அமைத்தல் வேண்டும்.

(ஒ) மலசல கூடங்கள், தண்ணீர்க் குழிகள், தண்ணீரை உறிஞ்சக்கூடிய குழிகள் மற்றும் அவற்றை சூழவுள்ள அவ்விடத்திலுள்ள அனைத்து மலசலகூடங்களிலும் நுளம்புகள் விருத்தியாவதை தடுக்கும் விதத்தில் நடாத்தல் வேண்டும்.

(ஓ) மயானம் அல்லது வேறு இடங்களில் மரணித்தவர்களின் ஞாபகார்த்தமாக கட்டப்படும் சமாதிகள் தண்ணீர் தங்காத விதத்தில் நிர்மாணிக்கப்படல் வேண்டும்.

4. மாநகர சபையின் மாநகராதிபதி அவர்களால் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட ஓர் உத்தியோகத்தரால் எந்தவொரு நாளிலும் மு. ப. 6.00 முதல் பி. ப. 6.00 மணி வரை உள்ள காலப்பகுதியில் ஓரிடத்தில் பிரவேசித்து கீழ்க்காணும் விடயங்களை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக அவ்விடத்தை பரிசீலனைக்கு உட்படுத்துவது கட்டாயமானதாகும் :-

(அ) அவ்விடம் நுளம்புகள், கிருமிகள் விருத்தியாகக்கூடியதா என்பது பற்றி,

(ஆ) அவ்விடத்தில் வசிப்பவர்கள் இத்துணைவிதியின் ஏற்பாடுகளைப் பின்பற்றுகின்றனரா என்பது பற்றி,

(இ) அவ்விடத்தில் நுளம்புகள் விருத்தியாவதை தடுப்பதற்கு மற்றும் அழிப்பதற்கு ஏதாவதொரு முயற்சி எடுக்க வேண்டுமாயின் அம்முயற்சி (செயற்பாடு) எவ்வாறானது என்பது பற்றி,

(ஈ) அவ்விடத்தில் கிருமிநாசினி தெளித்தல் சிறந்த முறையில் நடைபெற்றுள்ளதா என்பது பற்றி,

5. (அ) மாநகராதிபதி அவர்களால் அல்லது அவரால் இக்கருமங்களுக்காக எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவரால் ஓர் இடத்திற்கு தேவைப்படும் எனக் கருதப்படும் பரிசீலனை ஒன்றின் பின் அவ்விடத்தில் நுளம்புகள், கிருமிகள் என்பவற்றை அழிப்பதற்கும் விருத்தியாதலைத் தடுப்பதற்கும் செய்யவேண்டிய வழிமுறைகளை எழுத்திலான அறிவித்தல் ஒன்றின் மூலம் அவ்விடத்தின் உரிமையாளர் அல்லது வசிப்பாளருக்கு உத்தரவிட முடியும்.

(ஆ) இத்துணைவிதியின் (அ) ஆவது பந்தியின்கீழ் அறிவித்தல் ஒன்று கையளிக்கப்பெற்ற இடமொன்றின் உரிமையாளரால் அல்லது வசிப்பாளரால் அவ்வறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள் அவ்வுத்தரவை நிறைவேற்றல் வேண்டும்.

6. (அ) மாநகராதிபதி அவர்களின் எழுத்துமூலமான அனுமதி இன்றி ஏதாவது ஓர் இடத்தின் உரிமையாளர் அல்லது வசிப்பாளர் அதில் ஒரு கிணறு கட்டுதல் அல்லது நீர்த்தாங்கி ஒன்று, தடாகம் ஒன்று, நீர்ப்பாத்திரம் ஒன்று, நீர்ப்பு அல்லது நீர் சேகரிக்கும் அல்லது நீர் தங்கும் வேறு அமைப்புகளை நிர்மாணித்தல் கூடாது.

(ஆ) இத்துணைவிதியின் (அ) ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு மாற்றமாக நிர்மாணம் ஒன்று செய்யுமிடத்து நகராதிபதி அவர்களால் அவ்விடத்தின் உரிமையாளருக்கு அல்லது வசிப்பாளருக்கு கையளிக்கப்படும் எழுத்திலான அறிவித்தல் ஒன்றின் மூலம் அவ்வறிவிப்பில் குறிக்கப்பட்டுள்ள காலத்திற்குள் கிணற்றை அல்லது நீர்த்தாங்கியை, தடாகத்தை, நீர்ப்பாத்திரத்தை, நீர்ப்பு அல்லது அமைப்பை குறித்த பொருட்களால் நிறைத்து மூடும்படி அல்லது வேறு விதத்தில் அழித்து விடும்படி அல்லது அக்காலத்தினுள் அறிவித்தலில் உத்தரவிடப்பட்டுள்ள பிரகாரம் அதை மாற்றஞ் செய்யும்படி உத்தரவிட முடியும்.

7. (அ) 5 ஆவது அல்லது 6 ஆவது உப விதியின்கீழ் உள்ள அறிவித்தல் ஒன்றை ஓர் இடத்தின் உரிமையாளருக்கு அல்லது வசிப்பாளருக்கு நேரடியாக கைளித்தல் அல்லது அவ்வறிவித்தலை அவ்விடத்தில் பார்வைக்குத் தெரியக்கூடிய விதத்தில் ஒட்டுதல் அல்லது ஒப்படைத்தல்.

(ஆ) ஓரிடத்தில் கூட்டு உரிமையாளர்கள் இருவர் அல்லது அதற்குகூடிய எண்ணிக்கையானோர் வசிப்பிடமாகக் கொண்டிருப்பின் அவ்வுரிமையாளர்களில் ஒவ்வொரு உரித்தாளரும் 7(அ) உப யாப்பினதும் 5 ஆவது உப யாப்பினதும்கீழ் அவர்களுள் ஒருவருக்கு ஒப்படைக்கப்படும் அறிவித்தலின் உத்தரவுகளை செயற்படுத்துவது சம்பந்தமாக உதாசீனம் செய்தல் அல்லது செய்யாது இருத்தல் என்பவற்றிற்கு பொதுப்படை யாகவும் தனித்தனியாகவும் பொறுப்புடையவராகின்றார்.

(இ) 5 ஆவது அல்லது 6 ஆவது விதியின்கீழ் அறிவித்தல் ஒன்றை பெற்றுக்கொண்ட இடமொன்றின் உரிமையாளர் அல்லது வசிப்பாளர் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்தினுள் அவ்வறிவிப்பிலுள்ள உத்தரவுகளை உதாசீனம் செய்யும் சந்தர்ப்பத்தில் நகராதிபதி அவர்களால் அல்லது அவ்விடயத்திற்காக நகராதிபதிஅவர்களால் அதிகாரமளிக்கப்பட்ட வேறொரு உத்தியோகத்தர் ஒருவரால் எந்தவொரு நாளிலும் மு. ப. 6.00 மணி முதல் பி. ப. 6.00 மணி வரையான நேரத்தினுள் தேவைப்படுகின்ற உதவியாளர்களுடனும், ஊழியர்களுடனும் அவ்விடத்தினுள் புகுந்து அவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள கருமங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் நடைமுறைப்படுத்தச் செய்வதற்கும் அல்லது நடைமுறைப்படுத்த ஒழுங்குசெய்வதற்கும் முடியும்.

(ஈ) எந்தவொரு இடத்தினது உரிமையாளருக்கு அல்லது அவ்விடத்தின் வசிப்பாளருக்கு 5 ஆவது அல்லது 6 ஆவது உப யாப்பின்கீழ் ஒப்படைக்கப்பட்ட அறிவித்தல் ஒன்றில் குறிப்பிட்டுள்ள ஏதாவதொரு கருமத்தை அல்லது கருமங்களை மாநகராதிபதி அவர்களால் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட அதிகாரி ஒருவரால் நடைமுறைப் படுத்தியபோது அல்லது செய்தபோது அக்கருமத்தை அல்லது கருமங்களை நடைமுறைப்படுத்தும்போது மாநகரசபைக்கு ஏற்பட்ட செலவினங்களை அவ்விடத்தின் உரிமையாளர் அல்லது வசிப்பாளர் மாநகர சபைக்கு செலுத்துதல் வேண்டும். நகராதிபதி அவர்களால் தமது கையொப்பத்துடனான அது பற்றிய எழுத்திலான வேண்டுகோளின் பின்னர் 14 நாட்களுக்குள் அப்பணத்தை உரிமையாளர் அல்லது வசிப்பாளர் மாநகரசபைக்கு செலுத்த வேண்டியதுடன் அவ்வாறு இன்றேல் மாநகரசபை கட்டளைச் சட்டத்தின் 15 ஆவது (உப) பிரிவின் ஏற்பாடு ஏற்புடையதாகின்றது.

8. இத்துணைவிதியின் ஏதாவதொரு ஒழுங்கமைப்பை மீறுகின்ற எவரொருவரும் மாநகரசபைகள் சட்டத்தின் பிரகாரம் குற்றத்திற்கான குற்றவாளி ஆகின்றனர்.

9. சொற்கள் தொடர்பாக வேறொரு பொருள் கோடல் தேவைப்பட்டாலன்றி இவ்வுப யாப்புகளில் –

"உரிமையாளர்" என்பது எந்தவொரு உரிமையாளர் அல்லது வரி செலுத்துபவரும் இடமொன்றில் வாடகைக்கு அல்லது பிரயோகத்திற்கு ஆகிய எவ்விதத்திலோ உரிமைக்கு உரித்துக்கோருபவர்.

''குடியிருப்பாளர்'' என்பது ஓரிடத்தில் குடியிருக்கும் அல்லது வேறொருவரின் பிரதிநிதியாக இருப்பவர் அல்லது பொறுப்புடைய முகாமையாளராக அல்லது பரிபாலிப்பவர்.

''இடம்'' என்பது ஓர் இடம், ஒரு வீடு, கட்டிடமொன்று அல்லது நிர்மாணம் ஒன்று பாவனையிலுள்ள அல்லது கைவிடப்பட்ட கிணறு ஒன்று, கப்பல் ஒன்று, கொள்கலன் ஒன்று அல்லது கைவிடப்பட்ட வாகனம் ஒன்று அடங்குவதுடன் ஒரு தடாகம், நீர்த்தாங்கி, வாவி நீர் வழியொன்று மதகொன்றின், ஆறொன்றின் ஓரங்கள் என்பனவும் அடங்கும்.

''அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்'' என்பது மாநகராதிபதி அவர்களால் எழுத்துமூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட அச்சபையின் ஓர் உத்தியோகத்தர் அல்லது ஓர் ஊழியர்.

''நோய்க் காரணி கிருமிகள்'' என்பது நுளம்புகள், நோய்களைப் பரப்பும் வேறு கிருமிகள்.

''நகராதிபதி'' என்பது உரிய மாநகர சபையின் நகராதிபதிஆவார்.

''சபை'' என்பது .................................... மாநகரசபையாகும்.

4-88/1

---

## திண்ம கழிவுப்பொருட்கள் அங்கீகரிக்கப்பட்ட முகாமைத்துவம் பற்றிய துணைவிதிகள்

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கமுடைய மாகாண சபைகள் (நேர் எதிர்விளைவுகள் ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது வாசிக்கப்பட வேண்டிய 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கமுடைய உள்ளூராட்சி நிறுவனங்கள் (அங்கீகரிக்கப்பட்ட உப யாப்பு) சட்டத்தின் 2 ஆவது பிரிவின்கீழ் மாகாண உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் என்னால் ஆக்கப்பட்டு கீழே காணப்படும் நகல்கள் உப யாப்பு மேலே குறிப்பிட்ட பிரிவின் பிரகாரம் இவ்வாறு பிரசுரிக்கப்படுகிறது.

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 267 ஆவது பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய குறித்த கட்டளைச் சட்டத்தின் 129 ஆவது பிரிவும் 272 ஆவது பிரிவின் 5 ஆவது உப பிரிவின் (ஆ) பந்தியால் கடின கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம் பற்றிய உப யாப்பை ஆக்குவதற்கு மாநகரசபைக்கு அதிகாரமளிக்கப் பட்டுள்ளதுடன் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கமுடைய உள்ளூராட்சி நிறுவனங்கள் (அங்கீகரிக்கப்பட்ட உப யாப்பு) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் இவ்வங்கீகரிக்கப்பட்ட உப யாப்பை ஏற்று நடைமுறைப்படுத்து வதற்காக தென் மாகாணத்தின் மாநகரசபைகளுக்கு அதிகாரமளிக்கப் பட்டுள்ளது.

உள்ளூராட்சி விடயங்களுக்கு
பொறுப்புடைய அமைச்சர்,
தென் மாகாணம்.

2012.05.21.

### பொது

இத்துணைவிதி திண்ம கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம் பற்றிய உப யாப்பு என அழைக்கப்படுகின்றது.

2. நகர எல்லைக்குட்பட்ட பகிரங்க இடங்களில், தனியார் இடங்களில், வீதிகளில், பெருந்தெருக்களில் உண்டாகின்ற திண்ம கழிவுப் பொருட்களை வேறாக்கல், களஞ்சியப்படுத்தல், ஒன்று சேகரித்தல், கொண்டுசெல்லல், வேறிடங்களுக்கு மாற்றுதலுக்கான வழிமுறைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் நடாத்துதல், வெளியேற்றல் சம்பந்தமான கட்டளைகள், கண்காணிப்புக்கள், பரிசீலனைகள் என்பனவற்றிற்காக உப யாப்பு ஆக்கப்படுகின்றது.

3. மாநகரசபை அதிகாரப் பிரிவுகளுக்குள் அமைந்துள்ள ஓரிடத்தில் அனைத்து உரிமையாளர்களும் அல்லது குடியிருப்பவர்களும் தமது இடத்தை கழிவுப் பொருட்களற்ற சுகாதார அமைப்புடைய சிறந்த நிலையில் வைத்திருத்தல் வேண்டும்.

4. மாநகர சபைகள் பிரதேசத்தில் அமைந்துள்ள ஏதாவதொரு இடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் தமது இடத்தினுள் உண்டாகின்ற கழிவுப் பொருட்களை ஒன்றுசேர்த்தல், வேறாக்குதல், களஞ்சியப்படுத்துதல், கொண்டு செல்லல் மற்றும் வெளியேற்றல் என்பனவற்றிற்கானவற்றைச் செய்தல் வேண்டும். இல்லாவிடில் இத்துணைவிதியின் ஏற்பாடுகளுக்கமைய அவ்வாறு செய்வித்தல் வேண்டும்.

5. (i) ஓரிடத்தில் அனைத்து உரிமையாளர்களும் அல்லது குடியிருப்பாளர்கள் அவர்களது இடத்தினுள் பெறப்படுகின்ற திண்ம கழிவுப் பொருட்களை கூட்டுதல் அல்லது வேறு வழிகளைக் கையாண்டு தினந்தோறும் அல்லது அதற்குக் குறைந்த காலத்திலாவது ஒன்று சேர்த்தல் வேண்டும்.

(ii) சகல உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளர்களும் இத்துணைவிதியின் முன்னைய உப பிரிவின் பிரகாரம் ஒன்றுசேர்த்த கழிவுப் பொருட்களை இல. 8 முதல் 20 வரையுள்ள உப யாப்புகளில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய வேறாக்குதல் வேண்டும். அல்லது அவ்வாறு செய்யப்பட ஏற்பாடு செய்தல் வேண்டும்.

(iii) உரிமையாளரால் அல்லது குடியிருப்பாளரால் கழிவுப் பொருட்களைக் களஞ்சியப்படுத்த அல்லது வெளியாக்க உபயோகிக்கப்படும் உறை, சாக்கு, பெரிய பாத்திரம், அல்லது வேறு கொள்பாத்திரங்கள் இல. 8 முதல் 20 வரையுள்ள உப யாப்புகளின் ஏற்பாடுகளுக்கமைய ஒன்று சேர்ப்பதற்காகச் சிறந்த முறையில் பராமரிப்புச் செய்தல் வேண்டும். அவை கிழிந்த, துவாரமுள்ள, உடைந்த அல்லது ஈரளிப்புக் காரணமாக மிருதுவான அல்லது வேறு காரணங்களினால் பாவிக்க முடியாத நிலையில் இருப்பின் அவற்றை உபயோகித்தல் கூடாது. உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் எதிர்பார்ப்பதாயின் சபையால் எடுக்கப்படும் முடிவின் பிரகாரம் ஒரு பகுதி சலுகை அடிப்படையில் அல்லது முழுவதும் இலவசமாக அவ்வாறான கொள்தொட்டிகளை விநியோகிக்க முடியும்.

(iv) I ஆவது உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய ஒன்று சேர்க்கப்பட்ட கழிவுப் பொருட்களை சபையால் காலத்திற்குக் காலம் முடிவெடுத்து பகிரங்கப்படுத்திய சபை அதிகாரப் பிரிவுக்குள் நடைமுறையாகின்ற கழிவுப் பொருள் சேகரிக்கும் முறைக்கும் நேரசூசியின்படி உரிமையாளரால் அல்லது குடியிருப்பாளரால் அகற்ற முடியும்.

(v) உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் வீட்டில் உள்ளவர்களின் அல்லது அண்டை வீட்டில் உள்ளவர்கள், வருகையாளர்கள்

ஆகியோரின் சுகாதாரத்தை அல்லது பிரதேசத்தின் சுகாதாரப் பாதுகாப்பு பாதிக்கக்கூடிய விதத்தில் கழிவுப் பொருட்களை ஒன்றுசேர்த்தல், களஞ்சியப்படுத்தல், அகற்றுதல்களைத் தவிர்த்தல் வேண்டும்.

6. (i) எவரொருவராவது பாதையொன்றுக்கு, வீதியொன்றுக்கு, பெருந்தெருவொன்றுக்கு, ஒழுங்கை ஒன்றுக்கு அல்லது வேறு பொது நிலையமொன்றுக்கு அல்லது இடமொன்றுக்கு அல்லது வடிகால் ஒன்றுக்கு, தண்ணீர்த் தடாகமொன்றுக்கு அல்லது தண்ணீர் வழிந்தோடும் இடமொன்றுக்கு அல்லது கடலுக்கு கழிவுப் பொருட்களை போடுவதைத் தவிர்த்தல் வேண்டும்.

(ii) எவரொருவராவது மாநகர சபைப் பிரதேசத்திற்குள் திடலொன்றின் சுற்றாடலுக்கு பங்கம் விளையும்படி கழிவுப் பொருட்களை தீமூட்டுதல் கூடாது.

(iii) எந்தவொரு உரிமையாளருக்கோ அல்லது குடியிருப்பாளருக்கோ 7 ஆம் இலக்க உப யாப்பின் ஏற்பாடுகளுக்கமைய ஏதாவதொரு கழிவுப் பொருளை விடுவிக்கச் செய்தல், கலத்தல். ஒழுங்குசெய்தல் அல்லது அகற்றல் ஆகியவற்றுக்காக அனுமதி பெறவேண்டிய சந்தர்ப்பங்களில் அவ்வாறு அனுமதி பெறமுடியாது போகுமாயின் அவருக்கு/அவளுக்கு அதிகாரம்பெற்ற கழிவுப் பொருட்களை சேகரிக்கும் ஒருவருக்கு ஒப்படைக்க முடியும்.

(iv) இல. 7 இன் உப விதியின் விதிகளுக்கிணங்க விடுவிக்க, கலக்க அல்லது அகற்ற முடியாமற் போன கழிவுப் பொருட்களை மேலே (iii) இல் கூறப்பட்ட விதிகளுக்கிணங்க அதிகாரம்பெற்ற கழிவுப் பொருட்கள் சேகரிக்கும் ஒருவரால் சேரிக்கப்பட்ட கழிவுப் பொருட்கள் இல. 8 முதல் 20 வரையிலான உப யாப்புகளின் பிரகாரம் அகற்றப்படல் வேண்டும்.

7. (i) ஏதாவது ஓரிடத்தின் உரிமையாளருக்கு அல்லது குடியிருப்பாளருக்கு கீழ்க்கண்ட விடயங்கள் சம்பந்தமாக தவிர கழிவுப் பொருட்களை அவ்விடத்திலேயே அழிக்கச் செய்ய முடியும் :-

(அ) சபையால் அவ்வாறான கழிவுப் பொருட்களை அழித்துவிட தடைசெய்யப்பட்டுள்ள பிரதேசங்கள் ;

(ஆ) சபையால் குறிப்பிடப்பட்டுள்ள சில கழிவுப் பொருட்கள்

(ii) இடமொன்றின் உரிமையாளர் அல்லது வசிப்பாளர் ஆணையாளரால் அனுமதிக்கப்பட்ட முறைப்படி அல்லது அவரின் கட்டளைப்படி நிர்மாணிக்கப்பட்ட அடுப்பொன்றில் அல்லது சூளை ஒன்றில் கழிவுப் பொருட்களை எரிக்க முடியும். இன்றேல் ஆணையாளரால் அனுமதிக்கப்பட்ட கழிவுப் பொருட்களை கையாளுதல், பதனஞ் செய்தல் அல்லது புதைத்தல்.

(iii) உரித்துடையவர் அல்லது வசிப்பாளர் "சேதனப் பசளை" பீப்பாய்களுக்கு ஆணையாளருக்கு விண்ணப்பித்தால் அவ்வுரித்துடையவருக்கு அல்லது வசிப்பவருக்கு அச்சேதனப் பசளைப் பீப்பாய்களைப் பராமரித்தல் செய்யக்கூடிய இடவசதிகளிருப்பின் அப்பீப்பாய்களின் செலவின் ஒரு பகுதியை அல்லது முழுவதையும் அறவிட்டு அல்லது இலவசமாக பெற்றுக்கொள்ள முடியும்.

(iv) உரித்தாளர் அல்லது வசிப்பாளர் தமதிடத்தினுள் சேகரிக்கப் படுகின்ற வீட்டுத்தோட்ட கழிவுகளை முடிந்தவரையில் ஆணையாளரால் அனுமதிக்கப்பட்ட பிரகாரம் கையாளுதல் பதனஞ்செய்தல் வேண்டும். அவ்வுரித்தாளர் அல்லது வசிப்பாளர் எஞ்சிய வீட்டுத் தோட்டக் கழிவுகளை வெளியாக்குவதற்கு உரியவற்றை குறித்த கட்டணத்தைச் செலுத்தி நகர கழிவுப் பொருட்கள் சேகரிக்கும் நபருக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

(v) வீதியொன்றில் அல்லது பெரும் தெருவொன்றின் அருகில் உள்ள ஏதாவதொரு மரம் அல்லது அதன் கிளை ஒன்றை வெட்டும் ஒருவர் உடனடியாக அதனை அகற்றுதல் வேண்டும். அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அவ்வாறு இன்றேல் சபையால் நிர்ணயிக்கப்படும் கட்டணம் ஒன்றைச் செலுத்தி மாநகர சபையின் பொறுப்பாளருக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

(vi) ஒவ்வொருவரும் அவரது/அவளது பராமரிப்பிலுள்ள ஏதாவது ஒரு மிருகத்தை வீதியொன்றுக்கு அல்லது பெருந்தெருவொன்றிற்கு, பொது இடமொன்றிற்கு மலங்கழிப்பதைத் தடுக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அவ்வாறு மலங்கழிப்பின் இல. 8 முதல் 20 வரையான உப யாப்பின் பிரகாரம் அதைச் சுத்தப்படுத்தி அப்புறப்படுத்துதல் அந்நபரின் பொறுப்பாகும்.

(vii) எந்தவொருவராவது மாநகர சபை பிரதேசத்தினுள் எந்தவொரு வகையிலான கழிவுப் பொருளொன்றையும் வாகனமொன்றிலிருந்து வீதிக்கு அல்லது பெருந்தெருவுக்கு அல்லது பொது இடமொன்றிற்கு போடுதல் அல்லது சேகரிப்புச் செய்தல் கூடாது.

(viii) வீடொன்று அல்லது வேறொரு இடமொன்றில் நிர்மாணிக்கப் படும் நிர்மாணம் அல்லது பழுதுபார்த்தல் என்பனவற்றிற்கு விண்ணப்பிக்கும் ஒருவர் அவரது/அவளது இடத்தில் உற்பத்தியாகும் திண்மக் கழிவுப் பொருட்கள், வெளிப்படுத்துகின்ற கழிவுப் பொருட்கள் கையாளுதல், பதனஞ் செய்தல் முறைகள் பற்றிய விபரங்களை அவர்/அவள் தனது விண்ணப்பப்பத்திரத்தில் உட்படுத்தல் வேண்டும்.

**வீட்டுத் தோட்டம் (நிலம்)**

8. (i) ஒவ்வொரு உரித்தாளரும் அல்லது வசிப்பாளரும் கூட்டுதலால் அல்லது வேறு முறைகளால் சேரிக்கப்படும் கழிவுகளை கீழ் உள்ள பிரகாரம் தேர்ந்தெடுத்து வேறாக்கல் வேண்டும் :-

(அ) உணவுக் கழிவுப் பொருட்களும் மற்றும் உயிர் சேதனக் கழிவுப் பொருட்கள் ;

(ஆ) மீண்டும் பாவிக்கக்கூடியதும், மாற்றஞ்செய்து உபயோகப் படுத்தக்கூடியதுமான கழிவுப் பொருட்கள் ;

(இ) ஆபத்துக்குரிய கழிவுப் பொருட்கள் ;

(ஈ) மிருகங்களின் மலம், உடலின் பகுதிகள், சாணம் என்பன ;

(உ) இடத்தைக் கூட்டியதன் பின்னர் சேகரமாகும் தூசிகள், வேறு கழிவுகள்.

(ii) சகல உரித்தாளர்களும் வசிப்பாளர்களும் அவ்வாறு தேர்ந்து வேறுபடுத்திய கழிவுகளை வெவ்வேறான உறைகளில் பாத்திரங்களில் போடவேண்டியதுடன் அவற்றை அகற்றும் வரை அதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் வைத்திருத்தல் வேண்டும். உணவுக் கழிவுப் பொருட்களையும் உயிர் சேதன கழிவுப் பொருட்களையும் தண்ணீர் உரைக்காத பொருட்களால் ஆக்கப்பட்டதும் எலிகள், கிருமிகள் மற்றும் வேறு உயிரினங்கள் உட்புகாதவாறு உரிய முறையில் மூடப்பட்ட உறையில் வைத்தல் வேண்டும். உயிரினங்களின் மலம், உடற்பகுதிகள் அல்லது சாணம் போன்ற கழிவுப் பொருட்கள் அகற்றப்பட வேண்டிய

கழிவுப்பொருட்களின் தன்மையை கவனத்தில் கொண்டு காலாகாலத்தில் தீர்மானிக்கப்பட்ட கட்டணமொன்றை மாநகர சபைகள், பிரதேச சபைகள் என்பனவற்றிற்கோ ஆணையாளருக்கு செலுத்துவதன் பேரில் சேகரிப்பவருக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

(iii) சகல உரித்தாளருக்கும் அல்லது வசிப்பவருக்கும் (1) பந்தியின் (அ), (ஆ) உப பிரிவுகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருள்களை அதிகாரம்பெற்ற கழிப் பொருட்கள் சேகரிப்பாளர்கட்கு ஒப்படைக்க முடியும். உரித்தாளர் அல்லது வசிப்பாளர் அவ்வாறு செய்யாவிடில் அவர் / அவள் (இ) உப பிரிவில் விசேடமாகக் குறிப்பிட்டுள்ள கழிவுப் பொருள் வகைகளுடன் உரிய கழிவுப் பொருட்களை நகர கழிவுப் பொருட்கள் சேகரிப்பாளர் ஒருவருக்கு ஒப்படைத்தல் வேண்டும். அவ்வாறின்றேல் சபையால் ஒவ்வொரு வகையான கழிவுப் பொருள்களுக்காக நிர்மாணிக்கப்பட்டுள்ள தொட்டிகளில் அல்லது அவ்வாறான கழிவுப் பொருட்களுக்காக சபையால் விநியோகிக்கப்படும் தொட்டிகளில் அல்லது உறைகளில் போட்டு வைத்தல் வேண்டும்.

9. (i) வாடகை வீடுகள் பலதைக் கொண்ட அதிக மாடிகளைக் கொண்ட கட்டிடங்களின் சகல உரித்தாளர்களும் வசிப்பவர்களும் அவர்களது கழிவுப் பொருட்களை கீழ்க்கண்ட விதத்தில் வேறுபடுத்தல் வேண்டும் :-

(அ) உணவுக் கழிவுப் பொருட்களும் மற்றும் உயிர் சேதனக் கழிவுப் பொருட்கள் ;

(ஆ) மீண்டும் பாவிக்கக்கூடியதும், மாற்றஞ்செய்து உபயோகப் படுத்தக்கூடியதுமான கழிவுப்பொருட்கள் ;

(இ) ஆபத்துக்குரிய கழிவுப் பொருட்கள் ;

(ஈ) மிருகங்களின் மலம், உடலின் பகுதிகள், சாணம் என்பன ;

(உ) இடத்தைக் கூட்டியதன் பின்னர் சேகரமாகும் தூசிகள், வேறு கழிவுகள்.

(ii) (i) ஆவது பந்தியில் குறித்துக்காட்டப்பட்டுள்ள கட்டிடமொன்றின் உரிமையாளர் அல்லது வசிப்பாளர் ஆணையாளரால் அனுமதிக்கப்பட்ட தரத்திலும் முறைப்படியும் மூன்று விதமான பாத்திரங்கள் அல்லது உறைகளை விநியோகிக்க வேண்டியதுடன் அவற்றை சுத்தமாகவும் சுகாதார முறைப்படியும் பராமரித்தல் வேண்டும்.

(iii) (i) உப பிரிவின் பிரகாரம் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ள கட்டிடமொன்றின் உரிமையாளர் அல்லது வசிப்பாளர் (ii) ஆவது உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமையாதவிடத்தில் ஆணையாளரால் அறிவிக்கப்படும் திகதியில் அல்லது அதற்கு முன்னர் உரிய பாத்திரத்தில் அல்லது உறையை விநியோகிக்கும்படி உரிமையாளருக்கு அல்லது வசிப்பாளருக்கு கட்டளையிட ஆணையாளருக்கு அதிகாரமுண்டு. ஆணையாளரின் உத்தரவின் பிரகாரம் செயற்படுவது உரிமையாளரின் அல்லது வசிப்பாளரின் கடமையாகும்.

(iv) கட்டிடமொன்றின், நிலத்தின் அல்லது மாடியின் உரிமையாளர் அல்லது வசிப்பாளர் தேர்ந்து வகைப்படுத்தப்பட்ட கழிவுப் பொருட்கள் வைக்கப்பட்டுள்ள உரிய பாத்திரத்தில் அல்லது உறையில் இடல் வேண்டும்.

(v) இத்துணைவிதியின் (i) ஆவது உப பிரிவின் (அ) மற்றும் (ஆ) பிரிவுகளில் விசேடமாகக் குறிப்பிட்டுள்ள கழிவுப் பொருள் வகைகளை அப்புறப்படுத்தல் அதிகாரம்பெற்ற சேகரிப்பாளரது கடமையாகும். அவ்வாறு அப்புறப்படுத்தப்படாத ஏதாவது கழிவுப் பொருட்கள் (இ), (ஈ) பிரிவுகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருட்கள் வகைகளையும் நகர கழிவுப் பொருட்கள் சேவையாளருக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

10. (i) சபையின் முன் அனுமதியைப் பெற்று சேரிகளில் வசிப்பவர்களின் பாவனைக்காக ஆணையாளரால் கழிவுப் பொருட்கள் தொட்டி, உறைகள் இலவசமாக விநியோகித்தல் சட்டபூர்வமானதாகும்.

(ii) சகல சேரி வீடுகளிலும் உரிமையாளர்களும் வசிப்பாளர்களும் அவரது அல்லது அவளது வசிப்பிடத்தில் சேகரமாகும் கழிவுகளை பின்குறிப்பிடும் பிரகாரம் தேர்ந்து வகைப்படுத்தி அவரது/ அவளது வசிப்பிடத்திற்கு அருகாமையில் வைக்கப்படுகின்ற அனுமதித்த பாத்திரத்தில் அல்லது உறைகளில் இடல் வேண்டும் :-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிர் சேதன கழிவுகள் ;

(ஆ) மீண்டும் பாவிக்கக்கூடிய அல்லது எடுக்கக்கூடிய கழிவுகள் ;

(இ) ஆபத்தான கழிவுப் பொருட்கள்

(iii) இவ்வுப யாப்பில் (ii) ஆவது உப பிரிவின் (அ), (ஆ) பிரிவுகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளை அகற்றுவதற்காக கழிவுப் பொருட்களை சேகரிப்பவர் ஒருவருக்கு அனுமதி வழங்க ஆணையாளருக்கு அதிகாரமுண்டு.

**கடைகள், அலுவலகங்கள்**

11. (i) கடையொன்றின் அல்லது அலுவலகமொன்றின் சகல உரிமையாளரும் வசிப்பாளரும் ஒவ்வொரு தொகுதியிலும் சேருகின்ற கழிவுகளைப் பின்வரும் விதத்தில் தேர்ந்து வேறாக்கல் வேண்டும் :-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிர் சேதன கழிவுகள் ;

(ஆ) மீண்டும் பாவிக்கக்கூடிய அல்லது எடுக்கக்கூடிய கழிவுகள் ;

(இ) ஆபத்தான கழிவுப் பொருட்கள் ;

(ஈ) இடத்தைக் கூட்டுவதால் சேகரமாகும் தூசி மற்றும் உலர்ந்த கழிவுகள்.

(ii) தேர்ந்து வேறாக்கம் செய்த கழிவுகளை அகற்றும் வரை வெவ்வேறாக தொட்டிகளில் (பாத்திரங்களில்) அல்லது உறையில் போட்டு ஏற்ற இடமொன்றில் வைத்திருத்தல் வேண்டும்.

(iii) கடையொன்றில் அல்லது அலுவலகமொன்றில் உரிமையாளர் அல்லது வசிப்பாளர் இவ்வுப யாப்பின் (i) ஆவது உப பிரிவின் (அ), (ஆ) பிரிவில் விசேடமாகக் குறிப்பிட்டுள்ள கழிவுப் பொருட்களை அதிகாரம்பெற்ற சேகரிப்பாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

(iv) பல மாடிகள் அல்லது பல நிலைப்பகுதிகள் அடங்கிய அல்லது அலுவலகத் தொகுதி ஆகியவற்றின் உரிமையாளர்கள் அல்லது அவற்றின் வசிப்பவர்கள் ஆணையாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரங்களுக்கு ஏற்ப அக்கடைகளில் அல்லது அலுவலகங்களில் தேர்ந்து வேறாக்கப்பட்ட கழிவுகள் சேகரம் செய்ய, அல்லது வைக்க, ஒவ்வொரு

கடைகளுக்கும் அலுவலகங்களுக்கும் கழிவுத் தொட்டிகள், உறைகள் தேவையான அளவு விநியோகித்தல் வேண்டும்.

(v) இத்துணைவிதியின் (iv) ஆவது பிரிவில் விசேடமாகக் குறிப்பிட்டுள்ள கடையொன்றின் அல்லது அலுவலகமொன்றின் ஓர் உரிமையாளர் தேர்ந்து வேறாக்கிய கழிவுகளை வெவ்வேறாக தொட்டிகளில் அல்லது உறைகளில் போடல் வேண்டும். இத்துணை விதியின் (i) ஆவது உப பிரிவின் (அ), (ஆ) பிரிவுகளில் விசேடமாகக் குறிப்பிட்டுள்ள கழிவுப் பொருள் வகைகளை அதிகாரம்பெற்ற கழிவுப் பொருட்கள் சேகரிப்பாளருக்கு ஒப்படைத்தல் உரிமை சகல உரிமையாளருக்கும் வசிப்பாளருக்கும் உள்ளது.

(vi) அதிகாரம்பெற்ற கழிவுப் பொருள் சேகரிப்பவரால் சேகரிக்கப்படாத இத்துணைவிதியின் (i) ஆவது உப பிரிவில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருள் வகைகளையும் (ii) ஆவது பிரிவில் (அ), (ஆ) பிரிவுகளில் விசேடமாகக் குறிப்பிட்டுள்ள கழிவுப் பொருள் வகையொன்றை சபையால் காலாகாலத்தில் எடுக்கப்படும் முடிவுகளுக்கு ஏற்ப கட்டணமொன்றை ஆணையாளருக்குச் செலுத்துவதன் மூலம் உரியபடி உரிமையாளரால் அல்லது வசிப்பாளரால் நகர கழிவுப் பொருட்கள் சேகரிப்பாளருக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

(vii) அயலவர்களுக்கு அல்லது குறித்த கடையில் அல்லது அலுவலகத்தில் சேவை புரிபவர்களுக்கு ஏதாவது சுகாதார உடல்நலப் பிரச்சினைகள் ஏற்படாதிருக்கும் பொருட்டு கழிவுப் பொருட்களை அகற்றுதல் இத்துணைவிதியின் விசேடமாக கட்டளை இடப்பட்டுள்ள கழிவுப் பொருள் தொட்டிகள் அல்லது உறைகள் என்பனவற்றைப் பராமரித்தல் ஒரு கடையின் அல்லது அலுவலகத்தின் உரிமையாளருக்குப் பொறுப்பாகும்.

(viii) இத்துணைவிதி சம்பந்தமாக கருமங்கள் பற்றிய பொருள் கோடல் தேவைப்படின் -

"அலுவலகம்" என்பதற்கு, 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கம் கொண்ட கடைகள் மற்றும் அலுவலகங்கள் ஆகியவற்றில் சேவையில் ஈடுபட்டுள்ளவர் பற்றிய சட்டத்தில் (129 ஆவது அதிகாரம்) இல் கொடுக்கப்பட்டுள்ள பொருளேயாகும்.

"வசிப்பாளர்" என்பதற்கு, கடை ஒன்றின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் அல்லது வியாபாரமொன்றின் அல்லது அலுவலகமொன்றின் பொறுப்பாளராவார்.

"கடை" என்பதற்கு, மொத்தமான அல்லது சில்லறையான வியாபார நிமித்தம் பொருட்களை வைத்திருக்கும் இடமொன்று ஆவதுடன் உணவு வகைகளை விற்பனைக்காக வைத்திருக்கும் இடமொன்றும் மற்றும் முடிதிருத்தும் நிலையம் ஒன்று அல்லது சிகை அலங்காரம் செய்யும் இடங்கள் என்பனவும் உள்ளடங்கும்.

### ஹோட்டல் (சாப்பாட்டுக்கடை)

*12.* (i) எந்தவொரு சாப்பாட்டுக்கடை நடாத்துபவரும் அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட எவரொருவரும் தமது இடத்தில் குவியும் கழிவுப் பொருட்களை பின்வரும் பிரகாரம் தேர்ந்து வேறுபடுத்தல் வேண்டும். அவ்வாறின்றேல் அவ்வாறு செய்ய ஒழுங்குசெய்தல் வேண்டும் :-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிர்சேதன கழிவுகள் ;

(ஆ) மீண்டும் பாவிக்கக்கூடிய அல்லது எடுக்கக்கூடிய கழிவுகள் ;

(இ) ஆபத்தான கழிவுப்பொருட்கள் ;

(ஈ) இடத்தைக் கூட்டுவதால் சேகரமாகும் தூசி மற்றும் உலர்ந்த கழிவுகள்.

(ii) சகல சாப்பாட்டுக் கடைக்காரரும் அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட எவரும் தேர்ந்து வேறாக்கப்பட்ட கழிவுப் பொருட்களை அகற்றும்வரை வெவ்வேறாக ஏற்புடைய தொட்டிகளில் (பாத்திரங்களில்) உறைகளில் போட்டு ஏற்ற இடமொன்றில் வைத்தல் வேண்டும்.

(iii) சகல சாப்பாட்டுக் கடைக்காரரும் அல்லது அவரால் எழுத்து அதிகாரம் அளிக்கப்பட்ட எவரொருவராலும் நுளம்புகள், எலிகள், கிருமிகள் அல்லது வேறு பூச்சிகள் உட்புகாதவாறு அனைத்து உணவுக் கழிவுப் பொருட்களையும் மற்றும் உயிர் சேதனப் பொருட்களையும் பிளாஸ்டிக் அல்லது உலோகத்திலான மூடிகளையுடைய பூரண பாதுகாப்புடைய பாத்திரத்தில் (தொட்டியில்) அல்லது வேறு உறைகளில் அடைத்தல் வேண்டும்.

(iv) இத்துணைவிதியின் (i) உப பிரிவின் (அ), (ஆ) பிரிவில் விசேடமாகக் குறிப்பிட்டுள்ள கழிவுப் பொருள் வகைகளை அதிகாரம்பெற்ற கழிவுப் பொருட்கள் சேகரிப்பாளர் ஒருவருக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

(v) இத்துணைவிதியின் (iv) ஆவது உப பிரிவின்கீழ் ஒப்படைக்கப்படாத அவ்வாறான கழிவுப் பொருட்களையும் (i) உப பிரிவில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருட்களின் வகை, அக்கழிவுப் பொருட்களின் தன்மையை கவனத்திற்கொண்டு சபையால் காலாகாலத்தில் முடிவு செய்யப்படும். கட்டணம் ஒன்றை உரிமையாளர் அல்லது வசிப்பாளர் ஆணையாளருக்குச் செலுத்தி நகர கழிவுப் பொருட்களைச் சேகரிப்பாளருக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

(vi) இத்துணைவிதியின் கருமங்களுக்காக சொற்கள் சம்பந்தமாக பொருள் கோடல் தேவைப்பட்டாலன்றி "ஹோட்டல்" என்பதற்கு சயன அறைகள் வசதிகளுடன் அல்லது சயன அறை வசதிகளின்றி பணத்தைச் செலுத்தி நுகர்வுக்காக சாப்பாட்டு உணவுகளுடன் குடிவகைகளும் விநியோகம் செய்யும் இடமும் பொருட்படும். அதற்கு உணவுச்சாலை விருந்தினர் இல்லம், தங்குமிடம், விடுதி, சுற்றுலா ஓய்வுச்சாலை, சோற்றுக்கடை அல்லது ஹோட்டலுக்கு சமமான முறையில் வியாபார நிமித்தம் நடாத்தப்பெறும் இடமும் உள்ளடங்கும்.

### காய்கறி வகைகள், பழவகை வியாபார நிலையம்

*13.* (i) சகல காய்கறி வகை மற்றும் பழவகை வியாபார நிலையங்களின் உரிமையாளரும் அல்லது அதற்குப் பொறுப்பாக உள்ள நபரொருவரும் தமது இடத்தில் சேகரமாகும் கழிவுகளை பின்வரும் முறைப்பிரகாரம் தேர்ந்து வேறாக்கல் வேண்டும் :-

(அ) மனித பாவனைக்கு ஒவ்வாத மரக்கறி வகைகள், பழவகைகள் அல்லது வேறு கழிவுகள் ;

(ஆ) மீண்டும் பாவிக்கக்கூடிய அல்லது எடுக்கக்கூடிய கழிவுகள் ;

(இ) ஆபத்தான கழிவுப்பொருட்கள் ;

(ஈ) இடத்தைக் கூட்டுவதால் சேகரமாகும் தூசி மற்றும் உலர்ந்த கழிவுகள்.

(ii) இத்துணைவிதியில் (i) ஆவது உப பிரிவின் (அ) பிரிவில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருள் வகைகளை ஈரளிப்படையாத பிளாஸ்டிக் அல்லது உலோகத்தினாலான பொருட்களால் செய்யப்பட்ட தனியான தொட்டியில் போட வேண்டுவதுடன் அதனுள் நுளம்புகள், எலிகள், கிருமிகள், வேறு புழு பூச்சிகள் உட்புகுவதை தடுக்கக்கூடியவாறு பாதுகாப்பாக வைத்தல் வேண்டும். ஏனைய கழிவுப் பொருட்களை ஏதாவது ஒரு பாத்திரம் அல்லது தொட்டியில் அல்லது உறையில் போடுதல் வேண்டும்.

(iii) இத்துணைவிதியின் (i) உப பிரிவின் (அ), (ஆ) மற்றும் (இ) பிரிவுகளில் குறிப்பிட்டுள்ள கழிவுப் பொருள் வகைகளை அதிகாரம்பெற்ற கழிவுப் பொருள் சேகரிப்பாளருக்குக் கொடுத்தல் முடியும். அவ்வாறு ஒப்படைக்கப்படாத இத்துணைவிதியின் (i) ஆவது உப பிரிவின் (இ) பிரிவில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருட்களுடன் சபையால் காலாகாலத்தில் முடிவெடுக்கப்படும் விதத்தில் கட்டணமொன்றை ஆணையாளருக்குச் செலுத்துவதன் மூலம் மாநகர சேகரிப்பாளர் ஒருவருக்கு ஒப்படைக்க முடியும்.

(iv) இத்துணைவிதியின் கருமங்களுக்காக சொற்கள் சம்பந்தமாக வேறொரு பொருள் கோடல் தேவைப்படாவிடில் பழவகைக்கடை என்பதன் பொருள் காய்கறி வகைகள் மற்றும் பழவகைகள் களஞ்சியப் படுத்திய அல்லது விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள இடம்.

**இறைச்சி, மீன், கோழி இறைச்சி அல்லது முட்டை வியாபார சிறு கடைகள்**

*14.* (i) குறித்த கருமங்களுக்காக ஆணையாளரால் விநியோகிக்கப் பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தின் பிரகாரம் அதில் குறிப்பிட்டுள்ள இடத்தில் எவரொருவராவது (மாடுகள் போன்ற) உணவுக்காக மிருகங்களை அறுத்தல் (வெட்டுதல்) கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அனுமதிக்கப்பட்ட மிருகங்கள், பறவைகள் தவிர வேறு எவ்வித மிருகங்களோ அல்லது பறவை இனங்களோ கொல்லுதல் (வெட்டுதல், அறுத்தல்) செய்யக் கூடாது.

(ii) இத்துணைவிதியின் (i) ஆவது உப பிரிவின்கீழ் விநியோகிக்கப் படுகின்ற அனைத்து அனுமதிப்பத்திரங்களிலும் வெட்டப்படும் மிருகத்தின் அல்லது பறவையின் இனம் வெட்டும் (அறுக்கும்) இடம் தீர்மானிக்கப்படவேண்டிய அமைப்பு சுத்தமாக்குவதற்கும் மனித பிரயோசனத்திற்கு ஒவ்வாத இரத்தம், சாணம், அசூசி என்பனவும் அதன் பகுதிகளும் அகற்றப்படுவதற்கான நிபந்தனைகள் மற்றும் சபை ஏற்புடையது எனக் கருதும் வேறு நிபந்தனைகள் என்பன குறிப்பிடல் வேண்டும்.

(iii) இத்துணைவிதியின் (i) ஆவது உப பிரிவின்கீழ் அனுமதிப்பத்திரம் விநியோகம் செய்தலுக்காக காலாகாலத்தில் சபையால் முடிவு செய்யப்படுகின்ற கட்டணமொன்றை ஆணையாளரால் அறிவிப்பதுடன் அக்கட்டணம் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும்போது செலுத்தப்படல் வேண்டும்.

(iv) இறைச்சி, கோழி இறைச்சி, மீன்கள் மற்றும் முட்டை என்பன விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள சிறு கடைகளின் உரிமையாளர் அல்லது வியாபாரத்தை செய்பவர் அவ்வாறு கழிவுகளை பின்வரும் விதத்தில் தேர்ந்து வேறாக்கல் வேண்டும் :-

(அ) மனித பிரயோசனத்திற்கு ஒவ்வாத சாணிகள், அசூசிகளின் பகுதிகள் அல்லது முட்டைகள் ;

(ஆ) மீளப்பாவிக்கக்கூடிய மற்றும் மீண்டும் பயன்படுத்தக்கூடிய கழிவுகள் ;

(இ) ஆபத்தான கழிவுப் பொருட்கள் ;

(ஈ) இடத்தைக் கூட்டுவதால் சேகரமாகும் தூசி மற்றும் உலர் கழிவுப் பொருட்கள்.

(v) தேர்ந்து வேறாக்கிய கழிவுப் பொருட்களை வேறான பாத்திரத்தில் அல்லது தொட்டியில் அல்லது வேறு உறைகளில் வைத்தல் வேண்டும். இத்துணைவிதியின் (iv) உப பிரிவின் (அ) பிரிவில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருள் வகைகள் ஈரளிப்பு அடையாத வண்ணம் உறையினுள் வைக்கவேண்டியதுடன் அவ்வுறையில் ஈக்கள், எலிகள், கிருமிகள் மற்றும் வேறு பூச்சி புழுக்கள் உட்புகுவதைத் தடுத்து அதை ஏற்ற முறையில் பாதுகாப்பாக வைத்தல் வேண்டும்.

(vi) இத்துணைவிதியின் (vi) ஆவது உப பிரிவின் (அ), (ஆ), (இ), (ஈ) பிரிவுகளில் விசேடமாகக் குறிப்பிட்டுள்ள கழிவுப் பொருள் வகைகளை அதிகாரம்பெற்ற கழிவுப் பொருட்களை சேரிக்கும் ஒருவருக்கு கொடுத்தல் வேண்டும். அவ்வாறு ஒப்படைக்கப்படாத ஏதாவது கழிவுப் பொருட்கள் இத்துணைவிதியின் (iv) ஆவது உப பிரிவின் (ஈ) பிரிவில் விசேடமாகக் குறிப்பிட்டுள்ள கழிவுப் பொருட்கள் வகைகளுடன் சபையால் காலாகாலத்தில் முடிவு செய்யப்படும் கட்டணம் ஒன்றைச் செலுத்தி துர்நாற்றம் வீசுவதற்கு முன் நகர கழிவுப் பொருட்கள் சேகரிக்கும் ஒருவருக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

(vii) இத்துணைவிதியின் கருமங்களுக்காக சொற்கள் சம்பந்தமாக வேறு பொருள் போடல் வேண்டுமாயின் தவிர இறைச்சி, மீன்கள், கோழி இறைச்சி அல்லது முட்டை வியாபார சிறு கடை என்பது இப்பொருட்கள் விற்பனை செய்வதற்காக களஞ்சியப்படுத்தப்பட்ட அல்லது விற்பனை செய்வதற்காக வைக்கப்பட்டுள்ள அல்லது திறந்த இடமாகும்.

**நடைபாதை வியாபாரம்**

*15.* (i) கழிவுப் பொருள்கள் ஏற்படும் வியாபாரமொன்றை நடாத்தும் நடைபாதை வியாபாரி ஒருவர் ஆணையாளரினால் அனுமதிக்கப்பட்ட விதத்திலான தரத்தைக் கொண்டதுமான கழிவுப் பொருட்களைப் போடுவதற்கான பாத்திரம் (தொட்டி) ஒன்றை அல்லது உறை ஒன்றை வைத்தல் வேண்டும். அவ்வாறான கழிவுகளை நடைபாதையிலோ, பெருந்தெருவிலோ அல்லது பொது இடமொன்றிலோ போடுதல் கூடாது.

(ii) நடைபாதை வியாபாரி ஒருவர் வாகனங்களின் அல்லது நடைபாதைப் பிரயாணிகளின் போக்குவரத்திற்கு இடைஞ்சல் ஏற்படும் வகையில் தொட்டி (பாத்திரம்) ஒன்று அல்லது வேறு உறை ஒன்றை வைத்தல் ஆகாது.

(iii) ஒவ்வொரு நடைபாதை வியாபாரியும் அவரது வியாபாரத்தின் காரணமாக ஏற்படக்கூடிய கழிவுப் பொருட்களை கீழ்காணும் பிரகாரம் தேர்ந்து வேறாக்குதல் வேண்டும்.

(அ) உணவுக் கழிவுகள் வேறு உயிரியல் சம்பந்தப்பட்ட கழிவுகள்;

(ஆ) மீண்டும் பாவிக்கக்கூடிய கழிவுப் பொருட்களும், மீண்டும் மாற்றமடையச் செய்யக்கூடிய கழிவுகளும்;

(இ) ஆபத்திற்குரியதான கழிவுப் பொருட்கள்.

(iv) தேர்ந்து வேறாக்கிய கழிவுப் பொருட்களை தனியான தொட்டியில் அல்லது வேறு உறையொன்றினுள் போடல் வேண்டும். இத்துணைவிதியின் (II) உப பிரிவின் (அ) பகுதியில் விசேடமாக

குறிப்பிடப்பட்டுள்ள கிருமிகள், எலிகள், பூச்சி புழுக்கள் போன்ற உயிரினங்களால் கடித்துண்டு போடப்பட்ட கழிவுப் பொருட்கள் பாதுகாப்பான உறையொன்றில் வைக்க வேண்டியதுடன் மேலதிக கழிவுப் பொருட்களைப் போடுவதற்கு தேவைப்பட்டலான்றி அதனை மூடிவைத்தல் வேண்டும்.

(V) நடைபாதை வியாபாரிகள் அனைவரும் இத்துணைவிதியின் (III) வது உப பிரிவின் (அ) (ஆ) பகுதகிளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருள் வகைகளை அதிகாரம் பெற்ற சேகரிப்பாளருக்கு அல்லது இத்துணைவிதியின் (III) வது உப பிரிவில் (இ) பகுதியில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருள் வகைகளுடன் நகர கழிவுப் பொருட்களைச் சேகரிக்கும் ஒருவருக்கு ஒவ்வொரு நாளும் ஒப்படைத்தல் வேண்டும். வியாபாரம் நடைபெறாத சந்தர்ப்பங்களில் கழிவுத் தொட்டியை அல்லது உறையை நடைபாதையோரத்தில் அல்லது பெருந்தெருவில் வைத்தல் கூடாது.

(vi) நடைபாதை வியாபாரிகள் அனைவரும் கழிவுப் பொருள் தொட்டியை அல்லது உறையை நகர கழிவுப் பொருள் சேகரிப்பாளருக்கு ஒப்படைக்க முன்னர் சபையால் காலா காலத்தில் முடிவு செய்யப்படும் கட்டணமொன்றைச் செலுத்தல் வேண்டும்.

(vii) இத்துணைவிதியின் கருமங்களுக்காக சொற்கள் சம்பந்தமாக வேறு பொருள் கோடல் தேவைப்பட்டாலான்றி "நடைபாதை வியாபாரி" என்பதன் பொருள் நடைபாதையில் அல்லது அருகில் பொருட்களை (பண்டங்களை) விற்பனை செய்பவர் அல்லது சேவைகளை அளிப்பவர் ஆவார்.

**தொழிற்சாலைகள்**

*16.* (i) தொழிற்சாலைகள், உரிமையாளர், அனைவரும் அல்லது உற்பத்தியாளர் அனைவரும் தொழிற்சாலை அமைந்துள்ள இடத்தில் (திடலில்) உண்டாகின்ற (ஏற்படுகின்ற) கழிவுப் பொருட்களை ஒன்று சேரத்து பின்வரும் விதத்தில் தேர்ந்து வேறாக்கல் வேண்டும்.

(அ) உயிரியல் சம்பந்தப்பட்ட கழிவுகள் ;

(ஆ) மீண்டும் பாவனையில் ஈடுபடுத்தக்கூடிய அல்லது பாவனைக்காக மாற்றக் கூடிய கழிவுப் பொருட்கள்;

(இ) ஆபத்துக்குரியதான கழிவுகள் ;

(ஈ) இடத்தைக் கூட்டியதன் பின்னர் சேகரமாகும் தூசி, உலர்வுடைய கழிவுகள்.

(ii) இத்துணைவிதியின் I வது உப பிரிவின் (அ) (ஆ) வரிசைகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருள் வகைகளை அதிகாரம் பெற்ற கழிவுப் பொருட்கள் சேகரிக்கும் நபருக்கு ஒப்படைக்க முடியும். அவ்வாறு ஒப்படைக்கப்படாத ஏதாவது கழிவுப் பொருட்களை சபையால் காலா காலத்தில் முடிவு செய்யப்படும் கட்டணம் ஒன்றை ஆணையாளருக்குச் செலுத்துவதன் மூலம் மாநகர கழிவுப் பொருள்கள் சேகரிப்பாளருக்கு ஒப்படைக்க முடியும்.

(iii) 1980 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் அவ் வியாபாரத்திற்காக விநியோகிக்கப்படுகின்ற சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனை களுக்கு ஏற்ப ஆபத்திற்குரியதான கழிவுப் பொருட்களை வெளியேற்றல் அல்லது அகற்றுதல் வேண்டும்.

(iv) இத்துணைவிதியின் காரியங்கள் சம்பந்தமாக பொருள் கோடலின்படி வேறொரு பொருள் தேவைப்பட்டலான்றி "தொழிற்சாலை" என்பதற்கு 1942 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தில் உள்ள பொருள் கோடலே ஏற்புடையதாகின்றது.

**தோண்டுதல், நிர்மாணித்தல், நிர்மூலமாக்குதல் (அழித்தல்)**

*17.* (i) ஏதாவதொரு வீதியை, பாதையை அல்லதுபொது இடமொன்றை தோண்டுகின்ற அல்லது அவற்றில் நிர்மாணம் ஒன்றைச் செய்கின்ற உடைத்தொழிக்கின்ற எவரும் அவற்றினால் ஏற்படுகின்ற கழிவுகளை அவ்விடத்திலிருந்து அகற்றும் வரை இடத்தினுள் ஆணையாளரினால் அனுமதிக்கப்பட்ட இடமொன்றில் களஞ்சியப் படுத்தல் வேண்டும்.

(ii) இத்துணைவிதியின் (1) ஆவது உபபிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருட்களை சபையால் காலா காலத்தில் முடிவு செய்யப்படுகின்ற பிரகாரம் கட்டணமொன்றை ஆணையாளருக்கு செலுத்துவதன் மூலம் நகர கழிவுப் பொருள்கள் சேகரிக்கும் நபருக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

(iii) ''சொற்கள் சம்பந்தமாக வேறொரு பொருள் கோடல் தேவைப்பட்டாலான்றி இத்துணைவிதியின் காரியங்களுக்காக தோண்டுதல், நிர்மாணம் செய்தல், நிர்மூலமாக்கல் போன்ற செயல்களில் ஈடுபடுகின்ற எவரும்'' சேவையிலிருந்து ஈடுபடுத்துபவ ரால் சேவையில் ஈடுபடுத்தப்படுபவரும் உள்ளடங்குகிறது.

"கழிவு பொருள்கள்" என்பதற்கு நிர்மாணங்களின் போதும் கட்டிடப் பொருட்களைப் பாவிக்கும் போதும் உண்டாகின்ற கழிவுப் பொருட்களும் உள்ளடங்குகின்றது.

*18.* (i) வாயுப் பொருள் (கேஸ்) மின்சாரம், நீர், தொலைபேசி வசதிகள் அல்லது வேறு பொது வசதிகள் விநியோகத்திற்காக வீதியொன்றை பாதையொன்றை பொது இடமொன்றைத் தோண்டப்படுமாயின் அவ்வாறு தோண்டும் நபர் ஆணையாளரின் எழுத்துமூலமான அனுமதியைப் பெறல் வேண்டும்.

(ii) மேலே (i) ஆவது உப பிரிவின் கீழ் அனுமதியளிக்க முன்னர் ஆணையாளரால் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக விண்ணப்பதாரரால் ஏற்பாடு செய்துள்ள வேலை ஏற்பாடுகள் உத்தேசத் திட்டங்கள் முடிந்ததன் பின்னர் பாதையில் அல்லது பொது இடத்தில் தற்காலிகமாக வைப்பதற்கு ஏற்படும் கழிவுகளின் அளவுப் பிரமாணம் மற்றும் விண்ணப்பதாரர் குறித்த கழிவுகளை அகற்ற அசட்டையாயின் அதை அவர் அதற்கான செலவினங்களை கவனத்தில் கொள்ளல் வேண்டும். அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கு முன்னர் விண்ணப்பதாரர் மதிப்பீடு செய்யப்பட்ட செலவினங்களுக்கு சமமான பணத் தொகை ஒன்றை வைப்பாக செலுத்துதல் அவசியமாகின்றது.

(iii) எவரொருவராவது கழிவுப் பொருள் முழுவதையும் அல்லது அதன் ஒரு பகுதியை அகற்றாத அல்லது அகற்ற தாமதிக்கும் போது ஆணையாளரால் முடிவு செய்யப்படும் பிரகாரம் குறித்த கழிவுப்பொருள் அகற்ற வேண்டியதுடன் அதன் பிரதிபலனாக செலவாகும் செலவினத்தை (ii) ஆவது உப பிரிவின் கீழ் வைப்பில் வைக்கப்படுகின்ற தொகைக்கு பதிலாக்கப்படுகிறது.

**வைத்தியசாலைகள்**

*19.* (i) வைத்தியசாலை ஒன்றின் உரிமையாளர் அவ்விடத்தில் உற்பத்தியாகும் (ஏற்படும்) கழிவுப் பொருட்களை கீழ்க்கண்ட விதத்தில் தேர்ந்து வேறாக்கல் வேண்டும்.

(அ) உணவுக் கழிவுகள் உயிரியல் கழிவுகள் ;

(ஆ) மீளப் பாவனைக்குரிய கழிவுகள் மீண்டும் பாவனைக்கு மாற்றக்கூடிய கழிவுகள் ;

(இ) இத்துணைவிதியில் (இ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருள் வகைகள் தவிர வேறு கழிவுகள்;

(ஈ) வைத்தியசாலைக்குரிய கழிவுகள் ;

(உ) இடத்தைக் கூட்டியதின் பின்னர் சேகரமாகும் தூசிகள் மற்றும் உலர்வுடைய கழிவுகள்.

(ii) (i) ஆவது உப பிரிவின் கீழ் (அ) (ஆ) பிரிவுகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருள் வகைகளை வெவ்வேறான உறைகளில் போட்டு அவற்றை அகற்றும் வரை பொருத்தமான இடமொன்றில் களஞ்சியப்படுத்தல் வேண்டும். (i) வது உப பிரிவின் கீழ் (இ), (ஈ) பிரிவுகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருள் வகைகளை அதற்காக விசேடமாகச் செய்யப்பட்ட பாத்திரத்தில் (தொட்டியில்) அல்லது உறைகளில் போட்டு வைக்க வேண்டியதுடன் அதற்காக வேறாக்கப்பட்ட இடத்தில் வைத்தல் வேண்டும். 1980 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் குறித்த வைத்தியசாலைக்கு விநியோகம் செய்யப்பட்ட சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய அக்கழிவுப் பொருட்களை அகற்றுதல் வேண்டும்.

(iii) 1 ஆவது உப பிரிவின் (அ) (ஆ) பிரிவுகளில் விசேடமாகக் குறிப்பிட்டுள்ள கழிவுப் பொருள் வகைகளை அதிகாரம் பெற்ற கழிவுப் பொருள் சேகரிப்பாளருக்கு அல்லது சபையால் காலா காலத்தில் தீர்மானிக்கப்படும் கட்டணமொன்றை செலுத்துவதன் மூலம் கழிவுப் பொருள் சேகரிப்பவருக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

(iv) இத்துணைவிதியில் பொருள் கோடல் சம்பந்தமாக வேறொரு பொருள் கோடல் தேவைப்பட்டாலான்றி "வைத்தியசாலை" என்பதற்கு ஏதாவதொரு நோயினால் அல்லது குறைபாட்டினால் அவதியுறுப வர்களுக்கு அல்லது மிருகங்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக உத்தேசிக்கப்படும் ஒரு இடம் (எவ்வாறு விபரஞ் செய்தாலும்) ஆவதுடன் தனியார் மருத்துவமனை, மகப்பேற்று மருத்துவமனை, சிகிச்சை நிலையம், மருத்துவ நிலையம், மிருக வைத்திய சாலை, மிருகச் சிகிச்சை நிலையம் ஆகியன உள்ளடங்கும்.

"ஆபத்துக்குரியதுமான சுகாதார பாதுகாப்பு கழிவுகள்" என்பதற்கு சிகிச்சை நிலையக் கழிவுகள், உடல் பாகங்கள், நச்சு வகைகள், தொற்று நோய்க் கிருமிகள், அவசரமாகப் பரவக்கூடிய தொற்றுகள் ஆகிய சிறு கழிவுகள், ஊசிகள் போன்றவை.

**ஏனைய சூழல்கள்**

20. (i) இல. 8 முதல் 19 வரை உள்ள உப யாப்புக்களில் விசேடமாகக் குறிப்பிடப்படாத வியாபாரம் ஒன்றை நடாத்தும் ஒருவர் அல்லது மக்களின் பங்களிப்புடன் பொதுமார்க்க சம்பந்தப்பட்ட சமூக, கலாசார அல்லது கல்விச் செயற்பாட்டு ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தும் ஒருவர் இச்செயற்பாடுகளால் அல்லது அவ்வாறான நிறுவனம் ஒன்றை நடாத்துவதால் அவ்விடத்தில் உற்பத்தியாகின்ற (சேகரமாகின்ற) கழிவுப் பொருட்களை கீழ்க் கண்ட விதத்தில் வேறாக்கல் வேண்டும் :-

(அ) உணவு வகைக் கழிவுகள், உயிரியல் கழிவுகள் ;

(ஆ) மீளப் பாவனைக்கு உகந்த கழிவுகள் மீண்டும் பாவனைக்காக மாற்றம் செய்யக்கூடிய கழிவுகள் ;

(இ) ஆபத்திற்குரிய கழிவுகள் ;

(உ) இடத்தைக் கூட்டுவதால் சேகரமாகின்ற தூசிகள் மற்றும் உலர் கழிவுகள்.

(ii) (i) ஆவது உப பிரிவின் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளை ஏற்பாடு செய்யும் ஒருவர் அச்செயற்பாட்டின் மூலம் உண்டாகுகின்ற கழிவுகளை சேகரிக்க விசேட செயல் வழிமுறை ஒன்றை செய்வதற்காக சபைக்கு அறிவித்தல் வேண்டும்.

(iii) தேர்ந்து வேறாக்கிய கழிவுகளை அகற்றும் வரை தனியான உறையில் அடைத்து ஏற்புடையதான இடமொன்றில் வைத்தல் வேண்டும்.

(iv) இத்துணைவிதியின் (i) வது உப பிரிவின் (அ) (ஆ) பிரிவுகளில் விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருள் வகைகளை அதிகாரம் பெற்ற கழிவுப் பொருள் சேகரிப்பவர் ஒருவருக்கு அல்லது (i) வது உப பிரிவில் (இ) பிரிவில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள்களுடன் சபையால் காலா காலத்தில் எடுக்கப்படும் தீர்மானத்தின்படி கட்டணம் ஒன்றைச் செலுத்துவதன் பேரில் நகர கழிவுப் பொருள் சேகரிப்பாளர் ஒருவருக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

**வீதிகளும் பொது இடங்களும்**

21. (i) ஆணையாளர் அவர்களால் நகராதிபதியுடன் கலந்துரையாடி சபையின் அனுமதியின் கீழ் கீழ்க்காணும் கருமங்களைத் திட்டமிடுவ தற்கும், கட்டுப்படுத்துவதற்கும் பரிபாலனம் செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும் :-

(அ) மாநகர சபை பிரதேச எல்லைகளுக்குள் அமைந்துள்ள வீதிகள், (பகிரங்க) பொது நிலையங்கள் பெருந்தெருக்கள், பொதுவடிகால் அமைப்புகள், நீரோடைகள் மற்றும் பொது விற்பனை நிலையங்கள் ஆகியவற்றை சுகாதார முறைப்படி நடாத்துதல்;

(ஆ) வீதிகள், பாதைகள் இரு பக்க ஓரங்களில் பொது நிலையங் களிலும் போதியளவு குப்பைத் தொட்டிகளை அமைத்து (விநியோகித்து) பராமரிப்புச் செய்தல்;

(இ) விழாக்களின் போதும், விசேட சந்தர்ப்பங்களிலும் சபையால் தீர்மானிக்கும் ஏற்பாடுகள் உள்ள சந்தர்ப்பங்களிலும் சபையில் தீர்மானிக்கப்படும் போது அல்லது விழாக்கள் விசேட ஏற்பாடுகள் சந்தர்ப்பங்களில் முடிவுகள் எடுக்கும் போது குறித்த விசேட ஏற்பாடுகள் சந்தர்ப்பங்களில் ஒழுங்கமைப்பாளரின் கோரிக்கையின் பேரில் அல்லது பொது நிலையங்களில் பாவனைக்காக நடமாடும் கழிவுகள் குப்பைத் தொட்டிகளை விநியோகித்தல்;

(ஈ) வதிவிடப் பிரதேசங்களில் பொருத்தப்பட்டுள்ள பொது கழிவுப் பொருள் குப்பைத் தொட்டிகள் அல்லது கொள்கலன்கள் சுகாதார முறைப்படி பராமரிப்புச் செய்து நடாத்தப்படவும் அதனருகில் வசிக்கும் மக்களுக்கு இடைஞ்சல்கள் ஏற்பட முன்னர் அக்குப்பைத் தொட்டிகளில் அல்லது கொள்கலன்களில் போடப்பட்டுள்ள கழிவுகளை அகற்றுதல்;

(உ) மேற்குறித்த பிரிவுகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் பற்றிய முறைப்பாடுகள் கிடைத்தவுடன் அவற்றை விசாரணை செய்து அவசரமாக செயற்படல்.

(ii) சபையால் விசேடமாக ஊத்தை, குப்பைக் கூளங்களை போடுவதற்காக விநியோகிக்கப்படும் குப்பைத் தொட்டிகளில் நீர்த்தன்மையுடைய, வியாபார, நிறுவன தொழிநுட்ப மற்றும் வேறு வகையான கழிவுகளை போட்டு வைத்தல் என்பன எவரொருவரும் செய்தல் கூடாது.

**மாநகர சபைகளின் கடமைகள்**

22. (i) ஆணையாளரால் நகராதிபதியுடன் கலந்துரையாடப்பட்டு சபையின் அனுமதியின் கீழ் கீழ்க்காணும் கருமங்களை திட்டமிடல், கண்காணிப்புச் செய்தல், கட்டுப்படுத்தல் மற்றும் பரிபாலனம் செய்தல் :-

(அ) கழிவுப் பொருட்களைக் குறைப்பதற்காக மீளப் பாவனைக்கு மீண்டும் மாற்று முறையில் பாவனைக்குரியதாக்கல் செய்தல்;

(ஆ) கழிவுப் பொருட்களை தேர்ந்து வேறாக்கல், ஒன்று சேகரித்தல், களஞ்சியப்படுத்தி விடுவித்தல், வெளியாக்கல் சம்பந்தமாக உணர்வுகளை ஏற்படுத்தும் செயல் முறைத் திட்டங்களை நடாத்தல், அல்லது ஊடகங்களின் மூலம் பிரசாரம் செய்தல்;

(இ) மீளப் பாவனை செய்யும் மாற்று முறையில் மீண்டும் பயன்படுத்தல் செயற்திட்டங்களில் ஈடுபாடுடைய சிறு வியாபார முயற்சியாளர்களுக்கு வசதிகள் செய்து கொடுத்தல்;

(ஈ) மேற்படி செயல் முறைத் திட்டங்களில் தொடர்புடையவர்களை ஊக்குவித்தல்;

(உ) கழிவுப் பொருட்கள் வெளியேற்றல் முறை பற்றிய வேறு விதத்திலான முறைகளைக் கையாளுதல்;

(ஊ) நகரத்தில் ஒவ்வொரு பிரதேசங்களிலுள்ள ஒவ்வொரு விதத்திலான கழிவுப் பொருள் வகைகளுக்காக சபையால் முடிவெடுக்கப்படும் பிரகாரம் கழிவுப்பொருட்களை சேகரிக்கும் திகதிகள், நேரங்கள், முறைகள் இன்னும் கட்டணங்கள், கழிவுப் பொருட்களை ஒன்று சேர்க்கும் கரும (வேலை) குறிப்பொன்று செய்தல் பகிரங்க விடுமுறை தினங்களில் கழிவுப் பொருட்களை சேகரிப்பதற்கான நிபந்தனைகள் என்பன அக்கரும குறிப்பு அட்டவணையில் உள்ளடக்கப்படல் வேண்டும்;

(எ) அதிகாரம் பெற்ற கழிவுப் பொருட்களை சேகரம் செய்பவருக்கு வேறாக ஒப்படைக்கப்படாத ஏதாவது வேறாக்கல் கழிவுப் பொருட்களை கால அட்டவணைக்கிணங்க குறித்த நேரத்தில் சேகரித்தல்;

(ஏ) அதிகாரம் பெற்ற கழிவுப் பொருட்களை சேகரம் செய்பவருக்கு வேறாக ஒப்படைக்கப்படாத ஆபத்திற்குரிய கழிவுப் பொருட்களையும் வேறேதாவது கழிப்பொருட்களையும் சுகாதார முறைப்படி கொண்டு செல்லல் ;

(ஐ) ஆபத்திற்குரியதான கழிவுப் பொருட்கள் அல்லது ஆணையாளரினால் குறிப்பிடப்பட்ட வேறேதாவது கழிவுப் பொருள் வகைகள் தவிர வீதியைக் கூட்டுவதனால் வடிகால்களை சுத்தப்படுத்துவதால், பொதுஇடங்ளை சுத்தம் செய்வதனால்சேகரமாகும் கழிவுகளை பொதுகுப்பைத் தொட்டிகளில் சேகரமாகின்ற கழிவுப் பொருட்கள் சபையின் தொழிலாளர்களால் சேகரம் செய்யப்படுகின்ற கழிவுப் பொருள்கள் அதிகாரம் பெற்ற கழிவுப்பொருள்கள் சேகரம் செய்பவருக்கு ஒப்படைத்தல்;

(ஒ) உணவு மற்றும் உயிரியல் மீளப் பாவிக்கக் கூடிய கழிவுப் பொருட்களை செயல் முறையில் முடியுமான வரை முழுமையாக அல்லது பகுதியாக ஒழுங்கமைக்க, செயற் படுத்த, வேலைத்திட்டமொன்றும் உட்பட நகர கழிவுப் பொருட்களை சேகரஞ் செய்பவர்களால் சேகரஞ் செய்யப் படும் வேறாக்கப்பட்ட கழிவுப் பொருட்கள்சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கவும் இச்செயல் முறைகளால் நிராகரிக்கப்படும் மற்றும் கழிவுப் பொருள் வகைகளின் வேறு விசேடமற்ற கழிவுப் பொருட்களையும் ஆணையாளரால் அனுமதிக்கப்படும் விதத்தில் அகற்றுவதற்கான ஏற்ற முயற்சிகள் மேற்கொள்ளல்;

(ஓ) மத்திய சுற்றாடல் அதிகார சபையுடன் கலந்துரையாடி ஆணையாளரால் அனுமதிக்கப்படுகின்ற விதத்தில் ஆபத்திற் குரிய அனைத்து கழிவுப் பொருட்களையும் அகற்றுதல்;

(ஔ) 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க அனுமதிப்பத்திரம் அல்லது சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரமொன்று பெற்றுக் கொள்ளுதலும் அவ்வனுமதிப்பத்திரத்தை அல்லது சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தில் விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குக் கீழ் கழிவுப் பொருட்களை எரித்தல் அல்லது சுகாதார முறைப்படி நிலங்களை கரைப்படுத்தல்;

(க) கழிவுப் பொருட்களை கூட்டுதல் சேகரம் செய்தல், தேர்ந்து வேறாக்கல், கொண்டு செல்லல் (வேறு இடத்திற்கு) மாற்றுதல், அகற்றுதல் போன்ற வேலைகளில் ஈடுபடுகின்ற ஊழியர் களுக்கு ஏற்ற உடைகள் கையுறைகள், முகமூடி, பூட், சப்பாத்து என்பன விநியோகம் செய்தல்;

(ச) வீடொன்று அல்லது வேறு இடமொன்றில் நிர்மானம் செய்தல் அல்லது புனர் நிரமானம் செய்தல் ஆகியவற்றுக்காக சபைக்கு விண்ணப்பப்பத்திரம் ஒன்று முன்வைத்திருக்கும் சந்தர்ப்பத்தில் நிர்மானித்தல் அல்லது புனருத்தாரனம் செய்தல் காரணமாக உண்டாகின்ற கழிவுப் பொருட்களை அகற்றும் விதம் மற்றும் குறிப்பிட்ட வேலைகளை ஆரம்பிக்கும் கட்டத்திலும் முடிக்கும் கட்டம் இடித்த கட்டிட கற்குவியல் களை, இடுபாடுகளை களஞ்சியப்படுத்தல், சரிபடுத்தல் அகற்றுதல் போன்ற ஏற்பாட்டு முறைகள் பற்றிய விபரங்களை பரிசீலனை செய்தலும் அனுமதித்தலும்;

(ட) சபையின் இடங்களுக்கான உள்ளகக் கழிவுப் பொருள்கள் முகாமைத்துவ திட்டங்களை ஆக்கஞ் செய்தல்;

(த) 2000 திண்ம கழிவுப் பொருள் முகாமைத்துவம் பற்றிய தேசிய உபாய வழிமுறைகள் இன்னும் உரிய சட்டங்களுக்கமைய விபரமாக குறைந்த பட்சம் ஒவ்வொரு கலண்டர் வருடம் பூரணமாகின்ற மற்றும் கடைசியான அகற்றுதல் சம்பந்தமாக 03 வருடங்கள் முன்நோக்கி பூரணமாகின்ற திண்ம கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ நடைமுறைத் திட்டங்களை ஆக்கஞ் செய்தலும் நடைமுறைப்படுத்தலும் அத்திட்டம் பூரணமாகின்ற கால எல்லைப் பிரகாரம் சபையால் வருடா வருடம் அனுமதித்தல்

(ப) (அ) முதல் (ப) வரையான பட்டியலிலுள்ள செயற்பாடுகள் சம்பந்தமாக கிடைக்கப்பெறுகின்ற ஏதாவதொரு முறைப்பாடு அது ஏற்புடையாவது ஏற்படப்போகும் இடைஞ்சலுக்காயின் மூன்று நாட்களுக்குள்ளும் வேறு முறைப்பாடுகளாயின் பதின்நான்கு நாட்களுக்குள்ளும் விசாரணை செய்தலும் உடனடியாக தேவைப்படும் நடவடிக்கை எடுத்தலும்.

### அனுமதிப்பத்திரங்கள்

23. (i) கழிவுப் பொருட்கள் மீளப் பாவனைக்கு எடுக்கப்படுகின்ற மற்றும் மாற்றம் செய்வதன் மூலம் பாவனைக்கு உட்படுத்துகின்ற சேதனப் பசளை, உயிரியல் வாயு, அல்லது வேறு உற்பத்திகள் உற்பத்தி செய்கின்ற எவரும் கீழ்க்காணும் விடயங்களைப் பூரணப்படுத்துவ தாயின் அக்கருமங்களுக்காக அவருக்கு சபையால் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படும் :-

(அ) சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உப யாப்பின் பிரகாரம் நகர பிரதேச எல்லைக்குள் அல்லது வேற உள்ளூராட்சி நிறுவன பிரதேசமொன்றில் ஏதாவது ஒரு வியாபாரத்தை நடாத்தல்;

(ஆ) 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் விநியோகிக்கப்படுகின்ற சுற்றாடல், பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் கைவசமிருத்தல்;

(இ) சேகரிக்கப்பட்ட கழிவுப் பொருட்களுக்காக சபையால் அனுமதிக்கப்பட்ட தரத்திற்கு ஏற்ப தீர்மானிக்கப்படுகின்ற கழிவுப் பொருட்கள் சேகரம் செய்யும் மையங்களை விநியோகித்தல்;

(ஈ) குறித்த வியாபாரம் நகர சபை எல்லைக்குள் நடாத்தப்படுவதாயின் சபையால் காலா காலத்தில் முடிவு செய்யும் பிரகாரம் அக்கழிவுப் பொருட்களை சேகரம் செய்வதற்காக கட்டணமொன்றை ஆணையாளருக்கு செலுத்துவதன் மூலம் கழிவுப் பொருட்களை ஒழுங்காக்கும் போது அல்லது எரிக்கும் போது மீதமாகின்ற அல்லது நிராகரிக்கப்படுகின்ற அல்லது உப உற்பத்தியாக்கஞ் செய்கின்ற கழிவுகளை சபை அனுமதிக்கும் பிரகாரம் சபைக்கு ஒப்படைக்க இணங்குதல்;

(ii) சபை அனுமதிப்பத்திரம் வழங்குவதை நிராகரிக்குமிடத்து மறுத்தல் செய்யுமிடத்து அவற்றிற்கான காரணத்தை விண்ணப்பதாரர் கேட்பதாயின் 30 தினங்களுக்குள்அதற்கான காரணத்தை எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்;

(iii) ஆணையாளரால் செல்லுபடியாகும் காலப் பகுதிக்குள் சேகரம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்ட கழிவுப் பொருள் வகைகளை அல்லது குறித்த கழிவுப் பொருட்களை சேகரம் செய்வதற்கு அனுமதியளிக் கப்படுகின்ற பிரதேசங்களும் வேறு ஏற்ற நிபந்தனைகளும் அனுமதி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்;

(iv) இத்துணைவிதியின் (i) உப பிரிவின் கீழான ஏற்பாடுகளுக்கமைய செயற்படாதவிடத்து இத்துணைவிதியின் கீழ் விநியோகம் செய்யப்பட்ட அனுமதிப்பத்திரம் செல்லுபடியற்றதாகுதல் வேண்டும்.

(v) (iv) வது உப பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் அனுமதிப்பத்திரம் ஒன்று செல்லுபடியற்றதாக்கிய சந்தர்ப்பத்தில் எவரொருவராவது கழிவுப் பொருட்களை சேகரம் செய்யவோ அல்லது பெற்றுக் கொள்ளவோ செய்யாதிருத்தல் வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் அனுமதிப்பத்திரத்தை செல்லுபடியாக்கியுள்ளமை பற்றி பொது மக்கள் அறிந்து கொள்ளும் வண்ணம் ஆணையாளர் ஊடகங்கள் மூலமாக போதிய அளவு பிரசாரம் செய்தல் வேண்டும்.

### கழிவுப் பொருட்களை ஒதுக்கித் தள்ளிவிடக்கூடிய பிரதேசங்கள்

24 சபையால் கழிவுப் பொருட்களை ஒதுக்கித்தள்ளி விடக்கூடிய விடயத்திற்காக ஒதுக்கப்பட்ட பிரதேசத்திற்கு அதிகாரம் பெறாத ஒருவர் உட்பிரவேசிக்கக்கூடாது. அத்துடன் நடமாடாதிருப்பதுடன் அப் பிரதேசத்தில் பொருளொன்றைப் பாத்திரம் ஒன்றை எறிகின்ற பொருளொன்றை வைத்தல் கலத்தல் அகற்றல் செய்தல் கூடாது. எவரும் விசேடமாகக் குறிப்பிடப்படும் நிபந்தனைகளின் பிரகாரம் சபையால் அனுமதி அளிக்கப்பட்டாலான்றி சபையால் காலாகாலத்தில் உத்தரவிடும் தடைசெய்யப்பட்ட கழிவுப் பொருட்களை போடாதிருத்தல் வேண்டும்.

25. அனுமதிக்கப்படும் ஏதாவது நிபந்தனையின் கீழ்ஆணையாளரின தும் மத்திய சுற்றாடல் அதிகாரியின் எழுத்தினாலான முன் அனுமதியின்றி எவரும் மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள எந்தவிடத்திலும் அல்லது வசதியான அதற்குப் புறம்பான இடமொன்றில் உண்டாகின்ற (சேகரமாகும்) கழிவுப்பொருட்களை போடுவதற்காக விநியோகம் செய்தல் பிரயோசனப்படுத்தல் கூடாது.

### ஏனையவைகள்

26. (i) ஆணையாளருக்கு அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட ஒருவருக்கு அனைத்து சாதாரண நேரங்களிலும் எந்தவொரு இடத்தினுள் உட்பிரவேசிக்கவும் அதன் உரிமையாளர் அல்லது வசிப்பவர் இவ் யாப்பின் ஏற்பாடுகளுக்கமைய செயல்படுகின்றாரா என பரிசீலனை செய்யவும் அதிகாரமுண்டு.

(ii) ஏதாவது இடத்தின் உரிமையாளர், வசிப்பாளர், பொறுப்பாளர், முகாமையாளர் அல்லது அதில் வசிக்கும் அல்லது வேலை செய்யும் ஒருவர் ஆகிய எவராவதுஆணையாளருக்கு அல்லது அதிகாரம் பெற்ற அதிகாரி ஒருவருக்குத் தேவைப்படும் தகவல்களை முன்வைத்தல் வேண்டும்;

(iii) இத்துணைவிதியின் கீழ் ஆணையாளருக்கு அல்லது அதிகாரம் பெற்ற அதிகாரி ஒருவருக்கு தமது அதிகாரங்களைப் பாவிக்கும் போது எவரும் இடைஞ்சல்கள் செய்யக்கூடாது.

27. சபையால் காலா காலத்தில் எடுக்கப்படும் முடிவுகளின் பிரகாரம் இவ் யாப்பை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் பெற்ற அதிகாரிக்கு ஊக்குவிப்புப்படிகளைப் பெற முடியும்.

28. இத்துணைவிதியின் எந்தவொரு ஏற்பாட்டையாவது மீறுகின்ற எவருக்கும் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் குற்றத்திற்கு குற்றவாளியாகின்றார்.

### பொருள் கோடல்

29. இத்துணைவிதியின் கருமங்களுக்காக வசனங்களுக்கு பொருள் கோடல் சம்பந்தமாக வேறு பொருள்கள் தேவைப்பட்டாலன்றி,

''கழிவுப் பொருட்கள் அல்லது திண்ம கழிவுப் பொருட்கள்'' என்பது அதை அகற்றுபவருக்கு நுகர்வுப் பெறுமதியற்ற பொருள் என்பதுடன் குப்பை கூளம், சிதறிக்கிடக்கும் பொருட்கள், ஊத்தை, பாதைகளை சுத்தப்படுத்தும் போது சேகரமாகும், கழிவுப் பொருட்கள், தூசிகள், மலம், வேறு மற்றும் சாம்பல் என்பன பொருள்படும்;

''உணவுக் கழிவுகள்'' மனிதனின் நுகர்வுக்கு பிரயோசனப்படுத்த முடியாத இறைச்சி, மீன், கோழி இறைச்சி, முட்டை, மரக்கறிவகைகள், பழவகைகள் மற்றும் ஏனைய உணவுப் பொருள்களாகும்.

''ஆபத்திற்குரிய கழிவுகள்'' என்பது மக்களின் சுக வாழ்வுக்கு அல்லது சுற்றாடலுக்கு இடைஞ்சல் நஷ்டம் விளைவிக்கும் நச்சுத்தன்மையுடைய எரியக்கூடிய, நோய்களைப் பரப்புகின்ற, அரித்துத் திண்ணக்கூடிய இரசாயன மாற்றமுடைய, கதிரியக்கத் தன்மையுடைய கழிவுகள்.

''சேகரித்தல்'' என்பது அதிகாரம் பெற்ற சேகரிப்பாளர் அல்லது நகர கழிவுப் பொருட்கள் சேகரிப்பாளர் என்போரால் குப்பை கூளங்களை, கழிவுப் பொருட்களை மீண்டும் பயன்படுத்துவதற்கு ஏற்றதான, பதனஞ் செய்வதற்குரியதான, எரித்தலுக்கான கழிவுகளை கொண்டு செல்வதற்கான வசதிகளுக்கு கழிவுப் பொருட்களை சேகரித்தலாகும்.

'கலப்பு உரம்'' காபனிக் கழிவுப் பொருள்கள் உயிர் சேதனமாகியதன் பின்னர் கிடைக்கப்பெறும் உற்பத்தி எனப்படும். இவை மண்ணை வளமாக்கு தன்மையை அடைகின்றது.

''காரியதரிசி'' என்பது நகரம் சம்பந்தப்பட்டவரை மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அதிகாரம்) கீழ் மாநகரத்திற்காக தாபிக்கப்பட்ட நகர சபையின் ஆணையாளரைக் குறிப்பிடுவ தாகும். இன்னும் அந்நகர சபையின் ஆணையாளருக்குப் பதிலாக நியமிக்கப்பட்ட ஒருவராவார் மற்றும் நகர சபை கட்டளைச் சட்டத்தின் கீழ் ஆணையாளரின் அதிகாரங்கள் கடமைகள் கருமங்கள் என்பனவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு அல்லது செய்வதற்கு அதிகாரம் அளிக்கப்பெற்ற அச்சபையின் உத்தியோகத்தர் ஒருவர் அதிகாரம் அளிக்கப்பட்ட அளவில்.

''களஞ்சியப்படுத்தல்'' என்பது உரித்தாளர்களுடைய அல்லது வசிப்பாளரின் இடத்தினுள் அல்லது அனுமதிக்கப்பட்ட பொது சேகரிக்கும் இடத்தில் கழிவுப் பொருள்களைப் போடுதல் அல்லது வைத்தல்.

''கட்டணம்'' என்பது சபையால் காலாகாலத்தில் தீர்மானிக்கப் படுகின்ற ஏதாவது ஒன்றுக்கான கட்டணமாகும்.

''வீட்டுத் தோட்டக் கழிவுகள்'' என்பது வீட்டுத் தோட்டத்திலுள்ள மரங்களிலிருந்து அல்லது கன்றுகளிலிருந்து அகற்றப்படும் (கிளைகளும்) பகுதிகளும் வீட்டுத் தோட்டத்திலிருந்து அகற்றப்படுகின்ற கற்கள், மண் என்பன.

''உயிர் சேதனக் கழிவுகள்'' என்பன கிருமிகளால் அரிக்கப்பட்டு உக்கிப் போன கழிவுகள்.

''பொது இடங்கள்'' என்பன பாதை ஒன்று திடலொன்று, பொது நிலம் ஒன்று பாதைப் பாதுகாப்பு ஓரங்கள், ஆறு, நீர் ஓடையொன்று, பொதுக் கட்டிடம் ஒன்று, மயானம் ஒன்று, பஸ் தரிப்பிடமொன்று, புகையிரத நிலையமொன்று, தடாகமொன்று, நீர்த் தேக்கமொன்று, குளமொன்று. களப்பொன்று, உப ஆறொன்று, நீரோடை ஒன்று, கடல், கடற்கரை, பொது மக்களால் பிரயோசனப்படுத்தப்படும் இடங்கள்.

''மாற்று வடிவமைப்பான கழிவுப் பொருள்கள்'' என்பன கழிவுப் பொருட்களை கழிவுப் பொருளென இனங்காண முடியாதபடி சுய தன்மையை மாற்றி புது நுகர்வு உற்பத்தி (வாடிக்கை) ஒன்றாகச் செய்யும் கழிவுப் பொருட்கள்.

''மீளப் பாவிக்கக்கூடிய கழிவுப் பொருள்கள்'' என்பது கழுவுவதால், கிருமிகள் அழிதல் அல்லது வேறு முறைகளால் சுத்தம் செய்த பின்னர் பிரயோசனப்படுத்தக்கூடிய பொருள்கள் என பொருள்படும்.

''போக்குவரத்து'' என்பது மனிதர்களால், மிருகங்களால் அல்லது இயந்திரத்தினால் செயற்படுத்தப்படுகின்ற முறைகள் மூலம் கழிவுப் பொருட்களை ஒன்று சேர்க்கும் இடத்தில் இருந்து அவற்றைப் பதப்படுத்துதல், வெளியாக்குதல் என்பவற்றுக்காக குறிப்பிட்டுள்ள இடத்திற்கு கொண்டு செல்லுதல் எனப் பொருள்படும்.

''தொட்டி/பாத்திரங்கள்/வேறு உறைகள்'' என்பது உப யாப்பில் குறிப்பிட்டுள்ள தேவைகளுக்கேற்ப கழிவுப் பொருட்களைக் களஞ்சியப்படுத்தல், விடுவித்தல், ஒன்று சேர்த்தல், கொண்டு செல்லுதல் என்பவற்றிற்காக பாவிக்கப்படும் தொட்டியொன்று, பாத்திரமொன்று, உறையொன்று அல்லது வேறு இடக்கூடிய பொருட்கள் எனப் பொருள்படும்.

''அதிகாரம்பெற்ற சேகரிப்பாளர்'' என்பது கழிவுப் பொருட்களை சேகரிப்பதற்கு அல்லது பெற்றுக் கொள்வதற்கு ஆணையாளர் அவர்களால் அனுமதிப்பத்திரம் ஒன்று பெற்றுக் கொண்ட ஒருவர் ஆவார் எனப் பொருள்படும்.

''அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்'' என்பது இத்துணைவிதியின் கீழ் ஏற்பாடாகியுள்ள அரச கருமங்களை செய்வதற்கு அல்லது செயற்படுத்துவதற்கு ஆணையாளரால் எழுத்து மூலம் அதிகாரம் பெற்ற ஒருவர் எனப் பொருள்படும்.

''வெளியாக்குதல்'' என்பது மீண்டும் பாவிக்க முடியாததும் மாற்று முறைகளைக் கையாள முடியாததும் பிரயோசனப்படுத்த முடியாததுமான அனைத்துக் கழிவுப் பொருட்களையும் நிரந்தரமாக வேறுபடுத்தி வைப்பதற்கு காணியொன்றின் மீது அல்லது காணியொன்றினுள் சேகரித்து வைத்தல் எனப் பொருள்படும்.

''மாற்றக்கூடிய இடங்கள்'' என்பது சபையால் இக்கருமங்களுக்காக குறிப்பிடப்படும் இடம் எனப் பொருள்படுவதுடன் அவ்விடத் திலிருந்து மீளப்பாவிப்பதற்கும், சரிப்படுத்துவதற்கும், வெளி யாக்குவதற்கும் வசதியாக கழிவுப் பொருட்களை எடுத்துச் செல்வதற்கு திறமைவாய்ந்த முன்னேற்றமடையக்கூடியதுமான கழிவுப் பொருட்களை மிகவும் சிறியதளவிலான வாகனங் களிலும் பெரிய வாகனங்களிலும் வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லும் இடம் எனப் பொருள்படும்.

''ஒரு நபர்'' என்பது கூட்டமைக்கப்பட்ட அல்லது கூட்டமைக்கப்படாத கம்பனியொன்றின் அல்லது பல நபர்களைக் கொண்ட சங்கம் ஒன்றின் குழுவெனவும் பொருள்டும்.

''நகர கழிவுப் பொருட்களை ஒன்று சேகரிப்பவர்'' என்பது தொட்டிகளுக்கும், பாத்திரங்களுக்கும் கழிவுப் பொருள்களைக் கூட்டிப் போடுதல், ஒன்று சேர்த்தல், பெற்றுக் கொள்ளல்,

வெளியாக்குதல் போன்ற கருமங்களுக்காக சபையினால் ஈடுபடுத்தப்படுகின்ற ஊழியர் ஒருவர் அல்லது இக்கருமங்களை செய்வதற்காக சபையுடன் ஒப்பந்தமொன்றிற்கு உடன்பட்டிருக்கும் ஒருவர் எனப் பொருள்படும்.

''வேறாக்கல்'' என்பது இவ் யாப்பில் அமைக்கப்பட்டுள்ள தன்மைகள், விதிமுறைகளுக்கேற்ப கழிவுப் பொருட்களை வெவ்வேறாக தேர்ந்து வேறாக்கல் எனப் பொருள்படும்.

''ஒழுங்குபடுத்தல்'' என்பது கழிவுப் பொருட்களை பிரயோசன முடைய நிலமைக்கு மாற்றக்கூடிய வழிமுறைகள் எனப் பொருள்படும்.

''சபை'' என்பது ........ மாநகர சபை எனப் பொருள்படும்.

''நகரப் பிரதேசம்'' என்பது மாநர சபை கட்டளைச் சட்டத்தின் (252 ஆவது அதிகாரம்) அதிகாரத்தின்கீழ் பிரகடனப்படுத்தப்படு கின்ற பிரதேசம் எனப் பொருள்படும்.

''சுகாதார முறையில் நிலங்களை நிறைத்தல்'' என்பது அந்நிலங் களை அண்டிய சமூக சுகாதார மற்றும் சுற்றாடல் ஆகியவற்றின் பிரதிபலிப்புக்களைக் குறைப்பதற்கு இலங்கையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கட்டளைகளுக்கு இணங்க (தரம்) கழிவுப் பொருட் களை நிலத்தினுள் கடைசியாக புகைத்தல் எனப் பொருள்படும்.

''உரிமையாளர் அல்லது வசிப்பாளர்'' என்பது ஓரிடத்தில் உரிமை யாளர் அல்லது உரிமையாளருக்காக அற்றோனி அதிகாரம் பெற்ற ஒருவர் அல்லது உரிமையாளரால் தனது கைத்தொழிலை அல்லது கைத்தொழிற்சாலை என்பவற்றின் முகாமைத்து வத்திற்காக நியமனம் செய்யப்பட்ட பிரதிநிதியொருவர் அல்லது பொறுப்பாளர் ஒருவர் அல்லது வாடகைக்கு பெற்ற ஒருவர் ஆகியோர் உட்படுவதுடன்வேறு நபர்களின் உத்தரவின்கீழ் செயல்படுகின்ற முகாமையாளர் ஒருவர் எனப் பொருள்படும்.

*4-88/2*

---

## நகர சபைகள் அதிகாரப் பிரிவுகளுக்குள் நுளம்புகளையும் நோய்க் கிருமிகளையும் இல்லாதொழித்தல் பற்றிய துணைவிதிகள்

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கமுடைய மாகாண சபைகள் (நேர் எதிர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கமுடைய உள்ளூராட்சி நிறுவனங்கள் (அங்கீகரிக்கப்பட்ட உப யாப்புக்கள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின்கீழ் உள்ளூராட்சி விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் என்னால் ஆக்கப்பட்ட கீழ்க்காணப்படும் நகல் உப யாப்புக்கள் மேற்கண்ட பிரிவின்கீழ் இவ்வாறு பிரகடனப்படுத்தப்படுகின்றது.

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (255 ஆவது அதிகாரம்) 153 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் 157 ஆவது பிரிவின் 9 ஆவது உப பிரிவின் (ஏ) பந்தியில் நுளம்புகளையும் நோய்க் கிருமிகளையும் அழித்தல் பற்றிய உப யாப்பை சட்டமாக்குவதற்கு நகரசபைக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருப்பதுடன் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கமுடைய உள்ளூராட்சி நிறுவனங்கள் (அங்கீகரிக்கப்பட்ட உப யாப்பு) சட்டத்தின் 3 ஆவது பிரிவின் பிரகாரம் இவ் அங்கீகரிக்கப்பட்ட உப யாப்பை ஏற்றுக்கொள்வதற்காக தென் மாகாணத்தின் நகர சபைகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி விடயங்களுக்கு
பொறுப்பான அமைச்சர்,
தென் மாகாணம்.

*2012.05.21.*

### துணைவிதிகள்

இத்துணைவிதிகள் நகர சபைகள் அதிகாரப் பிரிவுக்குள் நுளம்புகள் மற்றும் நோய்களைப் பரப்பும் கிருமிகள் பெருகுவதை தடுத்தல், அவற்றினை அழித்தொழித்தல் மூலம் அதிகாரப் பிரிவின் சுற்றாடலை மேம்படுத்துவதற்கும், பரவும் நோய்கள் வியாபித்தலை தடுப்பதற்குமான உப யாப்புக்கள் என அழைக்கப்படுகின்றது.

2. நகர சபைகள் அதிகாரப் பிரிவிற்குள் எவரொருவராலும் எந்த இடத்திலும் நுளம்புகள் அல்லது நோய்களுக்கு காரணமாகின்ற கிருமிகள் பெருகுதல் மற்றும் விருத்தியாகுதல் என்பவைகளுக்கு ஏதுவாகின்ற கருமங்களைச் செய்தல் அல்லது செய்வித்தல் அல்லது அவ்வாறு நடைபெற இடமளித்தல் என்பன செய்யப்படக் கூடாது.

3. நுளம்புகளையும் நோய்களுக்கு காரணமாகின்ற கிருமிகளையும் அழிப்பதற்காக நகர சபைகள் அதிகாரப் பிரிவிற்குள் உள்ள அனைத்து இடங்களில் வசிப்பவர்கள் அனைவரும் -

(அ) அனைத்து திறந்த நிலையிலுள்ள புட்டிகள், போத்தல்கள், பெட்டிகள், பிளாஸ்டிக் கொள்கலன்கள், டயர்கள், தேங்காய்ச் சிரட்டைகள், தேங்காய்க் கோம்பைகள் மற்றும் அவ்விடத்திலுள்ள நீர் தேங்கி நிற்கக்கூடிய பாண்டங்கள், பொருட்கள் என்பவற்றை அகற்றுவதற்கு அல்லது அழிப்பதற்கு அல்லது அவ்வாறு செய்விப்பதற்கு ஏற்பாடுகள் செய்தல் வேண்டும்.

(ஆ) வசிப்பிடம் அல்லது வசிப்பிடமல்லாத கட்டிடங்களின் மழைப் பீளிகள், தண்ணீர் வழிந்தோடும் குழாய்கள் மற்றும் வீட்டுத் தோட்டங்களில் உள்ள வடிகால்களில் தண்ணீர் வழிந்தோடுவதற்கான வழிவகை செய்தல் வேண்டும். அதற்கான தடைகள் இருப்பின் பரிசீலனை செய்து நீக்குதல் வேண்டும்.

(இ) வசிப்பிடம் அல்லது வசிப்பிடமல்லாத இடங்களிலுள்ள அனைத்து நீர்ப்பாண்டங்கள், தண்ணீர்த் தாங்கிகள், தண்ணீரைச் சேமிக்கும் வேறு பாண்டங்கள், சிறந்த நிலையில் இருக்கவேண்டியதுடன் உரிய காலத்தில் புனருத்தாரணம் செய்யப்பட்டிருப்பதுடன் அவை நுளம்புகள் மற்றும் கிருமிகள் என்பவற்றிலிருந்து பாதுகாக்கப்படக்கூடிய விதத்தில் மூடிவைக்கப்பட வேண்டியதுடன் அவற்றினுள் நுளம்புகள் அல்லது கிருமிகள் பெருகுவதை தடுக்கக்கூடிய விதத்தில் வைத்திருத்தல் வேண்டும். அத்துடன் நுளம்புகள், கிருமிகள் பெருகுவதை தடுப்பதற்கான வழிமுறைகளையும் செய்தி ருத்தல் வேண்டும்.

(ஈ) வளவுகளில் உள்ள கிணறுகள் நல்ல நிலையில் அமைந்திருக்க வேண்டியதுடன் நுளம்புகள் மற்றும் நோய்க் கிருமிகள் பெருகாவண்ணம் பாதுகாத்தல் வேண்டும்.

(ஊ) வெற்றாக்கக்கூடிய விதத்தில் ஆக்கஞ்செய்யப்பட்ட செயற்கை தடாகங்கள் இருப்பின் அவற்றை குறைந்தபட்சம் கிழமைக்கு ஒரு முறையாவது வெற்றாக்கிச் சுத்தப்படுத்துதல் வேண்டும்.

(ஊ) வீட்டுத் தோட்டங்களிலும் காணிகளிலும் உள்ள மதகு களினால் வழிந்தோடும் நீர் ஒன்றுசேர்வதால் நீர்க்குழிகள் ஏற்படுவதை தடுப்பதற்காக அவற்றை தினந்தோறும் பராமரித்தல் வேண்டும்.

(எ) உணவுக்காக அல்லது அலங்காரத்துக்காக விளைவிக்கப் படும் (வளர்க்கப்படும்) தாவரங்களைத் தவிர ஏனைய அனைத்து பற்றைக் காடுகளையும், மரங்களையும் மனிதர்கள் வாழுகின்ற இடங்களாகப் பாவிக்கப்படும் கட்டிடங்கள் அல்லது நிர்மாணங்களில் இருந்து 5 மீட்டர்களுக்கு உட்பட்ட பகுதிகளில் இருந்து அகற்றுதல் வேண்டும்.

(ஏ) அனைத்து கற்குழிகள், மாணிக்கக் கற்களுக்காகத் தோண்டப்பட்ட குழிகள், மட்குழிகள் அல்லது வேறு விடயங்களுக்காக தோண்டப்பட்ட குழிகள் ஆகியவை தண்ணீர் சேகரமாகுவதை தடுக்கும் விதத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.

(ஐ) நீர் நோய்கள் கூடிய கரை நிலங்களில் உண்டாகின்ற (வளர்கின்ற) அலங்காரத் தாவரங்கள், பாசி வகைகள், யானைக்கால் நோய்ப் பாசி உட்பட நீர்த் தாவரங்களும், நுளம்புகள், கிருமிகள் விருத்தியாவதற்கு ஏதுவாகின்றதென அறியக்கூடிய வேறு தாவரங்கள் என்பவற்றை அகற்றி அழிக்கவேண்டியதுடன் அத்தாவரங்கள் தண்ணீர் ஓடும் வழியாக மிதந்து செல்வதை தடைசெய்ய தடுப்புகள் அமைத்தல் வேண்டும்.

(ஒ) மலசல கூடங்கள், தண்ணீர்க் குழிகள், தண்ணீரை உறிஞ்சக்கூடிய குழிகள் மற்றும் அவற்றை சூழவுள்ள அவ்விடத்திலுள்ள அனைத்து மலசலகூடங்களிலும் நுளம்புகள் விருத்தியாவதை தடுக்கும் விதத்தில் நடாத்தல் வேண்டும்.

(ஓ) மயானம் அல்லது வேறு இடங்களில் மரணித்தவர்களின் ஞாபகார்த்தமாக கட்டப்படும் சமாதிகள் தண்ணீர் தங்காத விதத்தில் நிர்மாணிக்கப்படல் வேண்டும்.

4. நகர சபையின் தலைவர் அவர்களால் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட ஓர் உத்தியோகத்தரால் எந்தவொரு நாளிலும் மு. ப. 6.00 முதல் பி. ப. 6.00 மணி வரை உள்ள காலப்பகுதியில் ஓரிடத்தில் பிரவேசித்து கீழ்க்காணும் விடயங்களை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக அவ்விடத்தை பரிசீலனைக்கு உட்படுத்துவது கட்டாயமானதாகும் :-

(அ) அவ்விடம் நுளம்புகள், கிருமிகள் விருத்தியாகக்கூடியதா என்பது பற்றி,

(ஆ) அவ்விடத்தில் வசிப்பவர்கள் இத்துணைவிதியின் ஏற்பாடு களைப் பின்பற்றுகின்றனரா என்பது பற்றி,

(இ) அவ்விடத்தில் நுளம்புகள் விருத்தியாவதை தடுப்பதற்கு மற்றும் அழிப்பதற்கு ஏதாவதொரு முயற்சி எடுக்க வேண்டுமாயின் அம்முயற்சி (செயற்பாடு) எவ்வாறானது என்பது பற்றி,

(ஈ) அவ்விடத்தில் கிருமிநாசினி தெளித்தல் சிறந்த முறையில் நடைபெற்றுள்ளதா என்பது பற்றி,

5. (அ) தலைவர் அவர்களால் அல்லது அவரால் இக்கருமங் களுக்காக எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவரால் ஓர் இடத்திற்கு தேவைப்படும் எனக் கருதப்படும் பரிசீலனை ஒன்றின் பின் அவ்விடத்தில் நுளம்புகள், கிருமிகள் என்பவற்றை அழிப்பதற்கும் விருத்தியாதலைத் தடுப்பதற்கும் செய்யவேண்டிய வழிமுறைகளை எழுத்திலான அறிவித்தல் ஒன்றின் மூலம் அவ்விடத் தின் உரிமையாளர் அல்லது வசிப்பாளருக்கு உத்தரவிட முடியும்.

(ஆ) இத்துணைவிதியின் (அ) ஆவது பந்தியின்கீழ் அறிவித்தல் ஒன்று கையளிக்கப்பெற்ற இடமொன்றின் உரிமையாளரால் அல்லது வசிப்பாளரால் அவ்வறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள் அவ்வுத்தரவை நிறைவேற்றல் வேண்டும்.

6. (அ) தலைவர் அவர்களின் எழுத்துமூலமான அனுமதி இன்றி ஏதாவது ஓர் இடத்தின் உரிமையாளர் அல்லது வசிப்பாளர் அதில் ஒரு கிணறு கட்டுதல் அல்லது நீர்த்தாங்கி ஒன்று, தடாகம் ஒன்று, நீர்ப்பாத்திரம் ஒன்று, நீர்ப்பு அல்லது நீர் சேகரமாகும் அல்லது நீர் தங்கும் வேறு அமைப்புகளை நிர்மாணித்தல் கூடாது.

(ஆ) இத்துணைவிதியின் (அ) ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு மாற்றமாக நிர்மாணம் ஒன்று செய்யுமிடத்து தலைவர் அவர்களால் அவ்விடத்தின் உரிமையாளருக்கு அல்லது வசிப்பாளருக்கு கையளிக்கப்படும் எழுத்திலான அறிவித்தல் ஒன்றின் மூலம் அவ்வறிவிப்பில் குறிக்கப்பட்டுள்ள காலத்திற்குள் கிணற்றை அல்லது நீர்த்தாங்கியை, தடாகத்தை, நீர்ப்பாத்திரத்தை, நீர்ப்புவை அல்லது அமைப்பை குறித்த பொருட்களால் நிறைத்து மூடும்படி அல்லது வேறு விதத்தில் அழித்து விடும்படி அல்லது அக்காலத்தினுள் அறிவித்தலில் உத்தரவிடப்பட்டுள்ள பிரகாரம் அதை மாற்றஞ் செய்யும்படி உத்தரவிட முடியும்.

7. (அ) 5 ஆவது அல்லது 6 ஆவது உப யாப்பின்கீழ் உள்ள அறிவித்தல் ஒன்றை ஓர் இடத்தின் உரிமையாளருக்கு அல்லது வசிப்பாளருக்கு நேரடியாக கைளித்தல் அல்லது அவ்வறிவித்தலை அவ்விடத்தில் பார்வைக்குத் தெரியக்கூடிய விதத்தில் ஒட்டுதல் அல்லது ஒப்படைத்தல்.

(ஆ) ஓரிடத்தில் கூட்டு உரிமையாளர்கள் இருவர் அல்லது அதற்குகூடிய எண்ணிக்கையானோர் வசிப்பிடமாகக் கொண்டிருப்பின் அவ்வுரிமையாளர்களில் ஒவ்வொரு உரித்தாளரும் 7(1) உப யாப்பினதும் 5 ஆவது உப யாப்பினதும்கீழ் அவர்களுள் ஒருவருக்கு ஒப்படைக்கப்படும் அறிவித்தலின் உத்தரவுகளை செயற்படுத்துவது சம்பந்தமாக உதாசீனம் செய்தல் அல்லது செய்யாது இருத்தல் என்பவற்றிற்கு பொதுப்படை யாகவும் தனித்தனியாகவும் பொறுப்புடையவராகின்றார்.

(இ) 5 ஆவது அல்லது 6 ஆவது உப யாப்பின்கீழ் அறிவித்தல் ஒன்றை பெற்றுக்கொண்ட இடமொன்றின் உரிமையாளர் அல்லது வசிப்பாளர் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்தினுள் அவ்வறிவிப்பிலுள்ள உத்தரவுகளை உதாசீனம் செய்யும் சந்தர்ப்பத்தில் தலைவர் அவர்களால் அல்லது அவ்விடயத்திற்காக தலைவர் அவர்களால் அதிகாரமளிக்கப் பட்ட வேறொரு உத்தியோகத்தர் ஒருவரால் எந்தவொரு நாளிலும் மு. ப. 6.00 மணி முதல் பி. ப. 6.00 மணி வரையான நேரத்தினுள் தேவைப்படுகின்ற உதவியாளர்களுடனும், ஊழியர் களுடனும் அவ்விடத்தினுள் புகுந்து அவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள கருமங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் நடைமுறைப்படுத்தச் செய்வதற்கும் அல்லது நடைமுறைப்படுத்த ஒழுங்குசெய்வதற்கும் முடியும்.

(ஈ) எந்தவொரு இடத்தினது உரிமையாளருக்கு அல்லது அவ்விடத்தின் வசிப்பாளருக்கு 5 ஆவது அல்லது 6 ஆவது உப யாப்பின்கீழ் ஒப்படைக்கப்பட்ட அறிவித்தல் ஒன்றில் குறிப்பிட்டுள்ள ஏதாவதொரு கருமத்தை அல்லது கருமங்களை தலைவர் அவர்களால் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட அதிகாரி ஒருவரால் நடைமுறைப்படுத்தியபோது அல்லது செய்தபோது அக்கருமத்தை அல்லது கருமங்களை நடைமுறைப்படுத்தும்போது நகரசபைக்கு ஏற்பட்ட செலவினங்களை அவ்விடத்தின் உரிமையாளர் அல்லது வசிப்பாளர் நகர சபைக்கு செலுத்துதல் வேண்டும். தலைவர் அவர்களால் தமது கையொப்பத்துடனான அது பற்றிய எழுத்திலான வேண்டுகோளின் பின்னர் 14 நாட்களுக்குள் அப்பணத்தை உரிமையாளர் அல்லது வசிப்பாளர் நகரசபைக்கு செலுத்த வேண்டியதுடன் அவ்வாறு இன்றேல் நகரசபை கட்டளைச் சட்டத்தின் 9 ஆவது (உப) பிரிவின் ஏற்பாடு ஏற்புடையதாகின்றது.

8. இத்துணைவிதிகளில் ஏதாவதொரு ஒழுங்கமைப்பை மீறுகின்ற எவரொருவரும் நகரசபைகள் சட்டத்தின் பிரகாரம் குற்றத்திற்கான குற்றவாளி ஆகின்றனர்.

9. சொற்கள் தொடர்பாக வேறொரு பொருள் கோடல் தேவைப்பட்டாலன்றி இவ்வுப யாப்புகளில் -

"உரிமையாளர்" என்பது எந்தவொரு உரிமையாளர் அல்லது வரி செலுத்துபவரும் இடமொன்றில் வாடகைக்கு அல்லது பிரயோகத்திற்கு ஆகிய எவ்விதத்திலோ உரிமைக்கு உரித்துக்கோருபவர்.

"குடியிருப்பாளர்" என்பது ஓரிடத்தில் குடியிருக்கும் அல்லது வேறொருவரின் பிரதிநிதியாக இருப்பவர் அல்லது பொறுப்புடைய முகாமையாளராக அல்லது பரிபாலிப்பவர்.

"இடம்" என்பது ஓர் இடம், ஒரு வீடு, கட்டிடமொன்று அல்லது நிர்மாணம் ஒன்று பாவனையிலுள்ள அல்லது கைவிடப்பட்ட கிணறு ஒன்று, கப்பல் ஒன்று, கொள்கலன் ஒன்று அல்லது கைவிடப்பட்ட வாகனம் ஒன்று அடங்குவதுடன் ஒரு தடாகம், நீர்த்தாங்கி, வாவி நீர் வழியொன்று மதகொன்றின், ஆறொன்றின் ஓரங்கள் என்பனவும் அடங்கும்.

"அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்" என்பது தலைவர் அவர்களால் எழுத்துமூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட அச்சபையின் ஓர் உத்தியோகத்தர் அல்லது ஓர் ஊழியர்.

"நோய்க் காரணி கிருமிகள்" என்பது நுளம்புகள், நோய்களைப் பரப்பும் வேறு கிருமிகள்.

"தலைவர்" என்பது உரிய நகர சபையின் தலைவர் ஆவார்.

"சபை" என்பது .................................... நகரசபையாகும்.

4-88/3

---

**திண்ம கழிவுப்பொருட்கள் பற்றிய துணைவிதி**

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கமுடைய மாகாண சபைகள் (நேர் எதிர்விளைவுகள் ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது வாசிக்கப்பட வேண்டிய 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கமுடைய உள்ளூராட்சி நிறுவனங்கள் (அங்கீகரிக்கப்பட்ட உப யாப்பு) சட்டத்தின் 2 ஆவது பிரிவின்கீழ் மாகாண உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் என்னால் ஆக்கப்பட்டு கீழே காணப்படும் நகல்கள் உப யாப்பு மேலே குறிப்பிட்ட பிரிவின் பிரகாரம் இவ்வாறு பிரசுரிக்கப்படுகிறது.

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 153 ஆவது பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய குறித்த கட்டளைச் சட்டத்தின் 118 ஆவது பிரிவும் 157 ஆவது பிரிவின் 9 ஆவது உப பிரிவின் (ஆ), (இ) பந்திகளினால் கடின கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம் பற்றிய உப யாப்பை ஆக்குவதற்கு நகரசபைகளுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளதுடன் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கமுடைய உள்ளூராட்சி நிறுவனங்கள் (அங்கீகரிக்கப்பட்ட உப யாப்பு) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் இவ்வங்கீகரிக்கப்பட்ட உப யாப்பை ஏற்று நடைமுறைப்படுத்துவதற்காக தென் மாகாணத்தின் நகரசபைகளுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி விடயங்களுக்கு
பொறுப்புடைய அமைச்சர்,
தென் மாகாணம்.

2012.05.21.

**பொது**

1. இத்துணைவிதி திண்ம கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம் பற்றிய உப யாப்பு என அழைக்கப்படுகின்றது.

2. மாநகர எல்லைக்குட்பட்ட பகிரங்க இடங்களில், தனியார் இடங்களில், வீதிகளில், பெருந்தெருக்களில் உண்டாகின்ற திண்ம கழிவுப் பொருட்களை வேறாக்கல், களஞ்சியப்படுத்தல், ஒன்று சேகரித்தல், கொண்டுசெல்லல், வேறிடங்களுக்கு மாற்றுதலுக்கான வழிமுறைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் நடாத்துதல், வெளியேற்றல் சம்பந்தமான கட்டளைகள், கண்காணிப்புக்கள், பரிசீலனைகள் என்பனவற்றிற்காக உப யாப்பு ஆக்கப்படுகின்றது.

3. நகரசபை அதிகாரப் பிரிவுகளுக்குள் அமைந்துள்ள ஓரிடத்தில் அனைத்து உரிமையாளர்களும் அல்லது குடியிருப்பவர்களும் தமது இடத்தை கழிவுப் பொருட்களற்ற சுகாதார அமைப்புடைய சிறந்த நிலையில் வைத்திருத்தல் வேண்டும்.

4. நகர சபைகள் பிரதேசத்தில் அமைந்துள்ள ஏதாவதொரு இடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் தமது இடத்தினுள் உண்டாகின்ற கழிவுப் பொருட்களை ஒன்றுசேர்த்தல், வேறாக்குதல், களஞ்சியப்படுத்துதல், கொண்டு செல்லல் மற்றும் வெளியேற்றல் என்பனவற்றிற்கானவற்றைச் செய்தல் வேண்டும். இல்லாவிடில் இத்துணைவிதியின் ஏற்பாடுகளுக்கமைய அவ்வாறு செய்வித்தல் வேண்டும்.

5. (i) ஓரிடத்தில் அனைத்து உரிமையாளர்களும் அல்லது குடியிருப்பாளர்கள் அவர்களது இடத்தினுள் பெறப்படுகின்ற திண்ம கழிவுப் பொருட்களை கூட்டுதல் அல்லது வேறு வழிகளைக் கையாண்டு தினந்தோறும் அல்லது அதற்குக் குறைந்த காலத்திலாவது ஒன்று சேர்த்தல் வேண்டும்.

(ii) சகல உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளர்களும் இத்துணைவிதியின்முன்னைய உப பிரிவின் பிரகாரம் ஒன்றுசேர்த்த கழிவுப் பொருட்களை இல. 8 முதல் 20 வரையுள்ள உப யாப்புகளில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய வேறாக்குதல் வேண்டும். அல்லது அவ்வாறு செய்யப்பட ஏற்பாடு செய்தல் வேண்டும்.

(iii) உரிமையாளரால் அல்லது குடியிருப்பாளரால் கழிவுப் பொருட்களைக் களஞ்சியப்படுத்த அல்லது வெளியாக்க உபயோகிக்கப்படும் உறை, சாக்கு, பெரிய பாண்டம், அல்லது வேறு கொள்பாத்திரங்கள் இல. 8 முதல் 20 வரையுள்ள உப யாப்புகளின் ஏற்பாடுகளுக்கமைய ஒன்று சேர்ப்பதற்காகச் சிறந்த முறையில் பராமரிப்புச் செய்தல் வேண்டும். அவை கிழிந்த, துவாரமுள்ள, உடைந்த அல்லது ஈரளிப்புக் காரணமாக மிருதுவான அல்லது வேறு காரணங்களினால் பாவிக்க முடியாத நிலையில் இருப்பின் அவற்றை உபயோகித்தல் கூடாது. உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் எதிர்பார்ப்பதாயின் சபையால் எடுக்கப்படும் முடிவின் பிரகாரம் ஒரு பகுதி சலுகை அடிப்படையில் அல்லது முழுவதும் இலவசமாக அவ்வாறான கொள்தொட்டிகளை விநியோகிக்க முடியும்.

(iv) I ஆவது உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய ஒன்று சேர்க்கப்பட்ட கழிவுப் பொருட்களை சபையால் காலத்திற்குக் காலம் முடிவெடுத்து பகிரங்கப்படுத்திய சபை அதிகாரப் பிரிவுக்குள் நடைமுறையாகின்ற கழிவுப் பொருள் சேகரிக்கும் முறைக்கும் நேரசூசியின் படி உரிமையாளரால் அல்லது குடியிருப்பாளரால் அகற்ற முடியும்.

(v) உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் வீட்டில் உள்ளவர்களின் அல்லது அண்டை வீட்டில் உள்ளவர்கள், வருகையாளர்கள் ஆகியோரின் சுகாதாரத்தை அல்லது பிரதேசத்தின் சுகாதாரப் பாதுகாப்பு பாதிக்கக்கூடிய விதத்தில் கழிவுப் பொருட்களை ஒன்றுசேர்த்தல், களஞ்சியப்படுத்தல், அகற்றுதல்களைத் தவிர்த்தல் வேண்டும்.

6. (i) எவரொருவராவது பாதையொன்றுக்கு, வீதியொன்றுக்கு, பெருந்தெருவொன்றுக்கு, ஒழுங்கை ஒன்றுக்கு அல்லது வேறு பொது நிலையமொன்றுக்கு அல்லது இடமொன்றுக்கு அல்லது வடிகால் ஒன்றுக்கு, தண்ணீர்த் தடாகமொன்றுக்கு அல்லது தண்ணீர் வழிந்தோடும் இடமொன்றுக்கு அல்லது கடலுக்கு கழிவுப் பொருட்களை போடுவதைத் தவிர்த்தல் வேண்டும்.

(ii) எவரொருவராவது மாநகர சபைப் பிரதேசத்திற்குள் திடலொன்றின் சுற்றாடலுக்கு பங்கம் விளையும்படி கழிவுப் பொருட்களை தீமூட்டுதல் கூடாது.

(iii) எந்தவொரு உரிமையாளருக்கோ அல்லது குடியிருப்பாளருக்கோ 7 ஆம் இலக்க உப யாப்பின் ஏற்பாடுகளுக்கமைய ஏதாவதொரு கழிவுப் பொருளை விடுவிக்கச் செய்தல், கலத்தல். ஒழுங்குசெய்தல் அல்லது அகற்றல் ஆகியவற்றுக்காக அனுமதி பெறவேண்டிய சந்தர்ப்பங்களில் அவ்வாறு அனுமதி பெறமுடியாது போகுமாயின் அவருக்கு அதிகாரம்பெற்ற கழிவுப் பொருட்களை சேகரிக்கும் ஒருவருக்கு ஒப்படைக்க முடியும்.

(iv) இல. 7 இன் உப யாப்பின் விதிகளுக்கிணங்க விடுவிக்க, கலக்க அல்லது அகற்ற முடியாமற் போன கழிவுப் பொருட்களை மேலே (iii) இல் கூறப்பட்ட விதிகளுக்கிணங்க அதிகாரம்பெற்ற கழிவுப் பொருட்கள் சேகரிக்கும் ஒருவரால் சேரிக்கப்பட்ட கழிவுப் பொருட்கள் இல. 8 முதல் 20 வரையிலான உப யாப்புகளின் பிரகாரம் அகற்றப்படல் வேண்டும்.

7. (i) ஏதாவது ஓரிடத்தின் உரிமையாளருக்கு அல்லது குடியிருப்பாளருக்கு கீழ்க்கண்ட விடயங்கள் சம்பந்தமாக தவிர கழிவுப் பொருட்களை அவ்விடத்திலேயே அழிக்கச் செய்ய முடியும் :-

(அ) சபையால் அவ்வாறான கழிவுப் பொருட்களை அழித்துவிட தடைசெய்யப்பட்டுள்ள பிரதேசங்கள் ;

(ஆ) சபையால் குறிப்பிடப்பட்டுள்ள சில கழிவுப் பொருட்கள்

(ii) இடமொன்றின் உரிமையாளர் அல்லது வசிப்பாளர் ஆணையாளரால் அனுமதிக்கப்பட்ட முறைப்படி அல்லது அவரின் கட்டளைப்படி நிர்மாணிக்கப்பட்ட அடுப்பொன்றில் அல்லது சூளை ஒன்றில் கழிவுப் பொருட்களை எரிக்க முடியும். இன்றேல் ஆணையாளரால் அனுமதிக்கப்பட்ட கழிவுப் பொருட்களை கையாளுதல், பதனஞ் செய்தல் அல்லது புதைத்தல்.

(iii) உரித்துடையவர் அல்லது வசிப்பாளர் ''சேதனப் பசளை'' பீப்பாய்களுக்கு ஆணையாளருக்கு விண்ணப்பித்தால் அவ்வுரித்துடைய வருக்கு அல்லது வசிப்பவருக்கு அச்சேதனப் பசளைப் பீப்பாய்களைப் பராமரித்தல் செய்யக்கூடிய இடவசதிகளிருப்பின் அப்பீப்பாய்களின் செலவின் ஒரு பகுதியை அல்லது முழுவதையும் அறவிட்டு அல்லது இலவசமாக பெற்றுக்கொள்ள முடியும்.

(iv) உரித்தாளர் அல்லது வசிப்பாளர் தமதிடத்தினுள் சேகரிக்கப் படுகின்ற வீட்டுத்தோட்ட கழிவுகளை முடிந்தவரையில் ஆணையாளரால் அனுமதிக்கப்பட்ட பிரகாரம் கையாளுதல் பதனஞ்செய்தல் வேண்டும். அவ்வுரித்தாளர் அல்லது வசிப்பாளர் எஞ்சிய வீட்டுத் தோட்டக் கழிவுகளை வெளியாக்குவதற்கு உரியவற்றை குறித்த கட்டணத்தைச் செலுத்தி நகர கழிவுப் பொருட்கள் சேகரிக்கும் நபருக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

(v) வீதியொன்றில் அல்லது பெரும் தெருவொன்றின் அருகில் உள்ள ஏதாவதொரு மரம் அல்லது அதன் கிளை ஒன்றை வெட்டும் ஒருவர் உடனடியாக அதனை அகற்றுதல் வேண்டும். அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அவ்வாறு இன்றேல் சபையால் நிர்ணயிக்கப்படும் கட்டணம் ஒன்றைச் செலுத்தி மாநகர சபையின் பொறுப்பாளருக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

(vi) ஒவ்வொருவரும் அவரது பராமரிப்பிலுள்ள ஏதாவது ஒரு மிருகத்தை வீதியொன்றுக்கு அல்லது பெருந்தெருவொன்றிற்கு, பொது இடமொன்றிற்கு மலங்கழிப்பதைத் தடுக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அவ்வாறு மலங்கழிப்பின் இல. 8 முதல் 20 வரையான உப யாப்பின் பிரகாரம் அதைச் சுத்தப்படுத்தி அப்புறப்படுத்துதல் அந்நபரின் பொறுப்பாகும்.

(vii) எந்தவொருவராவது மாநகர சபை பிரதேசத்தினுள் எந்தவொரு வகையிலான கழிவுப் பொருளொன்றையும் வாகனமொன்றிலிருந்து வீதிக்கு அல்லது பெருந்தெருவுக்கு அல்லது பொது இடமொன்றிற்கு போடுதல் அல்லது சேகரிப்புச் செய்தல் கூடாது.

(viii) வீடொன்று அல்லது வேறொரு இடமொன்றில் நிர்மாணிக்கப் படும் நிர்மாணம் அல்லது பழுதுபார்த்தல் என்பனவற்றிற்கு விண்ணப்பிக்கும் ஒருவர் அவரது இடத்தில் உற்பத்தியாகும் திண்மக் கழிவுப் பொருட்கள், வெளிப்படுத்துகின்ற கழிவுப் பொருட்கள் கையாளுதல், பதனஞ் செய்தல் முறைகள் பற்றிய விபரங்களை அவர் தனது விண்ணப்பப்பத்திரத்தில் உட்படுத்தல் வேண்டும்.

**வீட்டுத் தோட்டம் (நிலம்)**

8. (i) ஒவ்வொரு உரித்தாளரும் அல்லது வசிப்பாளரும் கூட்டுதலால் அல்லது வேறு முறைகளால் சேரிக்கப்படும் கழிவுகளை கீழ் உள்ள பிரகாரம் தேர்ந்தெடுத்து வேறாக்கல் வேண்டும் :-

(அ) உணவுக் கழிவுப் பொருட்களும் மற்றும் உயிர் சேதனக் கழிவுப் பொருட்களும் ;

(ஆ) மீண்டும் பாவிக்கக்கூடியதும், மாற்றஞ்செய்து உபயோகப் படுத்தக்கூடியதுமான கழிவுப் பொருட்கள் ;

(இ) ஆபத்துக்குரிய கழிவுப் பொருட்கள் ;

(ஈ) மிருகங்களின் மலம், உடலின் பகுதிகள், சாணம் என்பன ;

(உ) இடத்தைக் கூட்டியதன் பின்னர் சேகரமாகும் தூசிகள், வேறு கழிவுகள்.

(ii) சகல உரித்தாளர்களும் வசிப்பாளர்களும் அவ்வாறு தேர்ந்து வேறுபடுத்திய கழிவுகளை வெவ்வேறான உறைகளில் பாத்திரங்களில் போடவேண்டியதுடன் அவற்றை அகற்றும் வரை அதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் வைத்திருத்தல் வேண்டும். உணவுக் கழிவுப் பொருட்களையும் உயிர் சேதன கழிவுப் பொருட்களையும் தண்ணீர் உரைக்காத பொருட்களால் ஆக்கப்பட்டதும் எலிகள், கிருமிகள் மற்றும் வேறு உயிரினங்கள் உட்புகாதவாறு உரிய முறையில் மூடப்பட்ட உறையில் வைத்தல் வேண்டும். உயிரினங்களின் மலம், உடற்பகுதிகள் அல்லது சாணம் போன்ற கழிவுப் பொருட்கள் அகற்றப்பட வேண்டிய கழிவுப்பொருட்களின் தன்மையை கவனத்தில் கொண்டு காலாகாலத்தில் தீர்மானிக்கப்பட்ட கட்டணமொன்றை மாநகர சபைகள், பிரதேச சபைகள் என்பனவற்றிற்கோ ஆணையாளருக்கு செலுத்துவதன் பேரில் சேகரிப்பவருக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

(iii) சகல உரித்தாளருக்கும் அல்லது வசிப்பவருக்கும் (1) பந்தியின் (அ), (ஆ) உப பிரிவுகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருள்களை அதிகாரம்பெற்ற கழிப் பொருட்கள் சேகரிப்பாளரகட்கு ஒப்படைக் முடியும். உரித்தாளர் அல்லது வசிப்பாளர் அவ்வாறு செய்யாவிடில் அவர் (இ) உப பிரிவில் விசேடமாகக் குறிப்பிட்டுள்ள கழிவுப் பொருள் வகைகளுடன் உரிய கழிவுப் பொருட்களை நகர கழிவுப் பொருட்கள் சேகரிப்பாளர் ஒருவருக்கு ஒப்படைத்தல் வேண்டும். அவ்வாறின்றேல் சபையால் ஒவ்வொரு வகையான கழிவுப் பொருள்களுக்காக நிர்மாணிக்கப்பட்டுள்ள தொட்டிகளில் அல்லது அவ்வாறான கழிவுப் பொருட்களுக்காக சபையால் விநியோகிக்கப்படும் தொட்டிகளில் அல்லது உறைகளில் போட்டு வைத்தல் வேண்டும்.

9. (i) வாடகை வீடுகள் பலதைக் கொண்ட அதிக மாடிகளைக் கொண்ட கட்டிடங்களின் சகல உரித்தாளர்களும் வசிப்பவர்களும் அவர்களது கழிவுப் பொருட்களை கீழ்க்கண்ட விதத்தில் வேறுபடுத்தல் வேண்டும் :-

(அ) உணவுக் கழிவுப் பொருட்களும் மற்றும் உயிர் சேதனக் கழிவுப் பொருட்களும் ;

(ஆ) மீண்டும் பாவிக்கக்கூடியதும், மாற்றஞ்செய்து உபயோகப் படுத்தக்கூடியதுமான கழிவுப்பொருட்கள் ;

(இ) ஆபத்துக்குரிய கழிவுப் பொருட்கள் ;

(ஈ) மிருகங்களின் மலம், உடலின் பகுதிகள், சாணம் என்பன ;

(உ) இடத்தைக் கூட்டியதன் பின்னர் சேகரமாகும் தூசிகள், வேறு கழிவுகள்.

(ii) (i) ஆவது பந்தியில் குறித்துக்காட்டப்பட்டுள்ள கட்டிட மொன்றின் உரிமையாளர் அல்லது வசிப்பாளர் ஆணையாளரால் அனுமதிக்கப்பட்ட தரத்திலும் முறைப்படியும் மூன்று விதமான பாத்திரங்கள் அல்லது உறைகளை விநியோகிக்க வேண்டியதுடன் அவற்றை சுத்தமாகவும் சுகாதார முறைப்படியும் பராமரித்தல் வேண்டும்.

(iii) (i) உப பிரிவின் பிரகாரம் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ள கட்டிடமொன்றின் உரிமையாளர் அல்லது வசிப்பாளர் (ii) ஆவது உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமையாதவிடத்தில் ஆணையாளரால் அறிவிக்கப்படும் திகதியில் அல்லது அதற்கு முன்னர் உரிய பாத்திரத்தில் அல்லது உறையை விநியோகிக்கும்படி உரிமையாளருக்கு அல்லது வசிப்பாளருக்கு கட்டளையிட ஆணையாளருக்கு அதிகார முண்டு. ஆணையாளரின் உத்தரவின் பிரகாரம் செயற்படுவது உரிமையாளரின் அல்லது வசிப்பாளரின் கடமையாகும்.

(iv) கட்டிடமொன்றின், நிலத்தின் அல்லது மாடியின் உரிமையாளர் அல்லது வசிப்பாளர் தேர்ந்து வகைப்படுத்தப்பட்ட கழிவுப் பொருட்கள் வைக்கப்பட்டுள்ள உரிய பாத்திரத்தில் அல்லது உறையில் இடல் வேண்டும்.

(v) இத்துணைவிதியின் (i) ஆவது உப பிரிவின் (அ) மற்றும் (ஆ) பிரிவுகளில் விசேடமாகக் குறிப்பிட்டுள்ள கழிவுப் பொருள் வகைகளை அப்புறப்படுத்தல் அதிகாரம்பெற்ற சேகரிப்பாளரது கடமையாகும். அவ்வாறு அப்புறப்படுத்தப்படாத ஏதாவது கழிவுப் பொருட்கள் (இ), (ஈ) பிரிவுகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருட்கள் வகைகளையும் நகர கழிவுப் பொருட்கள் சேவையாளருக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

10. (i) நகர சபையில் முன் அனுமதியைப் பெற்று சேரிகளில் வசிப்பவர்களின் பாவனைக்காக ஆணையாளரால் கழிவுப் பொருட்கள் தொட்டி, உறைகள் இலவசமாக விநியோகித்தல் சட்டபூர்வமானதாகும்.

(ii) சகல சேரி வீடுகளிலும் உரிமையாளர்களும் வசிப்பாளர்களும் அவரது வசிப்பிடத்தில் சேகரமாகும் கழிவுகளை பின்குறிப்பிடும் பிரகாரம் தேர்ந்து வகைப்படுத்தி அவரது வசிப்படத்திற்கு அருகாமையில் வைக்கப்படுகின்ற அனுமதித்த பாத்திரத்தில் அல்லது உறைகளில் இடல் வேண்டும் :-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிர் சேதன கழிவுகள் ;

(ஆ) மீண்டும் பாவிக்கக்கூடிய அல்லது எடுக்கக்கூடிய கழிவுகள் ;

(இ) ஆபத்தான கழிவுப் பொருட்கள்.

(iii) இத்துணைவிதியில் (ii) ஆவது உப பிரிவின் (அ), (ஆ) பிரிவுகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளை அகற்றுவதற்காக கழிவுப் பொருட்களை சேகரிப்பவர் ஒருவருக்கு அனுமதி வழங்க ஆணையாளருக்கு அதிகாரமுண்டு.

**கடைகள், அலுவலகங்கள்**

11. (i) கடையொன்றின் அல்லது அலுவலகமொன்றின் சகல உரிமையாளரும் வசிப்பாளரும் ஒவ்வொரு தொகுதியிலும் சேருகின்ற கழிவுகளைப் பின்வரும் விதத்தில் தேர்ந்து வேறாக்கல் வேண்டும் :-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிர் சேதன கழிவுகள் ;

(ஆ) மீண்டும் பாவிக்கக்கூடிய அல்லது எடுக்கக்கூடிய கழிவுகள் ;

(இ) ஆபத்தான கழிவுப் பொருட்கள் ;

(ஈ) இடத்தைக் கூட்டுவதால் சேகரமாகும் தூசி மற்றும் உலர்ந்த கழிவுகள்.

(ii) தேர்ந்து வேறாக்கம் செய்த கழிவுகளை அகற்றும் வரை வெவ்வேறாக தொட்டிகளில் (பாத்திரங்களில்) அல்லது உறையில் போட்டு ஏற்ற இடமொன்றில் வைத்திருத்தல் வேண்டும்.

(iii) கடையொன்றில் அல்லது அலுவலகமொன்றில் உரிமையாளர் அல்லது வசிப்பாளர் இத்துணைவிதியின் (i) ஆவது உப பிரிவின் (அ), (ஆ) பிரிவில் விசேடமாகக் குறிப்பிட்டுள்ள கழிவுப் பொருட்களை அதிகாரம்பெற்ற சேகரிப்பாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

(iv) பல மாடிகள் அல்லது பல நிலைப்பகுதிகள் அடங்கிய அல்லது அலுவலகத் தொகுதி ஆகியவற்றின் உரிமையாளர்கள் அல்லது அவற்றின் வசிப்பவர்கள் ஆணையாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரங்களுக்கு ஏற்ப அக்கடைகளில் அல்லது அலுவலகங்களில் தேர்ந்து வேறாக்கப்பட்ட கழிவுகள் சேகரம் செய்ய, அல்லது வைக்க, ஒவ்வொரு கடைகளுக்கும் அலுவலகங்களுக்கும் கழிவுத் தொட்டிகள், உறைகள் தேவையான அளவு விநியோகித்தல் வேண்டும்.

(v) இத்துணைவிதியின் (iv) ஆவது பிரிவில் விசேடமாகக் குறிப்பிட்டுள்ள கடையொன்றின் அல்லது அலுவலகமொன்றின் ஓர் உரிமையாளர் தேர்ந்து வேறாக்கிய கழிவுகளை வெவ்வேறாக தொட்டிகளில் அல்லது உறைகளில் போடல் வேண்டும். இத்துணைவிதியின் (i) ஆவது உப பிரிவின் (அ), (ஆ) பிரிவுகளில் விசேடமாகக் குறிப்பிட்டுள்ள கழிவுப் பொருள் வகைகளை அதிகாரம்பெற்ற கழிவுப் பொருட்கள் சேகரிப்பாளருக்கு ஒப்படைக்கும் உரிமை சகல உரிமையாளருக்கும் வசிப்பாளருக்கும் உள்ளது.

(vi) அதிகாரம்பெற்ற கழிவுப் பொருள் சேகரிப்பவரால் சேகரிக்கப் படாத இத்துணைவிதியின் (i) ஆவது உப பிரிவில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருள் வகைகளையும் (ii) ஆவது பிரிவில் (அ), (ஆ) பிரிவுகளில் விசேடமாகக் குறிப்பிட்டுள்ள கழிவுப் பொருள் வகையொன்றை சபையால் காலாகாலத்தில் எடுக்கப்படும் முடிவுகளுக்கு ஏற்ப கட்டணமொன்றை ஆணையாளருக்குச் செலுத்துவதன் மூலம் உரியபடி உரிமையாளரால் அல்லது வசிப்பாளரால் நகர கழிவுப் பொருட்கள் சேகரிப்பாளருக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

(vii) அயலவர்களுக்கு அல்லது குறித்த கடையில் அல்லது அலுவலகத்தில் சேவை புரிபவர்களுக்கு ஏதாவது சுகாதார உடல்நலப் பிரச்சினைகள் ஏற்படாதிருக்கும் பொருட்டு கழிவுப் பொருட்களை அகற்றுதல் இத்துணைவிதியின்விசேடமாக கட்டளை இடப்பட்டுள்ள கழிவுப் பொருள் தொட்டிகள் அல்லது உறைகள் என்பனவற்றைப் பராமரித்தல் ஒரு கடையின் அல்லது அலுவலகத்தின் உரிமையாள ருக்குப் பொறுப்பாகும்.

(viii) இத்துணைவிதி சம்பந்தமாக கருமங்கள் பற்றிய பொருள் கோடல் தேவைப்படின் –

"அலுவலகம்" என்பதற்கு, 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கம் கொண்ட கடை சாப்புகள் மற்றும் அலுவலகங்கள் ஆகியவற்றில் சேவையில் ஈடுபட்டுள்ளவர் பற்றிய சட்டத்தில் (129 ஆவது அதிகாரம்) கொடுக்கப்பட்டுள்ள பொருளேயாகும்.

"வசிப்பாளர்" என்பதற்கு, கடை காப்பு ஒன்றின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் அல்லது வியாபாரமொன்றின் அல்லது அலுவலகமொன்றின் பொறுப்பாளராவார்.

"சாப்பு" என்பதற்கு, மொத்தமான அல்லது சில்லறையான வியாபார நிமித்தம் பொருட்களை வைத்திருக்கும் இடமொன்று ஆவதுடன் உணவு வகைகளை விற்பனைக்காக வைத்திருக்கும் இடமொன்றும் மற்றும் தலைசிரைக்கும் கடை ஒன்று அல்லது சிகை அலங்காரம் செய்யும் இடங்கள் என்பனவும் உள்ளடங்கும்.

**ஹோட்டல் (சாப்பாட்டுக்கடை)**

*12.* (i) எந்தவொரு சாப்பாட்டுக்கடை நடாத்துபவரும் அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட எவரொருவரும் தமது இடத்தில் சேரமாகும் கழிவுப் பொருட்களை பின்வரும் பிரகாரம் தேர்ந்து வேறுபடுத்தல் வேண்டும். அவ்வாறின்றேல் அவ்வாறு செய்ய ஒழுங்குசெய்தல் வேண்டும் :-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிர்சேதன கழிவுகள் ;

(ஆ) மீண்டும் பாவிக்கக்கூடிய அல்லது எடுக்கக்கூடிய கழிவுகள் ;

(இ) ஆபத்தான கழிவுப்பொருட்கள் ;

(ஈ) இடத்தைக் கூட்டுவதால் சேகரமாகும் தூசி மற்றும் உலர்ந்த கழிவுகள்.

(ii) சகல சாப்பாட்டுக் கடைக்காரரும் அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட எவரும் தேர்ந்து வேறாக்கப்பட்ட கழிவுப் பொருட்களை அகற்றும்வரை வெவ்வேறாக ஏற்புடைய தொட்டிகளில் (பாத்திரங்களில்) உறைகளில் போட்டு ஏற்ற இடமொன்றில் வைத்தல் வேண்டும்.

(iii) சகல சாப்பாட்டுக் கடைக்காரரும் அல்லது அவரால் எழுத்து அதிகாரம் அளிக்கப்பட்ட எவரொருவராலும் நுளம்புகள், எலிகள், கிருமிகள் அல்லது வேறு பூச்சிகள் உட்புகாதவாறு அனைத்து உணவுக் கழிவுப் பொருட்களையும் மற்றும் உயிர் சேதனப் பொருட்களையும் பிளாஸ்டிக் அல்லது உலோகத்திலான மூடிகளையுடைய பூரண பாதுகாப்புடைய பாத்திரத்தில் (தொட்டியில்) அல்லது வேறு உறைகளில் அடைத்தல் வேண்டும்.

(iv) இத்துணைவிதியின் (i) உப பிரிவின் (அ), (ஆ) பிரிவில் விசேடமாகக் குறிப்பிட்டுள்ள கழிவுப் பொருள் வகைகளை அதிகாரம்பெற்ற கழிவுப் பொருட்கள் சேகரிப்பாளர் ஒருவருக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

(v) இத்துணைவிதியின் (iv) ஆவது உப பிரிவின்கீழ் ஒப்படைக்கப்படாத அவ்வாறான கழிவுப் பொருட்களையும் (i) உப பிரிவில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருட்களின் வகை, அக்கழிவுப் பொருட்களின் தன்மையை கவனத்திற்கொண்டு சபையால் காலாகாலத்தில் முடிவு செய்யப்படும். கட்டணம் ஒன்றை உரிமையாளர் அல்லது வசிப்பாளர் ஆணையாளருக்குச் செலுத்தி நகர கழிவுப் பொருட்களைச் சேகரிப்பாளருக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

(vi) இத்துணைவிதியின் கருமங்களுக்காக சொற்கள் சம்பந்மாக பொருள் கோடல் தேவைப்பட்டாலன்றி "ஹோட்டல்" என்பதற்கு சயன அறைகள் வசதிகளுடன் அல்லது சயன அறை வசதிகளின்றி பணத்தைச் செலுத்தி நுகர்வுக்காக சாப்பாட்டு உணவுகளுடன் குடிவகைகளும் விநியோகம் செய்யும் இடமும் என பொருட்படும். அதற்கு உணவுச்சாலை விருந்தினர் இல்லம், தங்குமிடம், விடுதி, சுற்றுலா ஓய்வுச்சாலை, சோற்றுக்கடை அல்லது ஹோட்டலுக்கு சமமான முறையில் வியாபார நிமித்தம் நடாத்தப்பெறும் இடமும் உள்ளடங்கும்.

**காய்கறி வகைகள், பழவகை வியாபார நிலையம்**

*13.* (i) சகல காய்கறி வகை மற்றும் பழவகை வியாபார நிலையங் களின் உரிமையாளரும் அல்லது அதற்குப் பொறுப்பாக உள்ள

நபரொருவரும் தமது இடத்தில் சேகரமாகும் கழிவுகளை பின்வரும் முறைப்பிரகாரம் தேர்ந்து வேறாக்கல் வேண்டும் :-

(அ) மனித பாவனைக்கு ஒவ்வாத மரக்கறி வகைகள், பழவகைகள் அல்லது வேறு கழிவுகள் ;

(ஆ) மீண்டும் பாவிக்கக்கூடிய அல்லது எடுக்கக்கூடிய கழிவுகள் ;

(இ) ஆபத்தான கழிவுப்பொருட்கள் ;

(ஈ) இடத்தைக் கூட்டுவதால் சேகரமாகும் தூசுகள் மற்றும் வேறு கழிவுகள்.

(ii) இத்துணைவிதியில் (i) ஆவது உப பிரிவின் (அ) பிரிவில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருள் வகைகளை ஈரளிப்படையாத பிளாஸ்டிக் அல்லது உலோகத்தினாலான பொருட்களால் செய்யப்பட்ட தனியான தொட்டியில் போடவேண்டிய துடன் அதனுள் நுளம்புகள், எலிகள், கிருமிகள், வேறு புழு பூச்சிகள் உட்புகுவதை தடுக்கக்கூடியவாறு பாதுகாப்பாக வைத்தல் வேண்டும். ஏனைய கழிவுப் பொருட்களை ஏதாவது ஒரு பாத்திரம் அல்லது தொட்டியில் அல்லது உறையில் போடுதல் வேண்டும்.

(iii) இத்துணைவிதியின் (i) உப பிரிவின் (அ), (ஆ) மற்றும் (இ) பிரிவுகளில் குறிப்பிட்டுள்ள கழிவுப் பொருள் வகைகளை அதிகாரம்பெற்ற கழிவுப் பொருள் சேகரிப்பாளருக்குக் ஒப்படைத்தல் முடியும். அவ்வாறு ஒப்படைக்கப்படாத இத்துணைவிதியின்(i) ஆவது உப பிரிவின் (இ) பிரிவில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருட்களுடன் சபையால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் விதத்தில் கட்டணமொன்றை ஆணையாளருக்குச் செலுத்துவதன் மூலம் நகர சேகரிப்பாளர் ஒருவருக்கு ஒப்படைக்க முடியும்.

(iv) இத்துணைவிதியின் கருமங்களுக்காக சொற்கள் சம்பந்தமாக வேறொரு பொருள் கோடல் தேவைப்படாவிடில் பழவகைக்கடை என்பதன் பொருள் காய்கறி வகைகள் மற்றும் பழவகைகள் களஞ்சியப்படுத்திய அல்லது விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள இடம்.

**இறைச்சி, மீன், கோழி இறைச்சி அல்லது முட்டை வியாபார சிறு கடைகள்**

*14.* (i) குறித்த கருமங்களுக்காக ஆணையாளரால் விநியோகிக்கப் பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தின் பிரகாரம் அதில் குறிப்பிட்டுள்ள இடத்தில் எவரொருவராவது (மாடுகள் போன்ற) உணவுக்காக மிருங்களை அறுத்தல் (வெட்டுதல்) கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அனுமதிக்கப்பட்ட மிருகங்கள், பறவைகள் தவிர வேற எவ்வித மிருகங்களோ அல்லது பறவை இனங்களோ கொல்லுதல் (வெட்டுதல், அறுத்தல்) செய்யக் கூடாது.

(ii) இத்துணைவிதியின் (i) ஆவது உப பிரிவின்கீழ் விநியோகிக்கப் படுகின்ற அனைத்து அனுமதிப்பத்திரங்களிலும் வெட்டப்படும் மிருகத்தின் அல்லது பறவையின் இனம் வெட்டும் (அறுக்கும்) இடம் தீர்மானிக்கப்படவேண்டிய அமைப்பு சுத்தமாக்குவதற்கும் மனித பிரயோசனத்திற்கு ஒவ்வாத இரத்தம், சாணம், உடற்கழிவுகள் என்பனவும் அதன் பகுதிகளும் அகற்றப்படுவதற்கான நிபந்தனைகள் மற்றும் சபை ஏற்புடையது எனக் கருதும் வேறு நிபந்தனைகள் என்பன குறிப்பிடல் வேண்டும்.

(iii) இத்துணைவிதியின் (i) ஆவது உப பிரிவின்கீழ் அனுமதிப்பத்திரம் விநியோகம் செய்தலுக்காக காலாகாலத்தில் சபையால் முடிவு செய்யப்படுகின்ற கட்டணமொன்றை ஆணையாளரால் அறிவிப்பதுடன் அக்கட்டணம் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும்போது செலுத்தப்படல் வேண்டும்.

(iv) இறைச்சி, கோழி இறைச்சி, மீன்கள் மற்றும் முட்டை என்பன விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள சிறு கடைகளின் உரிமையாளர் அல்லது வியாபாரத்தை செய்பவர் அவ்வாறு கழிவுகளை பின்வரும் விதத்தில் தேர்ந்து வேறாக்கல் வேண்டும் :-

(அ) மனித பிரயோசனத்திற்கு ஒவ்வாத சாணிகள், உடற்கழிவு களின் பகுதிகள் அல்லது முட்டைகள் ;

(ஆ) மீளப்பாவிக்கக்கூடிய மற்றும் மீண்டும் பயன்படுத்தக்கூடிய கழிவுகள் ;

(இ) ஆபத்தான கழிவுப் பொருட்கள் ;

(ஈ) இடத்தைக் கூட்டுவதால் சேரும் தூசி மற்றும் உலர் கழிவுப் பொருட்கள்.

(v) தேர்ந்து வேறாக்கிய கழிவுப் பொருட்களை வேறான பாத்திரத்தில் அல்லது தொட்டியில் அல்லது வேறு உறைகளில் வைத்தல் வேண்டும். இத்துணைவிதியின்(iv) உப பிரிவின் (அ) பிரிவில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருள் வகைகள் ஈரளிப்பு அடையாதவண்ணம் உறையினுள் வைக்கவேண்டியதுடன் அவ்வுறையில் ஈக்கள், எலிகள், கிருமிகள் மற்றும் வேறு பூச்சி புழுக்கள் உட்புகுவதைத் தடுத்து அதை ஏற்ற முறையில் பாதுகாப்பாக வைத்தல் வேண்டும்.

(vi) இத்துணைவிதியின் (vi) ஆவது உப பிரிவின் (அ), (ஆ), (இ), (ஈ) பிரிவுகளில் விசேடமாகக் குறிப்பிட்டுள்ள கழிவுப் பொருள் வகைகளை அதிகாரம்பெற்ற கழிவுப் பொருட்களை சேரிக்கும் ஒருவருக்கு கொடுத்தல் வேண்டும். அவ்வாறு ஒப்படைக்கப்படாத ஏதாவது கழிவுப் பொருட்கள் இத்துணைவிதியின்(iv) ஆவது உப பிரிவின் (ஈ) பிரிவில் விசேடமாகக் குறிப்பிட்டுள்ள கழிவுப் பொருட்கள் வகைகளுடன் சபையால் காலாகாலத்தில் முடிவு செய்யப்படும் கட்டணம் ஒன்றைச் செலுத்தி துர்நாற்றம் வீசுவதற்கு முன் மாநகர கழிவுப் பொருட்கள் சேகரிக்கும் ஒருவருக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

(vii) இத்துணைவிதியின் கருமங்களுக்காக சொற்கள் சம்பந்தமாக வேறு பொருள் போடல் வேண்டுமாயின் தவிர இறைச்சி, மீன்கள், கோழி இறைச்சி அல்லது முட்டை வியாபார சிறு கடை என்பது இப்பொருட்கள் விற்பனை செய்வதற்காக களஞ்சியப்படுத்தப்பட்ட அல்லது விற்பனை செய்வதற்காக வைக்கப்பட்டுள்ள அல்லது திறந்த இடமாகும்.

**நடைபாதை வியாபாரம்**

*15.* (i) கழிவுப் பொருள்கள் ஏற்படும் வியாபாரமொன்றை நடாத்தும் நடைபாதை வியாபாரி ஒருவர் ஆணையாளரினால் அனுமதிக்கப்பட்ட விதத்திலான தரத்தைக் கொண்டதுமான கழிவுப் பொருட்களைப் போடுவதற்கான பாத்திரம் (தொட்டி) ஒன்றை அல்லது உறை ஒன்றை வைத்தல் வேண்டும். அவ்வாறான கழிவுகளை நடைபாதையிலோ, பெருந்தெருவிலோ அல்லது பொது இடமொன்றிலோ போடுதல் கூடாது.

(ii) நடைபாதை வியாபாரி ஒருவர் வாகனங்களின் அல்லது நடைபாதைப் பிரயாணிகளின் போக்குவரத்திற்கு இடைஞ்சல் ஏற்படும் வகையில் தொட்டி (பாத்திரம்) ஒன்று அல்லது வேறு உறை ஒன்றை வைத்தல் ஆகாது.

(iii) ஒவ்வொரு நடைபாதை வியாபாரியும் அவரது வியாபாரத்தின் காரணமாக ஏற்படக்கூடிய கழிவுப் பொருட்களை கீழ்க்காணும் பிரகாரம் தேர்ந்து வேறாக்குதல் வேண்டும் :-

(அ) உணவுக் கழிவுகள் வேறு உயிரியல் சம்பந்தப்பட்ட கழிவுகள்;

(ஆ) மீண்டும் பாவிக்கக்கூடிய கழிவுப் பொருட்களும், மீண்டும் மாற்றமடையச் செய்யக்கூடிய கழிவுகளும்;

(இ) ஆபத்திற்குரியதான கழிவுப் பொருட்கள்.

(iv) தேர்ந்து வேறாக்கிய கழிவுப் பொருட்களை தனியான தொட்டியில் அல்லது வேறு உறையொன்றினுள் போடல் வேண்டும். இத்துணைவிதியின்(II) உப பிரிவின் (அ) பகுதியில் விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள கிருமிகள், எலிகள், பூச்சி வகைகள் போன்ற உயிரினங்களால் கடித்துண்டு போடப்பட்ட கழிவுப் பொருட்கள் பாதுகாப்பான உறையொன்றில் வைக்க வேண்டியதுடன் மேலதிக கழிவுப் பொருட்களைப் போடுவதற்கு தேவைப்பட்டலான்றி அதனை மூடிவைத்தல் வேண்டும்.

(v) நடைபாதை வியாபாரிகள் அனைவரும் இத்துணைவிதியின் (III) வது உப பிரிவின் (அ), (ஆ) பகுதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருள் வகைகளை அதிகாரம் பெற்ற சேகரிப்பாளருக்கு அல்லது இத்துணைவிதியின்(III) வது உப பிரிவில் (இ) பகுதியில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருள் வகைகளுடன் நகர கழிவுப் பொருட்களைச் சேகரிக்கும் ஒருவருக்கு ஒவ்வொரு நாளும் ஒப்படைத்தல் வேண்டும். வியாபாரம் நடைபெறாத சந்தர்ப்பங்களில் கழிவுத் தொட்டியை அல்லது உறையை நடைபாதையோரத்தில் அல்லது பெருந்தெருவில் வைத்தல் கூடாது.

(vi) நடைபாதை வியாபாரிகள் அனைவரும் கழிவுப் பொருள் தொட்டியை அல்லது உறையை நகர கழிவுப் பொருள் சேகரிப்பாளருக்கு ஒப்படைக்க முன்னர் சபையால் காலா காலத்தில் முடிவு செய்யப்படும் கட்டணமொன்றைச் செலுத்தல் வேண்டும்.

(vii) இத்துணைவிதியின் கருமங்களுக்காக சொற்கள் சம்பந்தமாக வேறு பொருள் கோடல் தேவைப்பட்டாலன்றி "நடைபாதை வியாபாரி" என்பதன் பொருள் நடைபாதையில் அல்லது அருகில் பொருட்களை (பண்டங்களை) விற்பனை செய்பவர் அல்லது சேவைகளை அளிப்பவர் ஆவார்.

**தொழிற்சாலைகள்**

*16*. (i) தொழிற்சாலைகள் உரிமையாளர், அனைவரும் அல்லது உற்பத்தியாளர் அனைவரும் தொழிற்சாலை அமைந்துள்ள இடத்தில் (திடலில்) உண்டாகின்ற (ஏற்படுகின்ற) கழிவுப் பொருட்களை ஒன்று சேர்த்து பின்வரும் விதத்தில் தேர்ந்து வேறாக்கல் வேண்டும் :-

(அ) உயிரியல் சம்பந்தப்பட்ட கழிவுகள் ;

(ஆ) மீண்டும் பாவனையில் ஈடுபடுத்தக்கூடிய அல்லது பாவனைக்காக மாற்றக்கூடிய கழிவுப் பொருட்கள்;

(இ) ஆபத்துக்குரியதான கழிவுகள் ;

(ஈ) இடத்தைக் கூட்டியதன் பின்னர் சேகரமாகும் தூசி, உலர்வுடைய கழிவுகள்.

(ii) இத்துணைவிதியின் I வது உப பிரிவின் (அ), (ஆ) வரிசைகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருள் வகைகளை அதிகரம் பெற்ற கழிவுப் பொருட்கள் சேகரிக்கும் நபருக்கு ஒப்படைக்க முடியும். அவ்வாறு ஒப்படைக்கப்படாத ஏதாவது கழிவுப் பொருட்களை சபையால் காலாகாலத்தில் முடிவு செய்யப்படும் கட்டணம் ஒன்றை ஆணையாளருக்குச் செலுத்துவதன் மூலம் நகர கழிவுப் பொருள்கள் சேகரிப்பாளருக்கு ஒப்படைக்க முடியும்.

(iii) *1980* ஆம் ஆண்டின் *17* ஆம் இலக்க, தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் அவ் வியாபாரத்திற்காக விநியோகிக்கப்படுகின்ற சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு ஏற்ப ஆபத்திற்குரியதான கழிவுப் பொருட்களை வெளியேற்றல் அல்லது அகற்றுதல் வேண்டும்.-

(iv) இத்துணைவிதியின்காரியங்கள் சம்பந்தமாக பொருள் கோடலின் படி வேறொரு பொருள் தேவைப்பட்டலான்றி "தொழிற்சாலை" என்பதற்கு *1942* ஆம் ஆண்டின் *45* ஆம் இலக்க தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தில் உள்ள பொருள் கோடலே ஏற்புடையதாகின்றது.

**தோண்டுதல், நிர்மாணித்தல், நிர்மூலமாக்குதல் (அழித்தல்)**

*17*. (i) ஏதாவதொரு வீதியை, பாதையை அல்லது பொது இடமொன்றை தோண்டுகின்ற அல்லது அவற்றில் நிர்மாணம் ஒன்றைச் செய்கின்ற உடைத்தொழிக்கின்ற எவரும் அவற்றினால் ஏற்படுகின்ற கழிவுகளை அவ்விடத்திலிருந்து அகற்றும் வரை இடத்தினுள் ஆணையாளரினால் அனுமதிக்கப்பட்ட இடமொன்றில் களஞ்சியப் படுத்தல் வேண்டும்.

(ii) இத்துணைவிதியின் (*1*) ஆவது உபபிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருட்களை சபையால் காலாகாலத்தில் முடிவு செய்யப்படுகின்ற பிரகாரம் கட்டணமொன்றை ஆணையாளருக்கு செலுத்துவதன் மூலம் நகர கழிவுப் பொருள்கள் சேகரிக்கும் நபருக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

(iii) "சொற்கள் சம்பந்தமாக வேறொரு பொருள் கோடல் தேவைப்பட்டாலான்றி இத்துணைவிதியின் காரியங்களுக்காக தோண்டுதல், நிர்மாணம் செய்தல், நிர்மூலமாக்கல் போன்ற செயல்களில் ஈடுபடுகின்ற எவரும்" சேவையில் ஈடுபடுத்துபவரால் சேவையில் ஈடுபடுத்தப்படுபவரும் உள்ளடங்குகிறது.

"கழிவு பொருள்கள்" என்பதற்கு நிர்மாணங்களின் போதும் கட்டிடப் பொருட்களைப் பாவிக்கும் போதும் உண்டாகின்ற கழிவுப் பொருட்களும் உள்ளடங்குகின்றது.

*18*. (i) வாயுப் பொருள் (கேஸ்) மின்சாரம், நீர், தொலைபேசி வசதிகள் அல்லது வேறு பொது வசதிகள் விநியோகத்திற்காக வீதியொன்றை, பாதையொன்றை, பொது இடமொன்று தோண்டப்படுமாயின் அவ்வாறு தோண்டும் நபர் ஆணையாளரின் எழுத்துமூலமான அனுமதியைப் பெறல் வேண்டும்.

(ii) மேலே (i) ஆவது உப பிரிவின் கீழ் அனுமதியளிக்க முன்னர் ஆணையாளரால் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக விண்ணப்பதாரரால் ஏற்பாடு செய்துள்ள வேலை ஏற்பாடுகள் உத்தேசத்

திட்டங்கள் முடிந்ததன் பின்னர் பாதையில் அல்லது பொது இடத்தில் தற்காலிகமாக வைப்பதற்கு ஏற்படும் கழிவுகளின் அளவுப் பிரமாணம் மற்றும் விண்ணப்பதாரர் குறித்த கழிவுகளை அகற்ற தவறுவாராயின் அதை அவர் அதற்கான செலவினங்களை கவனத்தில் கொள்ளல் வேண்டும். அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் விண்ணப்பதாரர் மதிப்பீடு செய்யப்பட்ட செலவினங்களுக்கு சமமான பணத் தொகை ஒன்றை வைப்பாக செலுத்துதல் அவசியமாகின்றது.

(iii) எவரொருவராவது கழிவுப் பொருள் முழுவதையும் அல்லது அதன் ஒரு பகுதியை அகற்றாத அல்லது அகற்ற தாமதிக்கும் போது ஆணையாளரால் முடிவு செய்யப்படும் பிரகாரம் குறித்த கழிவுப்பொருள் அகற்ற வேண்டியதுடன் அதன் பிரதிபலனாக செலவாகும் செலவினத்தை (ii) ஆவது உப பிரிவின் கீழ் வைப்பில் வைக்கப்படுகின்ற தொகைக்கு பதிலாக்கப்படுகிறது.

**வைத்தியசாலைகள்**

19. (i) வைத்திசயாலை ஒன்றின் உரிமையாளர் அவ்விடத்தில் உற்பத்தியாகும் (ஏற்படும்) கழிவுப் பொருட்களை கீழ்க்கண்ட விதத்தில் தேர்ந்து வேறாக்கல் வேண்டும் :-

(அ) உணவுக் கழிவுகள், உயிரியல் கழிவுகள் ;

(ஆ) மீளப் பாவனைக்குரிய கழிவுகள், மீண்டும் பாவனைக்கு மாற்றக்கூடிய கழிவுகள் ;

(இ) இவ்வுப யாப்பில் (இ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருள் வகைகள் தவிர வேறு கழிவுகள்;

(ஈ) வைத்தியசாலைக்குரிக்குரிய கழிவுகள் ;

(உ) இடத்தைக் கூட்டியதின் பின்னர் சேரும் தூசிகள் மற்றும் உலர்வுடைய கழிவுகள்.

(ii) (i) ஆவது உப பிரிவின் கீழ் (அ), (ஆ) பிரிவுகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருள் வகைகளை வெவ்வேறான உறைகளில் போட்டு அவற்றை அகற்றும் வரை பொருத்தமான இடமொன்றில் களஞ்சியப்படுத்தல் வேண்டும். (i) வது உப பிரிவின் கீழ் (இ), (ஈ) பிரிவுகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருள் வகைகளை அதற்காக விசேடமாகச் செய்யப்பட்ட பாத்திரத்தில் (தொட்டியில்) அல்லது உறைகளில் போட்டு வைக்க வேண்டியதுடன் அதற்காக வேறாக்கப்பட்ட இடத்தில் வைத்தல் வேண்டும். 1980 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் குறித்த வைத்தியசாலைக்கு விநியோகம் செய்யப்பட்ட சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய அக்கழிவுப் பொருட்களை அகற்றுதல் வேண்டும்.

(iii) I ஆவது உப பிரிவின் (அ), (ஆ) பிரிவுகளில் விசேடமாகக் குறிப்பிட்டுள்ள கழிவுப் பொருள் வகைகளை அதிகாரம் பெற்ற கழிவுப் பொருள் சேகரிப்பாளருக்கு அல்லது சபையால் காலா காலத்தில் தீர்மானிக்கப்படும் கட்டணமொன்றை செலுத்துவதன் மூலம் கழிவுப் பொருள் சேகரிப்பவருக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

(iv) இத்துணைவிதியில் பொருள் கோடல் சம்பந்தமாக வேறொரு பொருள் கோடல் தேவைப்பட்டாலான்றி "வைத்தியசாலை" என்பதற்கு ஏதாவதொரு நோயினால் அல்லது குறைபாட்டினால் அவதியுறுப வர்களுக்கு அல்லது மிருகங்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக உத்தேசிக்கப்படும் ஒரு இடம் (எவ்வாறு விபரஞ் செய்தாலும்) ஆவதுடன் தனியார் மருத்துவமனை, மகப்பேற்று மருத்துவமனை, சிகிச்சை நிலையம், மருத்துவ நிலையம், மிருக வைத்தியசாலை, மிருகச் சிகிச்சை நிலையம் ஆகியன உள்ளடங்கும்.-

"ஆபத்துக்குரியதுமான சுகாதார பாதுகாப்பு கழிவுகள்" என்பதற்கு சிகிச்சை நிலையக் கழிவுகள், உடல் பாகங்கள், நச்சு வகைகள், தொற்று நோய்க் கிருமிகள், அவசரமாகப் பரவக்கூடிய தொற்றுகள் ஆகிய சிறு கழிவுகள், ஊசிகள் போன்றவை.

20. (i) இல. 8 முதல் 19 வரை உள்ள துணைவிதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்படாத வியாபாரம் ஒன்றை நடாத்தும் ஒருவர் அல்லது மக்களின் பங்களிப்புடன் பொதுமார்க்க சம்பந்தப்பட்ட சமூக, கலாசார அல்லது கல்விச் செயற்பாட்டு ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தும் ஒருவர் இச்செயற்பாடுகளால் அல்லது அவ்வாறான நிறுவனம் ஒன்றை நடாத்தவதால் அவ்விடத்தில் உற்பத்தியாகின்ற (சேருகின்ற) கழிவுப் பொருட்களை கீழ்க் கண்ட விதத்தில் வேறாக்கல் வேண்டும்.-

(அ) உணவுக் கழிவுகள், உயிரியல் கழிவுகள் ;

(ஆ) மீளப் பாவனைக்கு உகந்த கழிவுகள், மீண்டும் பாவனைக்காக மாற்றம் செய்யக்கூடிய கழிவுகள் ;

(இ) ஆபத்திற்குரிய கழிவுகள் ;

(உ) இடத்தைக் கூட்டுவதால் சேகரமாகின்ற தூசிகள் மற்றும் உலர் கழிவுகள்.

(ii) (i) ஆவது உப பிரிவின் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள வேறுபாடுகளை ஏற்பாடு செய்யும் ஒருவர் அச்செயற்பாட்டின் மூலம் உண்டாகுகின்ற கழிவுகளை சேகரிக்க விசேட செயல் வழிமுறை ஒன்றை செய்வதற்காக சபைக்க அறிவித்தல் வேண்டும்.

(iii) தேர்ந்து வேறாக்கிய கழிகளை அகற்றும் வரை தனியார் உறையில் அடைத்து ஏற்புடையதான இடமொன்றில் வைத்தல் வேண்டும்.

(iv) இத்துணைவிதியின் (i) வது உப பிரிவின் (அ), (ஆ) பிரிவுகளில் விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருள் வகைகளை அதிகாரம் பெற்ற கழிவுப் பொருள் சேகரிப்பவர் ஒருவருக்கு அல்லது (i) வது உப பிரிவில் (இ) பிரிவில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருள்களுடன் சபையால் காலாகாலத்தில் எடுக்கப்படும் தீர்மானத் தின்படி கட்டணம் ஒன்றைச் செலுத்துவதன் பேரில் நகர கழிவுப் பொருள் சேகரிப்பாளர் ஒருவருக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

**வீதிகளும் பொது இடங்களும்**

21. (i) ஆணையாளர் அவர்களால் நகராதிபதியுடன் கலந்துரையாடி சபையின் அனுமதியின் கீழ் கீழ்க்காணும் கருமங்களைத் திட்டமிடு வதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் பரிபாலனம் செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும் :-

(அ) மாநகர சபை பிரதேச எல்லைகளுக்குள் அமைந்துள்ள வீதிகள், (பகிரங்க) பொது நிலையங்கள் பெருந்தெருக்கள், பொதுவடிகால் அமைப்புகள், நீரோடைகள் மற்றும் பொது விற்பனை நிலையங்கள் ஆகியவற்றை சுகாதார முறைப்படி நடாத்துதல்;

(ஆ) வீதிகள், பாதைகள் இரு பக்க ஓரங்களில் பொது நிலையங் களிலும் போதியளவு குப்பைத் தொட்டிகளை அமைத்து (விநியோகித்து) பராமரிப்புச் செய்தல்;

(இ) விழாக்களின் போதும், விசே சந்தர்ப்பங்களிலும் சபையால் தீர்மானிக்கும் ஏற்பாடுகள் உள்ள சந்தர்ப்பங்களிலும் சபையில் தீர்மானிக்கப்படும் போது அல்லது விழாக்கள் விசேட ஏற்பாடுகள் சந்தர்ப்பங்களில் முடிவுகள் எடுக்கும் போது குறித்த விசேட ஏற்பாடுகள் சந்தர்ப்பங்களில் ஒழுங்கமைப்பாளரின் கோரிக்கையின் பேரில் அல்லது பொது நிலையங்களில் பாவனைக்காக நடமாடும் கழிவுகள் குப்பைத் தொட்டிகளை விநியோகித்தல்;

(ஈ) வதிவிடப் பிரதேசங்களில் பொருத்தப்பட்டுள்ள பொது கழிவுப் பொருள் குப்பைத் தொட்டிகள் அல்லது கொள்கலன்கள் சுகாதார முறைப்படி பராமரிப்புச் செய்து நடாத்தப்படவும் அதனருகில் வசிக்கும் மக்களுக்கு இடைஞ்சல்கள் ஏற்பட முன்னர் அக்குப்பைத் தொட்டிகளில் அல்லது கொள்கலன்களில் போடப்பட்டுள்ள கழிவுகளை அகற்றுதல்;

(உ) மேற்குறித்த பிரிவுகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் பற்றிய முறைப்பாடுகள் கிடைத்தவுடன் அவற்றை விசாரணை செய்து அவசரமாக செயற்படல்.

(ii) சபையால் விசேடமாக ஊத்தை, குப்பை கூளங்களை போடுவதற்காக விநியோகிக்கப்படும் குப்பைத் தொட்டிகளில் நீர்த்தன்மையுடைய, வியாபார, நிறுவன தொழிநுட்ப மற்றும் வேறு வகையான கழிவுகளை போட்டு வைத்தல் என்பன எவரொருவரும் செய்தல் கூடாது.

**நகர சபைகளின் கடமைகள்**

*22.* (i) (i) செயலாளரால், நகராதிபதியவர்களுடன் கலந்துரையாடி சபையின் அனுமதியின்கீழ் கீழ்க்காணும் கருமங்களை திட்டமிடல், கண்காணிப்புச் செய்தல், கட்டுப்படுத்தல் மற்றும் பரிபாலனம் செய்தல்:-

(அ) கழிவுப் பொருட்களைக் குறைப்பதற்காக மீளப் பாவனைக்கு மீண்டும் மாற்று முறையில் பாவனைக்குரியதாக்கல் செய்தல்;

(ஆ) கழிவுப் பொருட்களை தேர்ந்து வேறாக்கல், ஒன்று சேகரித்தல், களஞ்சியப்படுத்தி விடுவித்தல், வெளியாக்கல் சம்பந்தமாக உணர்வுகளை ஏற்படுத்தும் செயல் முறைத் திட்டங்களை நடாத்தல், அல்லது ஊடகங்களின் மூலம் பிரசாரம் செய்தல்;

(இ) மீளப் பாவனை செய்யும் மாற்று முறையில் மீண்டும் பயன்படுத்தல் செயற்திட்டங்களில் ஈடுபாடுடைய சிறு வியாபார முயற்சியாளர்களுக்கு வசதிகள் செய்து கொடுத்தல்;

(ஈ) மேற்படி செயல்முறைத் திட்டங்களில் தொடர்புடையவர்களை ஊக்குவித்தல்;

(உ) கழிவுப் பொருட்கள் வெளியேற்றல் முறை பற்றிய வேறு விதத்திலான முறைகளைக் கையாளுதல்;

(ஊ) நகரத்தில் ஒவ்வொரு பிரதேசங்களிலுள்ள ஒவ்வொரு விதத்திலான கழிவுப் பொருள் வகைகளுக்காக சபையால் முடிவெடுக்கப்படும் பிரகாரம் கழிவுப்பொருட்களை சேகரிக்கும் திகதிகள், நேரங்கள், முறைகள் இன்னும் கட்டணங்கள், கழிவுப் பொருட்களை ஒன்று சேர்க்கும் கரும (வேலை) குறிப்பொன்று செய்தல் பகிரங்க விடுமுறை தினங்களில் கழிவுப் பொருட்களை சேகரிப்பதற்கான நிபந்தனைகள் என்பன அக்கரும குறிப்பு அட்டவணையில் உள்ளடக்கப்படல் வேண்டும்;

(எ) அதிகாரம் பெற்ற கழிவுப் பொருட்களை சேகரம் செய்பவருக்கு வேறாக ஒப்படைக்கப்படாத ஏதாவது வேறாக்கல் கழிவுப் பொருட்கள் கால அட்டவணைக்கிணங்க குறித்த நேரத்தில் சேகரித்தல்;

(ஏ) அதிகாரம் பெற்ற கழிவுப் பொருட்களை சேகரம் செய்பவருக்கு வேறாக ஒப்படைக்கப்படாத ஆபத்திற்குரிய கழிவுப் பொருட்களையும் வேறேதாவது கழிப்பொருட்களையும் சுகாதார முறைப்படி கொண்டு செல்லல் ;

(ஐ) ஆபத்திற்குரியதான கழிவுப் பொருட்கள் அல்லது ஆணையாளரினால் குறிப்பிடப்பட்ட வேறேதாவது கழிவுப் பொருள் வகைகள் தவிர வீதியைக் கூட்டுவதனால் வடிகால்களை சுத்தப்படுத்துவதால், பொது இடங்களை சுத்தம் செய்வதனால்சேகரமாகும் கழிவுகளை பொதுக் குப்பைத் தொட்டிகளில் சேகரமாகின்ற கழிவுப் பொருட்கள் சபையின் தொழிலாளர்களால் சேகரம் செய்யப்படுகின்ற கழிவுப் பொருள்கள் அதிகாரம் பெற்ற கழிவுப்பொருள்கள் சேகரம் செய்பவருக்கு ஒப்படைத்தல்;

(ஒ) உணவு மற்றும் உயிரியல் மீளப் பாவிக்கக் கூடிய கழிவுப் பொருட்களை செயன்முறையில் முடியுமான வரை முழுமை யாக அல்லது பகுதியாக ஒழுங்கமைக்க, செயற் படுத்த, வேலைத்திட்டமொன்று உட்பட நகர கழிவுப் பொருட்களை சேகரிப்பவர்களால் சேகரிக்கப்படும் வேறாக்கப்பட்ட கழிவுப் பொருட்கள்சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கவும் இச்செயல் முறைகளால் நிராகரிக்கப்படும் மற்றும் கழிவுப் பொருள் வகைகளின் வேறு விசேடமற்ற கழிவுப் பொருட்களையும் செயலாளரால் அனுமதிக்கப்படும் விதத்தில் அகற்றுவ தற்கான ஏற்ற முயற்சிகள் மேற்கொள்ளல்;

(ஓ) மத்திய சுற்றாடல் அதிகார சபையுடன் கலந்துரையாடி ஆணையாளரால் அனுதிக்கப்படுகின்ற விதத்தில் ஆபத்திற் குரிய அனைத்து கழிவுப் பொருட்களையும் அகற்றுதல்;

(ஔ) *1980* ஆம் ஆண்டின் *47* ஆம் இலக்க, தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க அனுமதிப்பத்திரம் அல்லது சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரமொன்று பெற்றுக் கொள்ளுதலும் அவ்வனுமதிப்பத்திரத்தை அல்லது சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தில் விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குக் கீழ் கழிவுப் பொருட்களை எரித்தல் அல்லது சுகாதார முறைப்படி நிலங்களை கரைப்படுத்தல்;

(க) கழிவுப் பொருட்களை கூட்டுதல் சேகரம் செய்தல், தேர்ந்து வேறாக்கல், கொண்டு செல்லல் (வேறு இடத்திற்கு) மாற்றுதல், அகற்றுதல் போன்ற வேலைகளில் ஈடுபடுகின்ற ஊழியர்களுக்கு ஏற்ற உடைகள் கையுறைகள், முகமூடி, பூட், சப்பாத்து என்பன விநியோகம் செய்தல்;

(ச) வீடொன்று அல்லது வேறு இடமொன்றில் நிர்மாணம் செய்தல் அல்லது புனர் நிரமாணம் செய்தல் ஆகியவற்றுக் காக சபைக்கு விண்ணப்பப்பத்திரம் ஒன்று முன்வைத்தி

ருக்கும் சந்தர்ப்பத்தில் நிர்மானித்தல் அல்லது புனருத்தாரனம் செய்தல் காரணமாக உண்டாகின்ற கழிவுப் பொருட்களை அகற்றும் விதம் மற்றும் குறிப்பிட்ட வேலைகளை ஆரம்பிக்கும் கட்டத்திலும் முடிக்கும் கட்டம் இடித்த கட்டிட கற்குவியல்களை, இடிபாடுகளை களஞ்சியப் படுத்தல், சரிப்படுத்தல் அகற்றுதல் போன்ற ஏற்பாட்டு முறைகள் பற்றிய விபரங்களை பரிசீலனை செய்தலும் அனுமதித்தலும்;

(ட) சபையின் இடங்களுக்கான உள்ளகக் கழிவுப் பொருள்கள் முகாமைத்துவ திட்டங்களை ஆக்கஞ் செய்தல்;

(த) 2000 திண்ம கழிவுப் பொருள் முகாமைத்துவம் பற்றி தேசிய உபாய வழிமுறைகள் இன்னும் உரிய சட்டங்களுக்கமைய விபரமாக குறைந்த பட்சம் ஒவ்வொரு கலண்டர் வருடம் பூரணமாகின்ற மற்றும் கடைசியான அகற்றுதல் சம்பந்தமாக 03 வருடங்கள் முன்னோக்கி பூரணமாகின்ற திண்ம கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ நடைமுறைத் திட்டங்களை ஆக்கஞ் செய்தலும் நடைமுறைப்படுத்தலும் அத்திட்டம் பூரணமாகின்ற கால எல்லைப் பிரகாரம் சபையால் வருடா வருடம் அனுமதித்தல்

(ப) (அ) முதல் (ப) வரையான பட்டியலிலுள்ள செயற்பாடுகள் சம்பந்தமாக கிடைக்கப்பெறுகின்ற ஏதாவதொரு முறைப்பாடு அது ஏற்புடையதாவது ஏற்படப்போகும் இடைஞ்சலுக்காயின் மூன்று நாட்களுக்குள்ளும் வேறு முறைப்பாடுகளாயின் பதினான்கு நாட்களுக்குள்ளும் விசாரணை செய்தலும் உடனடியாக தேவைப்படும் நடவடிக்கை எடுத்தலும்.

### அனுமதிப்பத்திரங்கள்

23. (i) கழிவுப் பொருட்கள் மீளப் பாவனைக்கு எடுக்கப்படுகின்ற மற்றும் மாற்றம் செய்வதன் மூலம் பாவனைக்கு உட்படுத்துகின்ற சேதனப் பசளை, உயிரியல் வாயு, அல்லது வேறு உற்பத்திகள் உற்பத்தி செய்கின்ற எவரும் கீழ்க் காணும் விடயங்களைப் பூரணப்படுத்துவதாயின் அக்கருமங்களுக்காக அவருக்கு சபையால் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படும் :-

(அ) சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உப யாப்பின் பிரகாரம் நகர பிரதேச எல்லைக்குள் அல்லது வேறு உள்ளூராட்சி நிறுவன பிரதேசமொன்றில் ஏதாவது ஒரு வியாபாரத்தை நடாத்தல்;

(ஆ) 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் விநியோகிக்கப்படுகின்ற சுற்றாடல், பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் கைவசமிருத்தல்;

(இ) சேகரிக்கப்பட்ட கழிவுப் பொருட்களுக்காக சபையால் அனுமதிக்கப்பட்ட தரத்திற்கு ஏற்ப தீர்மானிக்கப்படுகின்ற கழிவுப் பொருட்கள் சேகரம் செய்யும் மையங்களை விநியோகித்தல்;

(ஈ) குறித்த வியாபாரம் மாநகர சபை எல்லைக்குள் நடாத்தப்படுவதாயின் சபையால் காலா காலத்தில் முடிவு செய்யும் பிரகாரம் அக்கழிவுப் பொருட்களை சேகரம் செய்வதற்காக கட்டணமொன்றை ஆணையாளருக்கு செலுத்துவதன் மூலம் கழிவுப் பொருட்களை ஒழுங்காக்கும் போது அல்லது எரிக்கும் போது மீதமாகின்ற அல்லது நிராகரிக்கப்படுகின்ற அல்லது உப உற்பத்தியாக்கஞ் செய்கின்ற கழிவுகளை சபை அனுமதிக்கும் பிரகாரம் சபைக்கு ஒப்படைக்க இணங்குதல்;

(ii) சபை அனுமதிப்பத்திரம் வழங்குவதை நிராகரிக்குமிடத்து, மறுத்தல் செய்யுமிடத்து அவற்றிற்கான காரணத்தை விண்ணப்பதாரர் கேட்பதாயின் 30 தினங்களுக்குள் அதற்கான காரணத்தை எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்;

(iii) ஆணையாளரால் செல்லுபடியாகும் காலப் பகுதிக்குள் சேகரம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்ட கழிவுப் பொருள் வகைகளை அல்லது குறித்த கழிவுப் பொருட்களை சேகரம் செய்வதற்கு அனுமதியளிக்கப்படுகின்ற பிரதேசங்களும் வேறு ஏற்ற நிபந்தனைகளும் அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்;

(iv) இத்துணைவிதியின் (i) உப பிரிவின் கீழான ஏற்பாடுகளுக்கமைய செயற்படாதவிடத்து இத்துணைவிதியின்கீழ் விநியோகம் செய்யப்பட்ட அனுமதிப்பத்திரம் செல்லுபடியற்றதாகுதல் வேண்டும்.

(v) (iv) வது உப பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் அனுமதிப்பத்திரம் ஒன்று செல்லுபடியற்றதாக்கிய சந்தர்ப்பத்தில் எவரொருவராவது கழிவுப் பொருட்களை சேகரம் செய்யவோ அல்லது பெற்றுக் கொள்ளவோ செய்யாதிருத்தல் வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் அனுமதிப்பத்திரத்தை செல்லுபடியாக்கியுள்ளமை பற்றி பொது மக்கள் அறிந்து கொள்ளும் வண்ணம் ஆணையாளர் ஊடகங்கள் மூலமாக போதிய அளவு பிரசாரம் செய்தல் வேண்டும்.

### கழிவுப் பொருட்களை ஒதுக்கித் தள்ளிவிடக்கூடிய பிரதேசங்கள்

24. சபையால் கழிவுப் பொருட்களை ஒதுக்கித்தள்ளி விடக்கூடிய விடயத்திற்காக ஒதுக்கப்பட்ட பிரதேசத்திற்கு அதிகாரம் பெறாத ஒருவர் உட்பிரவேசிக்கக்கூடாது. அத்துடன் நடமாடாதிருப்பதுடன் அப்பிரதேசத்தில் பொருளொன்றை பாத்திரம் ஒன்றை எறிகின்ற பொருளொன்றை வைத்தல் கலத்தல் அகற்றல் செய்தல் கூடாது. எவரும் விசேடமாகக் குறிப்பிடப்படும் நிபந்தனைகளின் பிரகாரம் சபையால் அனுமதி அளிக்கப்பட்டாலன்றி சபையால் காலாகாலத்தில் உத்தரவிடும் தடைசெய்யப்பட்ட கழிவுப் பொருட்களை போடாதிருத்தல் வேண்டும்.

25. அனுமதிக்கப்படும் ஏதாவது நிபந்தனையின் கீழ்ஆணையாளரினதும் மத்திய சூற்றாடல் அதிகாரியின் எழுத்தினாலான முன் அனுமதியின்றி எவரும் மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள எந்தவிடத்திலும் அல்லது வசதியற்றதாக அதற்குப் புறம்பான இடமொன்றில் உண்டாகின்ற (சேகரமாகும்) கழிவுப்பொருட்களை போடுவதற்காக விநியோகம் செய்தல் பிரயோசனப்படுத்தல் கூடாது.

### ஏனையவைகள்

26. (i) ஆணையாளருக்கு அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட ஒருவருக்கு அனைத்து சாதாரண நேரங்களிலும் எந்தவொரு இடத்தினுள் உட்பிரவேசிக்கவும் அதன் உரிமையாளர் அல்லது வசிப்பாளர் இவ்வுப யாப்பின் ஏற்பாடுகளுக்கமைய செயல்படுகின்றாரா என பரிசீலனை செய்யவும் அதிகாரமுண்டு.

(ii) ஏதாவது இடத்தின் உரமையாளர், வசிப்பாளர், பொறுப்பாளர், முகாமையாளர் அல்லது அதில் வசிக்கும் அல்லது வேலை செய்யும் ஒருவர் ஆகிய எவராவதுஆணையாளருக்கு அல்லது அதிகாரம் பெற்ற அதிகாரி ஒருவருக்குத் தேவைப்படும் தகவல்களை முன்வைத்தல் வேண்டும்;

(iii) இத்துணைவிதியின்கீழ் ஆணையாளருக்கு அல்லது அதிகாரம் பெற்ற அதிகாரி ஒருவருக்கு தமது அதிகாரங்களைப் பாவிக்கும் போது எவரும் இடைஞ்சல்கள் செய்யக்கூடாது.

*27*. சபையால் காலா காலத்தில் எடுக்கப்படும் முடிவுகளின் பிரகாரம் இவ்வுப யாப்பை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் பெற்ற அதிகாரிக்கு ஊக்குவிப்புப்படிகளைப் பெற முடியும்.

*28*. இத்துணைவிதியின்எந்தவொரு ஏற்பாட்டையாவது மீறுகின்ற எவருக்கும் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் குற்றத்திற்கு குற்றவாளியாகின்றார் .

**பொருள் கோடல்**

*29*. இத்துணைவிதியின்கருமங்களுக்காக வசனங்களுக்கு பொருள் கோடல் சம்பந்தமாக வேறு பொருள்கள் தேவைப்பட்டாலன்றி,

"கழிவுப் பொருட்கள் அல்லது திண்ம கழிவுப் பொருட்கள்" என்பது அதை அகற்றுபவருக்கு நுகர்வுப் பெறுமதியற்ற பொருள் என்பதுடன் குப்பை கூளம், சிதறிக்கிடக்கும் பொருட்கள், ஊத்தை, பாதைகளை சுத்தப்படுத்தும் போது சேகரமாகும், கழிவுப் பொருட்கள், தூசிகள், மலம், வேறு மற்றும் சாம்பல் என்பன பொருள்படும்;

"உணவுக் கழிவுகள்" மனிதனின் நுகர்வுக்கு பிரயோசனப்படுத்த முடியாத இறைச்சி, மீன், கோழி இறைச்சி, முட்டை, மரக்கறிவகைகள், பழவகைகள் மற்றும் ஏனைய உணவுப் பொருள்களாகும்.

"ஆபத்திற்குரிய கழிவுகள்" என்பது மக்களின் சுக வாழ்வுக்கு அல்லது சுற்றாடலுக்கு இடைஞ்சல் நஷ்டம் விளைவிக்கும் நச்சுத்தன்மையுடைய எரியக்கூடிய, நோய்களைப் பரப்புகின்ற, அரித்துத் திண்ணக்கூடிய இரசாயன மாற்றமுடைய, கதிரியக்கத் தன்மையுடைய கழிவுகள்.

"சேகரம் செய்தல்" என்பது அதிகாரம் பெற்ற சேகரிப்பாளர் அல்லது நகர கழிவுப் பொருட்கள் சேகரிப்பாளர் என்போரால் குப்பை கூளங்களை, கழிவுப் பொருட்களை மீண்டும் பயன்படுத்துவதற்கு ஏற்றதாக, பதனஞ் செய்வதற்குரியதான, எரித்தலுக்கான கழிவுகளை கொண்டு செல்வதற்கான வசதிகளுக்கு கழிவுப் பொருட்களை சேகரித்தலாகும்.

'கலப்பு உரம்" காபனொக்சைட் கழிவுப் பொருள்கள் உயிர் சேதனமாகியதன் பின்னர் கிடைக்கப்பெறும் உற்பத்தி எனப்படும் இவை மண்ணை வளமாக்கு தன்மையை அடைகின்றது.

"காரியதரிசி" என்பது நகரம் சம்பந்தப்பட்டவரை மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அதிகாரம்) கீழ் நகரத்திற்காக தாபிக்கப்பட்ட நகர சபையின் ஆணையாளரைக் குறிப்பிடுவ தாகும். இன்னும் அந்நகர சபையின் ஆணையாளருக்குப் பதிலாக நியமிக்கப்பட்ட ஒருவராவார் மற்றும் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் கீழ் ஆணையாளரின் அதிகாரங்கள் கடமைகள் கருமங்கள் என்பனவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு அல்லது செய்வதற்கு அதிகாரம் அளிக்கப்பெற்ற அச்சபையின் உத்தியோகத்தர் ஒருவர் அதிகாரம் அளிக்கப்பட்ட அளவில்.

"களஞ்சியப்படுத்தல்" என்பது உரித்தாளர்களுடைய அல்லது வசிப்பாளரின் இடத்தினுள் அல்லது அனுமதிக்கப்பட்ட பொது சேகரிக்கும் இடத்தில் கழிவுப் பொருள்களைப் போடுதல் அல்லது வைத்தல்.

"கட்டணம்" என்பது சபையால் காலாகாலத்தில் தீர்மானிக்கப் படுகின்ற ஏதாவது ஒன்றுக்கான கட்டணமாகும்.

"வீட்டுத் தோட்டக் கழிவுகள்" என்பது வீட்டுத் தோட்டத்திலுள்ள மரங்களிலிருந்து அல்லது கன்றுகளிலிருந்து அகற்றப்படும் (கிளைகளும்) பகுதிகளும் வீட்டுத் தோட்டத்திலிருந்து அகற்றப்படுகின்ற கற்கள், மண் என்பன.

"உயிர் சேதனக் கழிவுகள்" என்பன கிருமிகளால் அரிக்கப்பட்டு உக்கிப் போன கழிவுகள்.

"பொது இடங்கள்" என்பன பாதை ஒன்று, திடலொன்று, பொது நிலம் ஒன்று, பாதைப் பாதுகாப்பு ஓரங்கள், ஆறு, நீர் ஓடையொன்று, பொதுக் கட்டிடம் ஒன்று, மயானம் ஒன்று, பஸ் தரிப்பிடமொன்று, புகையிரத நிலையமொன்று, தடாகமொன்று, நீர்த் தேக்கமொன்று, குளமொன்று. களப்பொன்று, உப ஆறொன்று, நீரோடை ஒன்று, கடல், கடற்கரை, பொது மக்களால் பிரயோசனப்படுத்தப்படும் இடங்கள்.

"மாற்று வடிவமைப்பான கழிவுப் பொருள்கள்" என்பன கழிவுப் பொருட்களை கழிவுப் பொருளென இனங்காண முடியாதபடி சுய தன்மையை மாற்றி புது நுகர்வு உற்பத்தி (வாடிக்கை) ஒன்றாகச் செய்யும் கழிவுப் பொருட்கள்.

"மீளப் பாவிக்கக்கூடிய கழிவுப் பொருள்கள்" என்பது கழுவுவதால், கிருமிகள் அழிதல் அல்லது வேறு முறைகளால் சுத்தம் செய்த பின்னர் பிரயோசனப்படுத்தக்கூடிய பொருள்கள் என பொருள்படும்.

"போக்குவரத்து" என்பது மனிதர்களால், மிருகங்களால் அல்லது இயந்திரத்தினால் செயற்படுத்தப்படுகின்ற முறைகள் மூலம் கழிவுப் பொருட்களை ஒன்று சேர்க்கும் இடத்தில் இருந்து அவற்றைப் பதப்படுத்துதல், வெளியாக்குதல் என்பவற்றுக்காக குறிப்பிட்டுள்ள இடத்திற்கு கொண்டு செல்லுதல் எனப் பொருள்படும்.

"தொட்டி/பாத்திரங்கள்/வேறு உறைகள்" என்பது உப யாப்பில் குறிப்பிட்டுள்ள தேவைகளுக்கேற்ப கழிவுப் பொருட்களைக் களஞ்சியப்படுத்தல், விடுவித்தல், ஒன்று சேர்த்தல், கொண்டு செல்லுதல் என்பவற்றிற்காக பாவிக்கப்படும் தொட்டியொன்று, பாத்திரமொன்று, உறையொன்று அல்லது வேறு இடக்கூடிய பொருட்கள் எனப் பொருள்படும்.

"அதிகாரம் பெற்ற சேகரிப்பாளர்" என்பது கழிவுப் பொருட்களை சேகரிப்பதற்கு அல்லது பெற்றுக் கொள்வதற்கு ஆணையாளர் அவர்களால் அனுமதிப்பத்திரம் ஒன்று பெற்றுக் கொண்ட ஒருவர் ஆவார் எனப் பொருள்படும்.

"அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்" என்பது இத்துணைவிதியின்கீழ் ஏற்பாடாகியுள்ள அரச கருமங்களை செய்வதற்கு அல்லது செயற்படுத்தவதற்கு ஆணையாளரால் எழுத்து மூலம் அதிகாரம் பெற்ற ஒருவர் எனப் பொருள்படும்.

"வெளியாக்குதல்" என்பது மீண்டும் பாவிக்க முடியாததும் மாற்று முறைகளைக் கையாள முடியாததும் பிரயோசனப்படுத்த முடியாததுமான அனைத்துக் கழிவுப் பொருட்களையும் நிரந்தரமாக வேறுபடுத்தி வைப்பதற்கு காணியொன்றின் மீது அல்லது காணியொன்றினுள் சேகரித்து வைத்தல் எனப் பொருள்படும்.

"மாற்றக்கூடிய இடங்கள்" என்பது சபையால் இக்கருமங்களுக்காக குறிப்பிடப்படும் இடம் எனப் பொருள்படுவதுடன் அவ்விடத்திலிருந்து மீளப்பாவிப்பதற்கும், சரிப்படுத்துவதற்கும், வெளியாக்குவதற்கும் வசதியாக கழிவுப் பொருட்களை எடுத்துச் செலவதற்கு திறமைவாய்ந்த முன்னேற்றமடையக்கூடியதுமான கழிவுப் பொருட்களை மிகவும் சிறியதளவிலான வாகனங்களிலும் பெரிய வாகனங்களிலும் வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லும் இடம் எனப் பொருள்படும்.

"ஒரு நபர்" என்பது கூட்டமைக்கப்பட்ட அல்லது கூட்டமைக்கப்படாத கம்பனியொன்றின் அல்லது பல நபர்களைக் கொண்ட சங்கம் ஒன்றின் குழுவெனவும் பொருள்டும்.

"நகர கழிவுப் பொருட்களை ஒன்று சேகரிப்பவர்" என்பது தொட்டிகளுக்கும், பாத்திரங்களுக்கும் கழிவுப் பொருள்களைக் கூட்டிப் போடுதல், ஒன்று சேர்த்தல், பெற்றுக் கொள்ளல், வெளியாக்குதல் போன்ற கருமங்களுக்காக சபையினால் ஈடுபடுத்தப்படுகின்ற ஊழியர் ஒருவர் அல்லது இக்கருமங்களை செய்வதற்காக சபையுடன் ஒப்பந்தமொன்றிற்கு உடன்பட்டிருக்கும் ஒருவர் எனப் பொருள்படும்.

"வேறாக்கல்" என்பது இவ்வுப யாப்பில் அமைக்கப்பட்டுள்ள தன்மைகள், விதிமுறைகளுக்கேற்ப கழிவுப் பொருட்களை வெவ்வேறாக தேர்ந்து வேறாக்கல் எனப் பொருள்படும்.

"ஒழுங்குபடுத்தல்" என்பது கழிவுப் பொருட்களை பிரயோசனமுடைய நிலைமைக்கு மாற்றக்கூடிய வழிமுறைகள் எனப் பொருள்படும்.

"சபை" என்பது ........ மாநகர சபை எனப் பொருள்படும்.

"நகரப் பிரதேசம்" என்பது மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 ஆவது அதிகாரம்) அதிகாரத்தின் கீழ் பிரகடனப்படுத்தப் படுகின்ற பிரதேசம் எனப் பொருள்படும்.

"சுகாதார முறையில் நிலங்களை நிறைத்தல்" என்பது அந்நிலங்களை அண்டிய சமூக சுகாதார மற்றும் சுற்றாடல் ஆகியவற்றின் பிரதிபலிப்புக்களைக் குறைப்பதற்கு இலங்கையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கட்டளைகளுக்கு இணங்க (தரம்) கழிவுப் பொருட்களை நிலத்தினுள் கடைசியாக புகைத்தல் எனப் பொருள்படும்.

"உரிமையாளர் அல்லது வசிப்பாளர்" என்பது ஓரிடத்தில் உரிமையாளர் அல்லது உரிமையாளருக்காக அற்றோணி அதிகாரம்பெற்ற ஒருவர் அல்லது உரிமையாளரால் தனது கைத்தொழிலை அல்லது கைத்தொழிற்சாலை என்பவற்றின் முகாமைத்துவத்திற்காக நியமனம் செய்யப்பட்ட பிரதிநிதியொருவர் அல்லது பொறுப்பாளர் ஒருவர் அல்லது வாடகைக்கு பெற்ற ஒருவர் ஆகியோர் உட்படுவதுடன் வேறு நபர்களின் உத்தரவின்கீழ் செயல்படுகின்ற முகாமையாளர் ஒருவர் எனப் பொருள்படும்.



## பிரதேச சபைகள் அதிகாரப் பிரிவுகளுக்குள் நுளம்புகளையும் நோய்க் கிருமிகளையும் இல்லாதொழித்தல் பற்றிய துணைவிதிகள்

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கமுடைய மாகாண சபைகள் (நேர் எதிர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கமுடைய உள்ளூராட்சி விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் என்னால் ஆக்கப்பட்ட கீழ்க்காணப்படும் நகல் துணைவிதிக்கள் மேற்கண்ட பிரிவின்கீழ் இவ்வாறு பிரகடனப்படுத்தப்படுகின்றது.

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கமுடைய பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 122 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் 126 ஆவது பிரிவின் 9 ஆவது உப பிரிவின் (ஏ) பந்தியில் நுளம்புகளையும் நோய்க் கிருமிகளையும் அழித்தல் பற்றிய துணைவிதியை சட்டமாக்குவதற்கு பிரதேச சபைக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருப்பதுடன் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கமுடைய உள்ளூராட்சி நிறுவனங்கள் (அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி) சட்டத்தின் 3 ஆவது பிரிவின் பிரகாரம் இவ் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதியை ஏற்று நடைமுறையாக்குவதற்கு தென் மாகாணத்தின் பிரதேச சபைகளுக்கு அதிகாரம் அளிக்கப் பட்டுள்ளது.

உள்ளூராட்சி விடயங்களுக்கு
பொறுப்பான அமைச்சர்,
தென் மாகாணம்.

2012.05.21.

### துணைவிதிகள்

துணைவிதிகள் பிரதேச சபைகள் அதிகாரப் பிரிவுக்குள் நுளம்புகள் மற்றும் நோய்களைப் பரப்பும் கிருமிகள் பெருகுவதை தடுத்தல், அவற்றினை அழித்தொழித்தல் மூலம் அதிகாரப் பிரிவின் சுற்றாடலை மேம்படுத்துவதற்கும், பரவும் நோய்கள் வியாபித்தலை தடுப்பதற்குமான துணைவிதிகள் என அழைக்கப்படுகின்றது.

2. பிரதேச சபைகள் அதிகாரப் பிரிவிற்குள் எவரொருவராலும் எந்த இடத்திலும் நுளம்புகள் அல்லது நோய்களுக்கு காரணமாகின்ற கிருமிகள் பெருகுதல் மற்றும் விருத்தியாகுதல் என்பவைகளுக்கு ஏதுவாகின்ற கருமங்களைச் செய்தல் அல்லது செய்வித்தல் அல்லது அவ்வாறு நடைபெற இடமளித்தல் என்பன செய்யப்படக் கூடாது.

3. நுளம்புகளையும் நோய்களுக்கு காரணமாகின்ற கிருமிகளையும் அழிப்பதற்காக பிரதேச சபைகள் அதிகாரப் பிரிவிற்குள் உள்ள அனைத்து இடங்களில் வசிப்பவர்கள் அனைவரும் :

(அ) அனைத்து திறந்த நிலையிலுள்ள புட்டிகள், போத்தல்கள், பெட்டிகள், பிளாஸ்டிக் கொள்கலன்கள், டயர்கள், தேங்காய்ச் சிரட்டைகள், தேங்காய்க் கோம்பைகள் மற்றும் அவ்விடத்திலுள்ள நீர் தேங்கி நிற்கக்கூடிய பாண்டங்கள், பொருட்கள் என்பவற்றை அகற்றுவதற்கு அல்லது அழிப்பதற்கு அல்லது அவ்வாறு செய்விப்பதற்கு ஏற்பாடுகள் செய்தல் வேண்டும்.

(ஆ) வசிப்பிடம் அல்லது வசிப்பிடமல்லாத கட்டிடங்களின் மழைப் பீளிகள், தண்ணீர் வழிந்தோடும் குழாய்கள் மற்றும் வீட்டுத் தோட்டங்களில் உள்ள வடிகால்களில் தண்ணீர்

வழிந்தோடுவதற்கான வழிவகை செய்தல் வேண்டும். அதற்கான தடைகள் இருப்பின் பரிசீலனை செய்து நீக்குதல் வேண்டும்.

(இ) வசிப்பிடம் அல்லது வசிப்பிடமல்லாத இடங்களிலுள்ள அனைத்து நீர்ப்பாண்டங்கள், தண்ணீர்த் தாங்கிகள், தண்ணீரைச் சேமிக்கும் வேறு பாண்டங்கள், சிறந்த நிலையில் இருக்கவேண்டியதுடன் உரிய காலத்தில் புனருத்தாரணம் செய்யப்பட்டிருப்பதுடன் அவை நுளம்புகள் மற்றும் கிருமிகள் என்பவற்றிலிருந்து பாதுகாக்கப்படக்கூடிய விதத்தில் மூடிவைக்கப்பட வேண்டியதுடன் அவற்றினுள் நுளம்புகள் அல்லது கிருமிகள் பெருகுவதை தடுக்கக்கூடிய விதத்தில் வைத்திருத்தல் வேண்டும். அத்துடன் நுளம்புகள், கிருமிகள் பெருகுவதை தடுப்பதற்கான வழிமுறைகளையும் செய்தி ருத்தல் வேண்டும்.

(ஈ) வளவுகளில் உள்ள கிணறுகள் நல்ல நிலையில் அமைந்திருக்க வேண்டியதுடன் நுளம்புகள் மற்றும் நோய்க் கிருமிகள் பெருகாவண்ணம் பாதுகாத்தல் வேண்டும்.

(உ) வெற்றாக்கக்கூடிய விதத்தில் ஆக்கஞ்செய்யப்பட்ட செயற்கை தடாகங்கள் இருப்பின் அவற்றை குறைந்தபட்சம் கிழமைக்கு ஒரு முறையாவது வெற்றாக்கிச் சுத்தப்படுத்துதல் வேண்டும்.

(ஊ) வீட்டுத் தோட்டங்களிலும் காணிகளிலும் உள்ள மதகுகளினால் வழிந்தோடும் நீர் ஒன்று சேர்வதால் நீர்க்குழிகள் ஏற்படுவதை தடுப்பதற்காக அவற்றை தினந்தோறும் பராமரித்தல் வேண்டும்.

(எ) உணவுக்காக அல்லது அலங்காரத்துக்காக விளைவிக்கப் படும் (வளர்க்கப்படும்) தாவரங்களைத் தவிர ஏனைய அனைத்து பற்றைக் காடுகளையும், மரங்களையும் மனிதர்கள் வாழுகின்ற இடங்களாகப் பாவிக்கப்படும் கட்டிடங்கள் அல்லது நிர்மாணங்களில் இருந்து 5 மீட்டர்களுக்கு உட்பட்ட பகுதிகளில் இருந்து அகற்றுதல் வேண்டும்.

(ஏ) அனைத்து கற்குழிகள், மாணிக்கக் கற்களுக்காகத் தோண்டப்பட்ட குழிகள், மட்குழிகள் அல்லது வேறு விடயங்களுக்காக தோண்டப்பட்ட குழிகள் ஆகியவை தண்ணீர் சேகரமாகுவதை தடுக்கும் விதத்தில் அமைந் திருத்தல் வேண்டும்.

(ஐ) நீர் நோய்கள் கூடிய கரை நிலங்களில் உண்டாகின்ற (வளர்கின்ற) அலங்காரத் தாவரங்கள், பாசி வகைகள், யானைக்கால் நோய்ப் பாசி உட்பட நீர்த் தாவரங்களும், நுளம்புகள், கிருமிகள் விருத்தியாவதற்கு ஏதுவாகின்றதென அறியக்கூடிய வேறு தாவரங்கள் என்பவற்றை அகற்றி அழிக்கவேண்டியதுடன் அத்தாவரங்கள் தண்ணீர் ஓடும் வழியாக மிதந்து செல்வதை தடைசெய்ய தடுப்புகள் அமைத்தல் வேண்டும்.

(ஒ) மலசல கூடங்கள், தண்ணீர்க் குழிகள், தண்ணீரை உறிஞ்சக்கூடிய குழிகள் மற்றும் அவற்றை சூழவுள்ள அவ்விடத்திலுள்ள அனைத்து மலசலகூடங்களிலும் நுளம்புகள் விருத்தியாவதை தடுக்கும் விதத்தில் நடாத்தல் வேண்டும்.

(ஓ) மயானம் அல்லது வேறு இடங்களில் மரணித்தவர்களின் ஞாபகார்த்தமாக கட்டப்படும் சமாதிகள் தண்ணீர் தங்காத விதத்தில் நிர்மாணிக்கப்படல் வேண்டும்.

4. பிரதேச சபையின் தலைவர் அவர்களால் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட ஓர் உத்தியோகத்தரால் எந்தவொரு நாளிலும் மு. ப. 6.00 முதல் பி. ப. 6.00 மணி வரை உள்ள காலப்பகுதியில் ஓரிடத்தில் பிரவேசித்து கீழ்க்காணும் விடயங்களை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக அவ்விடத்தை பரிசீலனைக்கு உட்படுத்துவது கட்டாயமானதாகும் :-

(அ) அவ்விடம் நுளம்புகள், கிருமிகள் விருத்தியாகக்கூடியதாக என்பது பற்றி,

(ஆ) அவ்விடத்தில் வசிப்பவர்கள் இத்துணைவிதியின் ஏற்பாடுகளைப் பின்பற்றுகின்றனரா என்பது பற்றி,

(இ) அவ்விடத்தில் நுளம்புகள் விருத்தியாவதை தடுப்பதற்கு மற்றும் அழிப்பதற்கு ஏதாவதொரு முயற்சி எடுக்க வேண்டுமாயின் அம்முயற்சி (செயற்பாடு) எவ்வாறானது என்பது பற்றி,

(ஈ) அவ்விடத்தில் கிருமிநாசினி தெளித்தல் சிறந்த முறையில் நடைபெற்றுள்ளதா என்பது பற்றி,

5. (அ) தலைவர் அவர்களால் அல்லது அவரால் இக்கருமங் களுக்காக எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவரால் ஓர் இடத்திற்கு தேவைப்படும் எனக் கருதப்படும் பரிசீலனை ஒன்றின் பின் அவ்விடத்தில் நுளம்புகள், கிருமிகள் என்பவற்றை அழிப்பதற்கும் விருத்தியாதலைத் தடுப்பதற்கும் செய்யவேண்டிய வழிமுறைகளை எழுத்திலான அறிவித்தல் ஒன்றின் மூலம் அவ்விடத்தின் உரிமையாளர் அல்லது வசிப்பாளருக்கு உத்தரவிட முடியும்.

(ஆ) இத்துணைவிதியின் (அ) ஆவது பந்தியின்கீழ் அறிவித்தல் ஒன்று கையளிக்கப்பெற்ற இடமொன்றின் உரிமையாளரால் அல்லது வசிப்பாளரால் அவ்வறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள் அவ்வுத்தரவை நிறைவேற்றல் வேண்டும்.

6. (அ) தலைவர் அவர்களின் எழுத்துமூலமான அனுமதி இன்றி ஏதாவது ஓர் இடத்தின் உரிமையாளர் அல்லது வசிப்பாளர் அதில் ஒரு கிணறு கட்டுதல் அல்லது நீர்த்தாங்கி ஒன்று, தடாகம் ஒன்று, நீர்ப்பாத்திரம் ஒன்று, நீர்ப்பு அல்லது நீர் சேகரமாகும் அல்லது நீர் தங்கும் வேறு அமைப்புகளை நிர்மாணித்தல் கூடாது.

(ஆ) இத்துணைவிதியின் (அ) ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு மாற்றமாக நிர்மாணம் ஒன்று செய்யுமிடத்து தலைவர் அவர்களால் அவ்விடத்தின் உரிமையாளருக்கு அல்லது வசிப்பாளருக்கு கையளிக்கப்படும் எழுத்திலான அறிவித்தல் ஒன்றின் மூலம் அவ்வறிவிப்பில் குறிக்கப்பட்டுள்ள காலத்திற்குள் கிணற்றை அல்லது நீர்த்தாங்கியை, தடாகத்தை, நீர்ப்பாத்திரத்தை, நீர்ப்பூவை அல்லது அமைப்பை குறித்த பொருட்களால் நிறைத்து மூடும்படி அல்லது வேறு விதத்தில் அழித்து விடும்படி அல்லது அக்காலத்தினுள் அறிவித்தலில் உத்தரவிடப்பட்டுள்ள பிரகாரம் அதை மாற்றஞ் செய்யும்படி உத்தரவிட முடியும்.

7. (அ) 5 ஆவது அல்லது 6 ஆவது உப விதியின்கீழ் உள்ள அறிவித்தல் ஒன்றை ஓர் இடத்தின் உரிமையாளருக்கு அல்லது வசிப்பாளருக்கு நேரடியாக கைளித்தல் அல்லது அவ்வறிவித்தலை

அவ்விடத்தில் பார்வைக்குத் தெரியக்கூடிய விதத்தில் ஒட்டுதல் அல்லது ஒப்படைத்தல்.

(ஆ) ஓரிடத்தில் கூட்டு உரிமையாளர்கள் இருவர் அல்லது அதற்குகூடிய எண்ணிக்கையானோர் வசிப்பிடமாகக் கொண்டிருப்பின் அவ்வுரிமையாளர்களில் ஒவ்வொரு உரித்தாளரும் 7(1) துணைவிதியினதும் 5 ஆவது துணைவிதியினதும்கீழ் அவர்களுள் ஒருவருக்கு ஒப்படைக்கப்படும் அறிவித்தலின் உத்தரவுகளை செயற்படுத்துவது சம்பந்தமாக உதாசீனம் செய்தல் அல்லது செய்யாது இருத்தல் என்பவற்றிற்கு பொதுப்படையாகவும் தனித்தனியாகவும் பொறுப்புடையவராகின்றார்.

(இ) 5 ஆவது அல்லது 6 ஆவது துணைவிதியின்கீழ் அறிவித்தல் ஒன்றை பெற்றுக்கொண்ட இடமொன்றின் உரிமையாளர் அல்லது வசிப்பாளர் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்தினுள் அவ்வறிவிப்பிலுள்ள உத்தரவுகளை உதாசீனம் செய்யும் சந்தர்ப்பத்தில் தலைவர் அவர்களால் அல்லது அவ்விடயத்திற்காக தலைவர் அவர்களால் அதிகாரமளிக்கப்பட்ட வேறொரு உத்தியோகத்தர் ஒருவரால் எந்தவொரு நாளிலும் மு. ப. 6.00 மணி முதல் பி. ப. 6.00 மணி வரையான நேரத்தினுள் தேவைப்படுகின்ற உதவியாளர்களுடனும், ஊழியர்களுடனும் அவ்விடத்தினுள் புகுந்து அவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள கருமங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் நடைமுறைப்படுத்தச் செய்வதற்கும் அல்லது நடைமுறைப்படுத்த ஒழுங்குசெய்வதற்கும் முடியும்.

(ஈ) எந்தவொரு இடத்தினது உரிமையாளருக்கு அல்லது அவ்விடத்தின் வசிப்பாளருக்கு 5 ஆவது அல்லது 6 ஆவது துணைவிதியின்கீழ் ஒப்படைக்கப்பட்ட அறிவித்தல் ஒன்றில் குறிப்பிட்டுள்ள ஏதாவதொரு கருமத்தை அல்லது கருமங்களை தலைவர் அவர்களால் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட அதிகாரி ஒருவரால் நடைமுறைப்படுத்தியபோது அல்லது செய்தபோது அக்கருமத்தை அல்லது கருமங்களை நடைமுறைப்படுத்தும்போது பிரதேச சபைக்கு ஏற்பட்ட செலவினங்களை அவ்விடத்தின் உரிமையாளர் அல்லது வசிப்பாளர் பிரதேச சபைக்கு செலுத்துதல் வேண்டும். தலைவர் அவர்களால் தமது கையொப்பத்துடனான அது பற்றிய எழுத்திலான வேண்டுகோளின் பின்னர் 14 நாட்களுக்குள் அப்பணத்தை உரிமையாளர் அல்லது வசிப்பாளர் பிரதேச சபைக்கு செலுத்த வேண்டியதுடன் அவ்வாறு இன்றேல் பிரதேச சபை கட்டளைச் சட்டத்தின் 8 ஆவது (உப) பிரிவின் ஏற்பாடு ஏற்புடையதாகின்றது.

8. இத்துணைவிதிகளில் ஏதாவதொரு ஒழுங்கமைப்பை மீறுகின்ற எவரொருவரும் பிரதேச சபைகள் சட்டத்தின் பிரகாரம் குற்றத்திற்கான குற்றவாளி ஆகின்றனர்.

9. சொற்கள் தொடர்பாக வேறொரு பொருள் கோடல் தேவைப்பட்டாலன்றி இவ்வுப யாப்புகளில் -

"உரிமையாளர்" என்பது எந்தவொரு உரிமையாளர் அல்லது வரி செலுத்துபவரும் இடமொன்றில் வாடகைக்கு அல்லது பிரயோகத்திற்கு ஆகிய எவ்விதத்திலோ உரிமைக்கு உரித்துக்கோருபவர்.

"குடியிருப்பாளர்" என்பது ஓரிடத்தில் குடியிருக்கும் அல்லது வேறொருவரின் பிரதிநிதியாக இருப்பவர் அல்லது பொறுப்புடைய முகாமையாளர் அல்லது பரிபாலிப்பவர்.

"இடம்" என்பது ஓர் இடம், ஒரு வீடு, கட்டிடமொன்று அல்லது நிர்மாணம் ஒன்று பாவனையிலுள்ள அல்லது கைவிடப்பட்ட கிணறு ஒன்று, கப்பல் ஒன்று, கொள்கலன் ஒன்று அல்லது கைவிடப்பட்ட வாகனம் ஒன்று அடங்குவதுடன் ஒரு தடாகம், நீர்த்தாங்கி, வாவி, நீர் வழியொன்று, மதகொன்றின், ஆறொன்றின் ஓரங்கள் என்பனவும் அடங்கும்.

"அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்" என்பது தலைவர் அவர்களால் எழுத்துமூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட அச்சபையின் ஓர் உத்தியோகததர் அல்லது ஓர் ஊழியர்.

"நோய்க் காரணி கிருமிகள்" என்பது நுளம்புகள், நோய்களைப் பரப்பும் வேறு கிருமிகள்.

"தலைவர்" என்பது உரிய பிரதேச சபையின் தலைவர் ஆவார்.

"சபை" என்பது .................................... பிரதேச சபையாகும்.

4-88/5

---

### திண்ம கழிவுப்பொருட்கள் பற்றிய துணைவிதி

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கமுடைய மாகாண சபைகள் (நேர் எதிர்விளைவுகள் ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கமுடைய உள்ளூராட்சி நிறுவனங்கள் (அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி) சட்டத்தின் 2 ஆவது பிரிவின்கீழ் மாகாண உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் என்னால் ஆக்கப்பட்டு கீழே காணப்படும் நகல்கள் துணைவிதி மேலே குறிப்பிட்ட பிரிவின் பிரகாரம் இவ்வாறு பிரசுரிக்கப்படுகிறது.

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 122 ஆவது பிரிவுடன் வாசிக்கப்படவேண்டிய குறித்த கட்டளைச் சட்டத்தின் 93 ஆவது பிரிவும் 126 ஆவது பிரிவின் 9 ஆவது உப பிரிவின் (ஆ), (இ) பகுதிகளால் கடின கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம் பற்றிய துணைவிதியை ஆக்குவதற்கு மாநகர சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளதுடன் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கமுடைய உள்ளூராட்சி நிறுவனங்கள் (அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் இவ்வங்கீகரிக்கப்பட்ட துணைவிதியை ஏற்று நடைமுறைப்படுத்துவதற்காக தென் மாகாணத்தின் பிரதேச சபைகளுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி விடயங்களுக்கு
பொறுப்புடைய அமைச்சர்,
தென் மாகாணம்.

2012.05.21.

#### பொது

இத்துணைவிதி திண்ம கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம் பற்றிய துணைவிதி என அழைக்கப்படுகின்றது.

2. பிரதேச எல்லைக்குட்பட்ட பகிரங்க இடங்களில், தனியார் இடங்களில், வீதிகளில், பெருந்தெருக்களில் உண்டாகின்ற திண்ம கழிவுப் பொருட்களை வேறாக்கல், களஞ்சியப்படுத்தல், ஒன்று சேகரித்தல், கொண்டுசெல்லல், வேறிடங்களுக்கு மாற்றுதலுக்கான வழிமுறைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் நடாத்துதல், வெளியேற்றல் சம்பந்தமான கட்டளைகள், கண்காணிப்புக்கள், பரிசீலனைகள் என்பனவற்றிற்காக துணைவிதி ஆக்கப்படுகின்றது.

3. பிரதேச சபை அதிகாரப் பிரிவுகளுக்குள் அமைந்துள்ள ஓரிடத்தில் அனைத்து உரிமையாளர்களும் அல்லது குடியிருப்பவர்களும் தமது இடத்தை கழிவுப் பொருட்களற்ற சுகாதார அமைப்புடைய சிறந்த நிலையில் வைத்திருத்தல் வேண்டும்.

4. பிரதேச சபைகள் பிரதேசத்தில் அமைந்துள்ள ஏதாவதொரு இடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் தமது இடத்தினுள் உண்டாகின்ற கழிவுப் பொருட்களை ஒன்றுசேர்த்தல், வேறாக்குதல், களஞ்சியப்படுத்துதல், கொண்டு செல்லல் மற்றும் வெளியேற்றல் என்பனவற்றிற்கானவற்றைச் செய்தல் வேண்டும். இல்லாவிடில் இத்துணைவிதியின் ஏற்பாடுகளுக்கமைய அவ்வாறு செய்வித்தல் வேண்டும்.

5. (i) ஓரிடத்தில் அனைத்து உரிமையாளர்களும் அல்லது குடியிருப்பாளர்கள் அவர்களது இடத்தினுள் பெறப்படுகின்ற திண்ம கழிவுப் பொருட்களை கூட்டுதல் அல்லது வேறு வழிகளைக் கையாண்டு தினந்தோறும் அல்லது அதற்குக் குறைந்த காலத்திலாவது ஒன்று சேர்த்தல் வேண்டும்.

(ii) சகல உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளர்களும் இத்துணைவிதியின் முன்னைய உப பிரிவின் பிரகாரம் ஒன்றுசேர்த்த கழிவுப் பொருட்களை இல. 8 முதல் 20 வரையுள்ள துணைவிதிகளில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய வேறாக்குதல் வேண்டும். அல்லது அவ்வாறு செய்யப்பட ஏற்பாடு செய்தல் வேண்டும்.

(iii) உரிமையாளரால் அல்லது குடியிருப்பாளரால் கழிவுப் பொருட்களைக் களஞ்சியப்படுத்த அல்லது வெளியேற்ற உபயோகிக்கப்படும் உறை, சாக்கு, பெரிய பாண்டம், அல்லது வேறு கொள்பாத்திரங்கள் இல. 8 முதல் 20 வரையுள்ள துணைவிதிகளின் ஏற்பாடுகளுக்கமைய ஒன்று சேர்ப்பதற்காகச் சிறந்த முறையில் பராமரிப்புச் செய்தல் வேண்டும். அவை கிழிந்த, துவாரமுள்ள, உடைந்த அல்லது ஈரலிப்புக் காரணமாக மிருதுவான அல்லது வேறு காரணங்களினால் பாவிக்க முடியாத நிலையில் இருப்பின் அவற்றை உபயோகித்தல் கூடாது. உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் எதிர்பார்ப்பதாயின் சபையால் எடுக்கப்படும் முடிவின் பிரகாரம் ஒரு பகுதி சலுகை அடிப்படையில் அல்லது முழுவதும் இலவசமாக அவ்வாறான கொள்தொட்டிகளை விநியோகிக்க முடியும்.

(iv) I ஆவது உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய ஒன்று சேர்க்கப்பட்ட கழிவுப் பொருட்களை சபையால் காலத்திற்குக் காலம் முடிவெடுத்து பகிரங்கப்படுத்திய சபை அதிகாரப் பிரிவுக்குள் நடைமுறையாகின்ற கழிவுப் பொருள் சேகரிக்கும் முறைக்கும் நேரசூசியின்படி உரிமையாளரால் அல்லது குடியிருப்பாளரால் அகற்ற முடியும்.

(v) உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் வீட்டில் உள்ளவர்களின் அல்லது அண்டை வீட்டில் உள்ளவர்கள், வருகையாளர்கள் ஆகியோரின் சுகாதாரத்தை அல்லது பிரதேசத்தின் சுகாதாரப் பாதுகாப்பு பாதிக்கக்கூடிய விதத்தில் கழிவுப் பொருட்களை ஒன்றுசேர்த்தல், களஞ்சியப்படுத்தல், அகற்றுதல்களைத் தவிர்த்தல் வேண்டும்.

6. (i) எவரொருவராவது பாதையொன்றுக்கு, வீதியொன்றுக்கு, பெருந்தெருவொன்றுக்கு, ஒழுங்கை ஒன்றுக்கு அல்லது வேறு பொது நிலையமொன்றுக்கு அல்லது இடமொன்றுக்கு அல்லது வடிகால் ஒன்றுக்கு, தண்ணீர்த் தடாகமொன்றுக்கு அல்லது தண்ணீர் வழிந்தோடும் இடமொன்றுக்கு அல்லது கடலுக்கு கழிவுப் பொருட்களை போடுவதைத் தவிர்த்தல் வேண்டும்.

(ii) எவரொருவராவது மாநகர சபைப் பிரதேசத்திற்குள் திடலொன்றின் சுற்றாடலுக்கு பங்கம் விளையும்படி கழிவுப் பொருட்களை தீமூட்டுதல் கூடாது.

(iii) எந்தவொரு உரிமையாளருக்கோ அல்லது குடியிருப்பாளருக்கோ 7 ஆம் இலக்க துணைவிதியின் ஏற்பாடுகளுக்கமைய ஏதாவதொரு கழிவுப் பொருளை விடுவிக்கச் செய்தல், கலத்தல், ஒழுங்குசெய்தல் அல்லது அகற்றல் ஆகியவற்றுக்காக அனுமதி பெறவேண்டிய சந்தர்ப்பங்களில் அவ்வாறு அனுமதி பெறமுடியாது போகுமாயின் அவர் அதிகாரம்பெற்ற கழிவுப் பொருட்களை சேகரிக்கும் ஒருவருக்கு ஒப்படைக்க முடியும்.

(iv) இல. 7 இன் துணைவிதியின் விதிகளுக்கிணங்க விடுவிக்க, கலக்க அல்லது அகற்ற முடியாமற் போன கழிவுப் பொருட்களை மேலே (iii) இல் கூறப்பட்ட விதிகளுக்கிணங்க அதிகாரம்பெற்ற கழிவுப் பொருட்கள் சேகரிக்கும் ஒருவரால் சேரிக்கப்பட்ட கழிவுப் பொருட்கள் இல. 8 முதல் 20 வரையிலான துணைவிதிகளின் பிரகாரம் அகற்றப்படல் வேண்டும்.

7. (i) ஏதாவது ஓரிடத்தின் உரிமையாளருக்கு அல்லது குடியிருப்பாளருக்கு கீழ்க்கண்ட விடயங்கள் சம்பந்தமாக தவிர கழிவுப் பொருட்களை அவ்விடத்திலேயே அழிக்கச் செய்ய முடியும் :-

(அ) சபையால் அவ்வாறான கழிவுப் பொருட்களை அழித்துவிட தடைசெய்யப்பட்டுள்ள பிரதேசங்கள் ;

(ஆ) சபையால் குறிப்பிடப்பட்டுள்ள சில கழிவுப் பொருட்கள்

(ii) இடமொன்றின் உரிமையாளர் அல்லது வசிப்பாளர் ஆணையாளரால் அனுமதிக்கப்பட்ட முறைப்படி அல்லது அவரின் கட்டளைப்படி நிர்மாணிக்கப்பட்ட அடுப்பொன்றில் அல்லது சூளை ஒன்றில் கழிவுப் பொருட்களை எரிக்க முடியும். இன்றேல் ஆணையாளரால் அனுமதிக்கப்பட்ட கழிவுப் பொருட்களை கையாளுதல், பதனஞ் செய்தல் அல்லது புதைத்தல்.

(iii) உரித்துடையவர் அல்லது வசிப்பாளர் ''சேதனப் பசளை'' பீப்பாய்களுக்கு ஆணையாளருக்கு விண்ணப்பித்தால் அவ்வுரித்துடையவருக்கு அல்லது வசிப்பவருக்கு அச்சேதனப் பசளைப் பீப்பாய்களைப் பராமரித்தல் செய்யக்கூடிய இடவசதிகளிருப்பின் அப்பீப்பாய்களின் செலவின் ஒரு பகுதியை அல்லது முழுவதையும் அறவிட்டு அல்லது இலவசமாக பெற்றுக்கொள்ள முடியும்.

(iv) உரித்தாளர் அல்லது வசிப்பாளர் தமதிடத்தினுள் சேகரிக்கப்படுகின்ற வீட்டுத்தோட்ட கழிவுகளை முடிந்தவரையில் ஆணையாளரால் அனுமதிக்கப்பட்ட பிரகாரம் கையாளுதல் பதனஞ்செய்தல் வேண்டும். அவ்வுரித்தாளர் அல்லது வசிப்பாளர் எஞ்சிய வீட்டுத் தோட்டக் கழிவுகளை வெளியாக்குவதற்கு உரியவற்றை குறித்த கட்டணத்தைச் செலுத்தி பிரதேச கழிவுப் பொருட்கள் சேகரிக்கும் நபருக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

(v) வீதியொன்றில் அல்லது பெரும் தெருவொன்றின் அருகில் உள்ள ஏதாவதொரு மரம் அல்லது அதன் கிளை ஒன்றை வெட்டும் ஒருவர் உடனடியாக அதனை அகற்றுதல் வேண்டும். அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அவ்வாறு இன்றேல் சபையால் நிர்ணயிக்கப்படும் கட்டணம் ஒன்றைச் செலுத்தி மாநகர சபையின் பொறுப்பாளருக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

(vi) ஒவ்வொருவரும் அவரது பராமரிப்பிலுள்ள ஏதாவது ஒரு மிருகத்தை வீதியொன்றுக்கு அல்லது பெருந்தெருவொன்றிற்கு, பொது இடமொன்றிற்கு மலங்கழிப்பதைத் தடுக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அவ்வாறு மலங்கழிப்பின் இல. 8 முதல் 20 வரையான துணைவிதியின் பிரகாரம் அதைச் சுத்தப்படுத்தி அப்புறப்படுத்துதல் அந்நபரின் பொறுப்பாகும்.

(vii) எந்தவொருவராவது மாநகர சபை பிரதேசத்தினுள் எந்தவொரு வகையிலான கழிவுப் பொருளொன்றையும் வாகனமொன்றிலிருந்து வீதிக்கு அல்லது பெருந்தெருவுக்கு அல்லது பொது இடமொன்றிற்கு போடுதல் அல்லது சேகரிப்புச் செய்தல் கூடாது.

(viii) வீடொன்று அல்லது வேறொரு இடமொன்றில் நிர்மாணிக்கப் படும் நிர்மாணம் அல்லது பழுதுபார்த்தல் என்பனவற்றிற்கு விண்ணப்பிக்கும் ஒருவர் அவரது இடத்தில் உற்பத்தியாகும் திண்மக் கழிவுப் பொருட்கள், வெளிப்படுத்துகின்ற கழிவுப் பொருட்கள் கையாளுதல், பதனஞ் செய்தல் முறைகள் பற்றிய விபரங்களை அவர் தனது விண்ணப்பப்பத்திரத்தில் உட்படுத்தல் வேண்டும்.

**வீட்டுத் தோட்டம் (நிலம்)**

8. (i) ஒவ்வொரு உரித்தாளரும் அல்லது வசிப்பாளரும் கூட்டுதலால் அல்லது வேறு முறைகளால் சேகரிக்கப்படும் கழிவுகளை கீழ் உள்ள பிரகாரம் தேர்ந்தெடுத்து வேறாக்கல் வேண்டும் :-

(அ) உணவுக் கழிவுப் பொருட்களும் மற்றும் உயிர் சேதனக் கழிவுப் பொருட்களும் ;

(ஆ) மீண்டும் பாவிக்கக்கூடியதும், மாற்றஞ்செய்து உபயோகப் படுத்தக்கூடியதுமான கழிவுப் பொருட்கள் ;

(இ) ஆபத்துக்குரிய கழிவுப் பொருட்கள் ;

(ஈ) மிருகங்களின் மலம், உடலின் பகுதிகள், சாணம் என்பன ;

(உ) இடத்தைக் கூட்டியதன் பின்னர் சேகரமாகும் தூசிகள், வேறு கழிவுகள்.

(ii) சகல உரித்தாளர்களும் வசிப்பாளர்களும் அவ்வாறு தேர்ந்து வேறுபடுத்திய கழிவுகளை வெவ்வேறான உறைகளில் பாத்திரங்களில் போடவேண்டியதுடன் அவற்றை அகற்றும் வரை அதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் வைத்திருத்தல் வேண்டும். உணவுக் கழிவுப் பொருட்களையும் உயிர் சேதன கழிவுப் பொருட்களையும் தண்ணீர் உரைக்காத பொருட்களால் ஆக்கப்பட்டதும், எலிகள், கிருமிகள் மற்றும் வேறு உயிரினங்கள் உட்புகாதவாறு உரிய முறையில் மூடப்பட்ட உறையில் வைத்தல் வேண்டும். உயிரினங்களின் மலம், உடற்பகுதிகள் அல்லது சாணம் போன்ற கழிவுப் பொருட்கள் அகற்றப்பட வேண்டிய கழிவுப்பொருட்களின் தன்மையை கவனத்தில் கொண்டு காலா காலத்தில் தீர்மானிக்கப்பட்ட கட்டணமொன்றை மாநகர சபைகள், பிரதேச சபைகள் என்பனவற்றிற்கோ ஆணையாளருக்கு செலுத்துவதன் பேரில் சேகரிப்பவருக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

(iii) சகல உரித்தாளருக்கும் அல்லது வசிப்பவருக்கும் (1) பந்தியின் (அ), (ஆ) உப பிரிவுகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருள்களை அதிகாரம்பெற்ற கழிப் பொருட்கள் சேகரிப்பாளருக்கு ஒப்படைக்க முடியும். உரித்தாளர் அல்லது வசிப்பாளர் அவ்வாறு செய்யாவிடில் அவர் (இ) உப பிரிவில் விசேடமாகக் குறிப்பிட்டுள்ள கழிவுப் பொருள் வகைகளுடன் உரிய கழிவுப் பொருட்களை நகரக் கழிவுப் பொருட்கள் சேகரிப்பாளர் ஒருவருக்கு ஒப்படைத்தல் வேண்டும். அவ்வாறின்றேல் சபையால் ஒவ்வொரு வகையான கழிவுப் பொருள்களுக்காக நிர்மாணிக்கப்பட்டுள்ள தொட்டிகளில் அல்லது அவ்வாறான கழிவுப் பொருட்களுக்காக சபையால் விநியோகிக்கப்படும் தொட்டிகளில் அல்லது உறைகளில் போட்டு வைத்தல் வேண்டும்.

9. (i) வாடகை வீடுகள் பலதைக் கொண்ட அதிக மாடிகளைக் கொண்ட கட்டிடங்களின் சகல உரித்தாளர்களும் வசிப்பவர்களும் அவர்களது கழிவுப் பொருட்களை கீழ்க்கண்ட விதத்தில் வேறுபடுத்தல் வேண்டும் :-

(அ) உணவுக் கழிவுப் பொருட்களும் மற்றும் உயிர் சேதனக் கழிவுப் பொருட்களும் ;

(ஆ) மீண்டும் பாவிக்கக்கூடியதும், மாற்றஞ்செய்து உபயோகப் படுத்தக்கூடியதுமான கழிவுப்பொருட்கள் ;

(இ) ஆபத்துக்குரிய கழிவுப் பொருட்கள் ;

(ஈ) மிருகங்களின் மலம், உடலின் பகுதிகள், சாணம் என்பன ;

(உ) இடத்தைக் கூட்டியதன் பின்னர் சேகரமாகும் தூசிகள், வேறு கழிவுகள்.

(ii) (i) ஆவது பந்தியில் குறித்துக்காட்டப்பட்டுள்ள கட்டிட மொன்றின் உரிமையாளர் அல்லது வசிப்பாளர் ஆணையாளரால் அனுமதிக்கப்பட்ட தரத்திலும் முறைப்படியும் மூன்று விதமான பாத்திரங்கள் அல்லது உறைகளை விநியோகிக்க வேண்டியதுடன் அவற்றை சுத்தமாகவும் சுகாதார முறைப்படியும் பராமரித்தல் வேண்டும்.

(iii) (i) உப பிரிவின் பிரகாரம் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ள கட்டிடமொன்றின் உரிமையாளர் அல்லது வசிப்பாளர் (ii) ஆவது உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமையாதவிடத்தில் ஆணையாளரால் அறிவிக்கப்படும் திகதியில் அல்லது அதற்கு முன்னர் உரிய பாத்திரத்தில் அல்லது உறையை விநியோகிக்கும்படி உரிமையாளருக்கு அல்லது வசிப்பாளருக்கு கட்டளையிட ஆணையாளருக்கு அதிகார முண்டு. ஆணையாளரின் உத்தரவின் பிரகாரம் செயற்படுவது உரிமையாளரின் அல்லது வசிப்பாளரின் கடமையாகும்.

(iv) கட்டிடமொன்றின், நிலத்தின் அல்லது மாடியின் உரிமையாளர் அல்லது வசிப்பாளர் தேர்ந்து வகைப்படுத்தப்பட்ட கழிவுப் பொருட்கள் வைக்கப்பட்டுள்ள உரிய பாத்திரத்தில் அல்லது உறையில் இடல் வேண்டும்.

(v) இத்துணைவிதியின் (i) ஆவது உப பிரிவின் (அ) மற்றும் (ஆ) பிரிவுகளில் விசேடமாகக் குறிப்பிட்டுள்ள கழிவுப் பொருள் வகைகளை அப்புறப்படுத்தல் அதிகாரம்பெற்ற சேகரிப்பாளரது கடமையாகும். அவ்வாறு அப்புறப்படுத்தப்படாத ஏதாவது கழிவுப் பொருட்கள் (இ), (ஈ) பிரிவுகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருட்கள் வகைகளையும் நகர கழிவுப் பொருட்கள் சேவையாளருக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

10. (i) பிரதேச சபையின் முன் அனுமதியைப் பெற்று சேரிகளில் வசிப்பவர்களின் பாவனைக்காக ஆணையாளரால் கழிவுப் பொருட்கள் தொட்டி, உறைகள் இலவசமாக விநியோகித்தல் சட்டபூர்வமானதாகும்.

(ii) சகல சேரி வீடுகளிலும் உரிமையாளர்களும் வசிப்பாளர்களும் அவரது வசிப்பிடத்தில் சேகரமாகும் கழிவுகளை பின்குறிப்பிடும் பிரகாரம் தேர்ந்து வகைப்படுத்தி அவரது வசிப்பிடத்திற்கு

அருகாமையில் வைக்கப்படுகின்ற அனுமதித்த பாத்திரத்தில் அல்லது உறைகளில் இடல் வேண்டும் :-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிர் சேதன கழிவுகள் ;

(ஆ) மீண்டும் பாவிக்கக்கூடிய அல்லது எடுக்கக்கூடிய கழிவுகள் ;

(இ) ஆபத்தான கழிவுப் பொருட்கள்

(iii) இத்துணைவிதியில் (ii) ஆவது உப பிரிவின் (அ), (ஆ) பிரிவுகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளை அகற்றுவதற்காக கழிவுப் பொருட்களை சேகரிப்பவர் ஒருவருக்கு அனுமதி வழங்க ஆணையாளருக்கு அதிகாரமுண்டு.

**கடைகள், அலுவலகங்கள்**

11. (i) கடையொன்றின் அல்லது அலுவலகமொன்றின் சகல உரிமையாளரும் வசிப்பாளரும் ஒவ்வொரு தொகுதியிலும் சேருகின்ற கழிவுகளைப் பின்வரும் விதத்தில் தேர்ந்து வேறாக்கல் வேண்டும் :-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிர் சேதன கழிவுகள் ;

(ஆ) மீண்டும் பாவிக்கக்கூடிய அல்லது எடுக்கக்கூடிய கழிவுகள் ;

(இ) ஆபத்தான கழிவுப் பொருட்கள் ;

(ஈ) இடத்தைக் கூட்டுவதால் சேகரமாகும் தூசி மற்றும் உலர்ந்த கழிவுகள்.

(ii) தேர்ந்து வேறாக்கம் செய்த கழிவுகளை அகற்றும் வரை வெவ்வேறாக தொட்டிகளில் (பாத்திரங்களில்) அல்லது உறையில் போட்டு ஏற்ற இடமொன்றில் வைத்திருத்தல் வேண்டும்.

(iii) கடையொன்றில் அல்லது அலுவலகமொன்றில் உரிமையாளர் அல்லது வசிப்பாளர் இவ்வுப யாப்பின் (i) ஆவது உப பிரிவின் (அ), (ஆ) பிரிவில் விசேடமாகக் குறிப்பிட்டுள்ள கழிவுப் பொருட்களை அதிகாரம்பெற்ற சேகரிப்பாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

(iv) பல மாடிகள் அல்லது பல நிலப்பகுதிகள் அடங்கிய அல்லது அலுவலகத் தொகுதி ஆகியவற்றின் உரிமையாளர்கள் அல்லது அவற்றில் வசிப்பவர்கள் ஆணையாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரங்களுக்கு ஏற்ப அக்கடைகளில் அல்லது அலுவலகங்களில் தேர்ந்து வேறாக்கப்பட்ட கழிவுகள் சேகரம் செய்ய, அல்லது வைக்க, ஒவ்வொரு கடைகளுக்கும் அலுவலகங்களுக்கும் கழிவுத் தொட்டிகள், உறைகள் தேவையான அளவு விநியோகித்தல் வேண்டும்.

(v) இத்துணைவிதியின் (iv) ஆவது பிரிவில் விசேடமாகக் குறிப்பிட்டுள்ள கடையொன்றின் அல்லது அலுவலகமொன்றின் ஓர் உரிமையாளர் தேர்ந்து வேறாக்கிய கழிவுகளை வெவ்வேறாக தொட்டிகளில் அல்லது உறைகளில் போடல் வேண்டும். இத்துணைவிதியின் (i) ஆவது உப பிரிவின் (அ), (ஆ) பிரிவுகளில் விசேடமாகக் குறிப்பிட்டுள்ள கழிவுப் பொருள் வகைகளை அதிகாரம்பெற்ற கழிவுப் பொருட்கள் சேகரிப்பாளருக்கு ஒப்படைத்தல் உரிமை சகல உரிமையாளருக்கும் வசிப்பாளருக்கும் உள்ளது.

(vi) அதிகாரம்பெற்ற கழிவுப் பொருள் சேகரிப்பவரால் சேகரிக்கப்படாத இத்துணைவிதியின் (i) ஆவது உப பிரிவில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருள் வகைகளையும் (ii) ஆவது பிரிவில் (அ), (ஆ) பிரிவுகளில் விசேடமாகக் குறிப்பிட்டுள்ள கழிவுப் பொருள் வகையொன்றை சபையால் காலாகாலத்தில் எடுக்கப்படும் முடிவுகளுக்கு ஏற்ப கட்டணமொன்றை ஆணையாளருக்குச் செலுத்துவதன் மூலம் உரியபடி உரிமையாளரால் அல்லது வசிப்பாளரால் நகர கழிவுப் பொருட்கள் சேகரிப்பாளருக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

(vii) அயலவர்களுக்கு அல்லது குறித்த கடையில் அல்லது அலுவலகத்தில் சேவை புரிபவர்களுக்கு ஏதாவது சுகாதார உடல்நலப் பிரச்சினைகள் ஏற்படாதிருக்கும் பொருட்டு கழிவுப் பொருட்களை அகற்றுதல் இத்துணைவிதியின் விசேடமாக கட்டளை இடப்பட்டுள்ள கழிவுப் பொருள் தொட்டிகள் அல்லது உறைகள் என்பனவற்றைப் பராமரித்தல் ஒரு கடையின் அல்லது அலுவலகத்தின் உரிமையாளருக்குப் பொறுப்பாகும்.

(viii) இத்துணைவிதி சம்பந்தமாக கருமங்கள் பற்றிய பொருள் கோடல் தேவைப்படின்-

"அலுவலகம்" என்பதற்கு, 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கம் கொண்ட கடைகள் மற்றும் அலுவலகங்கள் ஆகியவற்றில் சேவையில் ஈடுபட்டுள்ளவர் பற்றிய சட்டத்தில் (129 ஆவது அதிகாரம்) கொடுக்கப்பட்டுள்ள பொருளேயாகும்.

"வசிப்பாளர்" என்பதற்கு, கடை ஒன்றின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் அல்லது வியாபாரமொன்றின் அல்லது அலுவலகமொன்றின் பொறுப்பாளராவார்.

''சாப்பு'' என்பதற்கு, மொத்தமான அல்லது சில்லறையான வியாபார நிமித்தம் பொருட்களை வைத்திருக்கும் இடமொன்று ஆவதுடன் உணவு வகைகளை விற்பனைக்காக வைத்திருக்கும் இடமொன்றும் மற்றும் தலைசிரைக்கும் கடை ஒன்று அல்லது சிகை அலங்காரம் செய்யும் இடங்கள் என்பனவும் உள்ளடங்கும்.

**ஹோட்டல் (சாப்பாட்டுக்கடை)**

12. (i) எந்தவொரு சாப்பாட்டுக்கடை நடாத்துபவரும் அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட எவரொருவரும் தமது இடத்தில் சேகரமாகும் கழிவுப் பொருட்களை பின்வரும் பிரகாரம் தேர்ந்து வேறுபடுத்தல் வேண்டும். அவ்வாறின்றேல் அவ்வாறு செய்ய ஒழுங்குசெய்தல் வேண்டும் :-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிர்சேதன கழிவுகள் ;

(ஆ) மீண்டும் பாவிக்கக்கூடிய அல்லது எடுக்கக்கூடிய கழிவுகள் ;

(இ) ஆபத்தான கழிவுப்பொருட்கள் ;

(ஈ) இடத்தைக் கூட்டுவதால் சேகரமாகும் தூசி மற்றும் உலர்ந்த கழிவுகள்.

(ii) சகல சாப்பாட்டுக் கடைக்காரரும் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட எவரும் தேர்ந்து வேறாக்கப்பட்ட கழிவுப் பொருட்களை அகற்றும்வரை வெவ்வேறாக ஏற்புடைய தொட்டிகளில் (பாத்திரங்களில்) உறைகளில் போட்டு ஏற்ற இடமொன்றில் வைத்தல் வேண்டும்.

(iii) சகல சாப்பாட்டுக் கடைக்காரரும் அல்லது அவரால் எழுத்து அதிகாரம் அளிக்கப்பட்ட எவரொருவராலும் நுளம்புகள், எலிகள்,

கிருமிகள் அல்லது வேறு பூச்சிகள் உட்புகாதவாறு அனைத்து உணவுக் கழிவுப் பொருட்களையும் மற்றும் உயிர் சேதனப் பொருட்களையும் பிளாஸ்டிக் அல்லது உலோகத்திலான மூடிகளையுடைய பூரண பாதுகாப்புடைய பாத்திரத்தில் (தொட்டியில்) அல்லது வேறு உறைகளில் அடைத்தல் வேண்டும்.

(iv) இத்துணைவிதியின் (i) உப பிரிவின் (அ), (ஆ) பிரிவில் விசேட மாகக் குறிப்பிட்டுள்ள கழிவுப் பொருள் வகைகளை அதிகாரம்பெற்ற கழிவுப் பொருட்கள் சேகரிப்பாளர் ஒருவருக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

(v) இத்துணைவிதியின் (iv) ஆவது உப பிரிவின்கீழ் ஒப்படைக்கப்படாத அவ்வாறான கழிவுப் பொருட்களையும் (i) உப பிரிவில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருட்களின் வகை, அக்கழிவுப் பொருட்களின் தன்மையை கவனத்திற்கொண்டு சபையால் காலாகாலத்தில் முடிவு செய்யப்படும். கட்டணம் ஒன்றை உரிமையாளர் அல்லது வசிப்பாளர் ஆணையாளருக்குச் செலுத்தி பிரதேச கழிவுப் பொருட்களைச் சேகரிப்பாளருக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

(vi) இத்துணைவிதியின் கருமங்களுக்காக சொற்கள் சம்பந்தமாக பொருள் கோடல் தேவைப்பட்டாலன்றி "ஹோட்டல்" என்பதற்கு சயன அறைகள் வசதிகளுடன் அல்லது சயன அறை வசதிகளின்றி பணத்தைச் செலுத்தி நுகர்வுக்காக சாப்பாட்டு உணவுகளுடன் குடிவகைகளும் வநியோகம் செய்யும் இடமும் என்று பொருட்படும். அதற்கு உணவுச்சாலை விருந்தினர் இல்லம், தங்குமிடம், விடுதி, சுற்றுலா ஓய்வுச்சாலை, சோற்றுக்கடை அல்லது ஹோட்டலுக்கு சமமான முறையில் வியாபார நிமித்தம் நடாத்தப்பெறும் இடமும் உள்ளடங்கும்.

**காய்கறி வகைகள், பழவகை வியாபார நிலையம்**

13. (i) சகல காய்கறி வகை மற்றும் பழவகை வியாபார நிலையங் களின் உரிமையாளரும் அல்லது அதற்குப் பொறுப்பாக உள்ள நபரொருவரும் தமது இடத்தில் சேகரமாகும் கழிவுகளை பின்வரும் முறைப்பிரகாரம் தேர்ந்து வேறாக்கல் வேண்டும் :-

(அ) மனித பாவனைக்கு ஒவ்வாத மரக்கறி வகைகள், பழவகைகள் அல்லது வேறு கழிவுகள் ;

(ஆ) மீண்டும் பாவிக்கக்கூடிய அல்லது எடுக்கக்கூடிய கழிவுகள் ;

(இ) ஆபத்தான கழிவுப்பொருட்கள் ;

(ஈ) இடத்தைக் கூட்டுவதால் சேகரமாகும் தூசி மற்றும் உலர்ந்த கழிவுகள்.

(ii) இத்துணைவிதியில் (i) ஆவது உப பிரிவின் (அ) பிரிவில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருள் வகைகளை ஈரளிப்படையாத பிளாஸ்டிக் அல்லது உலோகத்தினாலான பொருட் களால் செய்யப்பட்ட தனியான தொட்டியில் போடவேண்டுவதுடன் அதனுள் நுளம்புகள், எலிகள், கிருமிகள், வேறு புழு பூச்சிகள் உட்புகுவதை தடுக்கக்கூடியவாறு பாதுகாப்பாக வைத்தல் வேண்டும். ஏனைய கழிவுப் பொருட்களை ஏதாவது ஒரு பாத்திரம் அல்லது தொட்டியில் அல்லது உறையில் போடுதல் வேண்டும்.

(iii) இத்துணைவிதியின் (i) உப பிரிவின் (அ), (ஆ) மற்றும் (இ) பிரிவுகளில் குறிப்பிட்டுள்ள கழிவுப் பொருள் வகைகளை அதிகாரம்பெற்ற கழிவுப் பொருள் சேகரிப்பாளருக்குக் கொடுத்தல் முடியும். அவ்வாறு ஒப்படைக்கப்படாத இத்துணைவிதியின் (i) ஆவது உப பிரிவின் (இ) பிரிவில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருட்களுடன் சபையால் காலாகாலத்தில் முடிவெடுக்கப்படும் விதத்தில் கட்டணமொன்றை ஆணையாளருக்குச் செலுத்துவதன் மூலம் நகர சேகரிப்பாளர் ஒருவருக்கு ஒப்படைக்க முடியும்.

(iv) இத்துணைவிதியின் கருமங்களுக்காக சொற்கள் சம்பந்தமாக வேறொரு பொருள் கோடல் தேவைப்படாவிடில் பழவகைக்கடை என்பதன் பொருள் காய்கறி வகைகள் மற்றும் பழவகைகள் களஞ்சியப்படுத்திய அல்லது விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள இடம்.

**இறைச்சி, மீன், கோழி இறைச்சி அல்லது முட்டை வியாபார சிறு கடைகள்**

14. (i) குறித்த கருமங்களுக்காக ஆணையாளரால் விநியோகிக்கப் பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தின் பிரகாரம் அதில் குறிப்பிட்டுள்ள இடத்தில் எவரொருவராவது (மாடுகள் போன்ற) உணவுக்காக மிருங்களை அறுத்தல் (வெட்டுதல்) கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அனுமதிக்கப்பட்ட மிருகங்கள், பறவைகள் தவிர வேறு எவ்வித மிருகங்களோ அல்லது பறவை இனங்களோ கொல்லப்படுதல் (வெட்டுதல், அறுத்தல்) கூடாது.

(ii) இத்துணைவிதியின் (i) ஆவது உப பிரிவின்கீழ் விநியோகிக்கப் படுகின்ற அனைத்து அனுமதிப்பத்திரங்களிலும் வெட்டப்படும் மிருகத்தின் அல்லது பறவையின் இனம் வெட்டும் (அறுக்கும்) இடம் தீர்மானிக்கப்படவேண்டிய அமைப்பு சுத்தமாக்குவதற்கும் மனித பிரயோசனத்திற்கு ஒவ்வாத இரத்தம், சாணம், விலங்கு கழிவுப்பாகம் என்பனவும் அதன் பகுதிகளும் அகற்றப்படுவதற்கான நிபந்தனைகள் மற்றும் சபை ஏற்புடையது எனக் கருதும் வேறு நிபந்தனைகள் என்பன குறிப்பிடல் வேண்டும்.

(iii) இத்துணைவிதியின் (i) ஆவது உப பிரிவின்கீழ் அனுமதிப்பத்திரம் விநியோகம் செய்தலுக்காக காலாகாலத்தில் சபையால் முடிவு செய்யப்படுகின்ற கட்டணமொன்றை ஆணையாளரால் அறிவிப்பதுடன் அக்கட்டணம் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும்போது செலுத்தப்படல் வேண்டும்.

(iv) இறைச்சி, கோழி இறைச்சி, மீன்கள் மற்றும் முட்டை என்பன விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள சிறு கடைகளின் உரிமையாளர் அல்லது வியாபாரத்தை செய்பவர் அவ்வாறு கழிவுகளை பின்வரும் விதத்தில் தேர்ந்து வேறாக்கல் வேண்டும் :-

(அ) மனித பிரயோசனத்திற்கு ஒவ்வாத சாணிகள், விலங்கு கழிவுப்பாகங்களின் பகுதிகள் அல்லது முட்டைகள் ;

(ஆ) மீளப்பாவிக்கக்கூடிய மற்றும் மீண்டும் பயன்படுத்தக்கூடிய கழிவுகள் ;

(இ) ஆபத்தான கழிவுப் பொருட்கள் ;

(ஈ) இடத்தைக் கூட்டுவதால் சேகரமாகும் தூசி மற்றும் உலர் கழிவுப் பொருட்கள்.

(v) தேர்ந்து வேறாக்கிய கழிவுப் பொருட்களை வேறான பாத்திரத்தில் அல்லது தொட்டியில் அல்லது வேறு உறைகளில் வைத்தல் வேண்டும். இத்துணைவிதியின் (iv) உப பிரிவின் (அ) பிரிவில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருள் வகைகள் ஈரளிப்பு அடையாத வண்ணம் உறையினுள் வைக்கவேண்டியதுடன் அவ்வுறையில் ஈக்கள், எலிகள், கிருமிகள் மற்றும் வேறு பூச்சி புழுக்கள் உட்புகுவதைத் தடுத்து அதை ஏற்ற முறையில் பாதுகாப்பாக வைத்தல் வேண்டும்.

(vi) இத்துணைவிதியின் (vi) ஆவது உப பிரிவின் (அ), (ஆ), (இ), (ஈ) பிரிவுகளில் விசேடமாகக் குறிப்பிட்டுள்ள கழிவுப் பொருள் வகைகளை அதிகாரம்பெற்ற கழிவுப் பொருட்களை சேரிக்கும் ஒருவருக்கு கொடுத்தல் வேண்டும். அவ்வாறு ஒப்படைக்கப்படாத ஏதாவது கழிவுப் பொருட்கள் இத்துணைவிதியின் (iv) ஆவது உப பிரிவின் (ஈ) பிரிவில் விசேடமாகக் குறிப்பிட்டுள்ள கழிவுப் பொருட்கள் வகைகளுடன் சபையால் காலாகாலத்தில் முடிவு செய்யப்படும் கட்டணம் ஒன்றைச் செலுத்தி துர்நாற்றம் வீசுவதற்கு முன் மாநகர கழிவுப் பொருட்கள் சேகரிக்கும் ஒருவருக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

(vii) இத்துணைவிதியின் கருமங்களுக்காக சொற்கள் சம்பந்தமாக வேறு பொருள் கோடல் வேண்டுமாயின் தவிர இறைச்சி, மீன்கள், கோழி இறைச்சி அல்லது முட்டை வியாபார சிறு கடை என்பது இப்பொருட்கள் விற்பனை செய்வதற்காக களஞ்சியப்படுத்தப்பட்ட அல்லது விற்பனை செய்வதற்காக வைக்கப்பட்டுள்ள அல்லது திறந்த இடமாகும்.

### நடைபாதை வியாபாரம்

15. (i) கழிவுப் பொருள்கள் ஏற்படும் வியாபாரமொன்றை நடாத்தும் நடைபாதை வியாபாரி ஒருவர் ஆணையாளரினால் அனுமதிக்கப்பட்ட விதத்திலான தரத்தைக் கொண்ட கழவுப் பொருட்களைப் போடுவதற்கான பாத்திரம் (தொட்டி) ஒன்றை அல்லது உறை ஒன்றை வைத்தல் வேண்டும். அவ்வாறான கழிவுகளை நடைபாதையிலோ, பெருந்தெருவிலோ அல்லது பொது இடமொன்றிலோ போடுதல் கூடாது.

(ii) நடைபாதை வியாபாரி ஒருவர் வாகனங்களின் அல்லது நடைபாதைப் பிரயாணிகளின் போக்குவரத்திற்கு இடைஞ்சல் ஏற்படும் வகையில் தொட்டி (பாத்திரம்) ஒன்று அல்லது வேறு உறை ஒன்றை வைத்தல் ஆகாது.

(iii) ஒவ்வொரு நடைபாதை வியாபாரியும் அவரது வியாபாரத்தின் காரணமாக ஏற்படக்கூடிய கழிவுப் பொருட்களை கீழ்காணும் பிரகாரம் தேர்ந்து வேறாக்குதல் வேண்டும்.

(அ) உணவுக் கழிவுகள் வேறு உயிரியல் சம்பந்தப்பட்ட கழிவுகள்;

(ஆ) மீண்டும் பாவிக்கக்கூடிய கழிவுப் பொருட்களும், மீண்டும் மாற்றமடையச் செய்யக்கூடிய கழிவுகளும்;

(இ) ஆபத்திற்குரியதான கழிவுப் பொருட்கள்.

(iv) தேர்ந்து வேறாக்கிய கழிவுப் பொருட்களை தனியான தொட்டியில் அல்லது வேறு உறையொன்றினுள் போடல் வேண்டும். இத்துணைவிதியின் (II) உப பிரிவின் (அ) பகுதியில் விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள கிருமிகள், எலிகள், பூச்சி புழுக்கள் போன்ற உயிரினங்களால் கடித்துண்டு போடப்பட்ட கழிவுப் பொருட்கள் பாதுகாப்பான உறையொன்றில் வைக்க வேண்டியதுடன் மேலதிக கழிவுப் பொருட்களைப் போடுவதற்கு தேவைப்பட்டலான்றி அதனை மூடிவைத்தல் வேண்டும்.

(v) நடைபாதை வியாபாரிகள் அனைவரும் இத்துணைவிதியின் (III) வது உப பிரிவின (அ), (ஆ) பகுதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருள் வகைகளை அதிகாரம் பெற்ற சேகரிப்பாளருக்கு அல்லது இத்துணைவிதியின் (III) வது உப பிரிவில் (இ) பகுதியில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருள் வகைகளுடன் நகர கழிவுப் பொருட்களைச் சேகரிக்கும் ஒருவருக்கு ஒவ்வொரு நாளும் ஒப்படைத்தல் வேண்டும். வியாபாரம் நடைபெறாத சந்தர்ப்பங்களில் கழிவுத் தொட்டியை அல்லது உறையை நடைபாதையோரத்தில் அல்லது பெருந்தெருவில் வைத்தல் கூடாது.

(vi) நடைபாதை வியாபாரிகள் அனைவரும் கழிவுப் பொருள் தொட்டியை அல்லது உறையை நகர கழிவுப் பொருள் சேகரிப்பாளருக்கு ஒப்படைக்க முன்னர் சபையால் காலா காலத்தில் முடிவு செய்யப்படும் கட்டணமொன்றைச் செலுத்தல் வேண்டும்.

(vii) இத்துணைவிதியின் கருமங்களுக்காக சொற்கள் சம்பந்தமாக வேறு பொருள் கோடல் தேவைப்பட்டாலன்றி "நடைபாதை வியாபாரி" என்பதன் பொருள் நடைபாதையில் அல்லது அருகில் பொருட்களை (பண்டங்களை) விற்பனை செய்பவர் அல்லது சேவைகளை அளிப்பவர் ஆவார்.

### தொழிற்சாலைகள்

16. (i) தொழிற்சாலைகள், உரிமையாளர், அனைவரும் அல்லது உற்பத்தியாளர் அனைவரும் தொழிற்சாலை அமைந்துள்ள இடத்தில் (திடலில்) உண்டாகின்ற (ஏற்படுகின்ற) கழிவுப் பொருட்களை ஒன்று சேர்த்து பின்வரும் விதத்தில் தேர்ந்து வேறாக்கல் வேண்டும் :-

(அ) உயிரியல் சம்பந்தப்பட்ட கழிவுகள் ;

(ஆ) மீண்டும் பாவனையில் ஈடுபடுத்தக்கூடிய அல்லது பாவனைக்காக மாற்றக்கூடிய கழிவுப் பொருட்கள்;

(இ) ஆபத்துக்குரியதான கழிவுகள் ;

(ஈ) இடத்தைக் கூட்டியதன் பின்னர் சேகரமாகும் தூசி, உலர்வுடைய கழிவுகள்.

(ii) இத்துணைவிதியின் I வது உப பிரிவின் (அ), (ஆ) வரிசைகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருள் வகைகளை அதிகாரம் பெற்ற கழிவுப் பொருட்கள் சேகரிக்கும் நபருக்கு ஒப்படைக்க முடியும். அவ்வாறு ஒப்படைக்கப்படாத ஏதாவது கழிவுப் பொருட்களை சபையால் காலாகாலத்தில் முடிவு செய்யப்படும் கட்டணம் ஒன்றை ஆணையாள ருக்குச் செலுத்துவதன் மூலம் நகர கழிவுப் பொருள்கள் சேகரிப்பாள ருக்கு ஒப்படைக்க முடியும்.

(iii) 1980 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் அவ்வியாபாரத்திற்காக விநியோகிக்கப்படுகின்ற சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனை களுக்கு ஏற்ப ஆபத்திற்குரியதான கழிவுப் பொருட்களை வெளியேற்றல் அல்லது அகற்றுதல் வேண்டும்.

(iv) இத்துணைவிதியின் காரியங்கள் சம்பந்தமாக பொருள் கோடலின்படி வேறொரு பொருள் தேவைப்பட்டாலன்றி "தொழிற்சாலை" என்பதற்கு 1942 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தில் உள்ள பொருள் கோடலே ஏற்புடையதாகின்றது.

### தோண்டுதல், நிர்மாணித்தல், நிர்மூலமாக்குதல் (அழித்தல்)

17. (i) ஏதாவதொரு வீதியை, பாதையை அல்லது பொது இடமொன்றை தோண்டுகின்ற அல்லது அவற்றில் நிர்மாணம் ஒன்றைச் செய்கின்ற உடைத்தொழிக்கின்ற எவரும் அவற்றினால் ஏற்படுகின்ற கழிவுகளை அவ்விடத்திலிருந்து அகற்றும்வரை இடத்தினுள் ஆணையாளரினால் அனுமதிக்கப்பட்ட இடமொன்றில் களஞ்சியப் படுத்தல் வேண்டும்.

(ii) இத்துணைவிதியின் (1) ஆவது உபபிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருட்களை சபையால் காலாகாலத்தில் முடிவு செய்யப் படுகின்ற பிரகாரம் கட்டணமொன்றை ஆணையாளருக்கு செலுத்துவதன் மூலம் நகர கழிவுப் பொருள்கள் சேகரிக்கும் நபருக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

(iii) ''சொற்கள் சம்பந்தமாக வேறொரு பொருள் கோடல் தேவைப்பட்டாலான்றி இத்துணைவிதியின் காரியங்களுக்காக தோண்டுதல், நிர்மாணம் செய்தல், நிர்மூலமாக்கல் போன்ற செயல் களில் ஈடுபடுகின்ற எவரும்'' சேவையிலிருந்து ஈடுபடுத்துபவரால் சேவையில் ஈடுபடுத்தப்படுபவரும் உள்ளடங்குகிறது.-

''கழிவு பொருள்கள்'' என்பதற்கு நிர்மாணங்களின் போதும் கட்டிடப் பொருட்களைப் பாவிக்கும் போதும் உண்டாகின்ற கழிவுப் பொருட்களும் உள்ளடங்குகின்றது.

18. (i) வாயுப் பொருள் (கேஸ்) மின்சாரம், நீர், தொலைபேசி வசதிகள் அல்லது வேறு பொது வசதிகள் விநியோகத்திற்காக வீதியொன்று, பாதையொன்று, பொது இடமொன்று தோண்டப்படுமாயின் அவ்வாறு தோண்டும் நபர் ஆணையாளரின் எழுத்துமூலமான அனுமதியைப் பெறல் வேண்டும்.

(ii) மேலே (i) ஆவது உப பிரிவின் கீழ் அனுமதியளிக்க முன்னர் ஆணையாளரால் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக விண்ணப்பதாரரால் ஏற்பாடு செய்துள்ள வேலை ஏற்பாடுகள் உத்தேசத் திட்டங்கள் முடிந்ததன் பின்னர் பாதையில் அல்லது பொது இடத்தில் தற்காலிகமாக வைப்பதற்கு ஏற்படும் கழிவுகளின் அளவுப் பிரமாணம் மற்றும் விண்ணப்பதாரர் குறித்த கழிவுகளை அகற்ற அசட்டையாயின் அதை அவர் அதற்கான செலவினங்களை கவனத்தில் கொள்ளல் வேண்டும். அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கு முன்னர் விண்ணப்பதாரர் மதிப்பீடு செய்யப்பட்ட செலவினங்களுக்கு சமமான பணத் தொகை ஒன்றை வைப்பாக செலுத்துதல் அவசியமாகின்றது.

(iii) எவரொருவராவது கழிவுப் பொருள் முழுவதையும் அல்லது அதன் ஒரு பகுதியை அகற்றாத அல்லது அகற்ற தாமதிக்கும் போது ஆணையாளரால் முடிவு செய்யப்படும் பிரகாரம் குறித்த கழிவுப்பொருள் அகற்ற வேண்டியதுடன் அதன் பிரதிபலனாக செலவாகும் செலவினத்தை (ii) ஆவது உப பிரிவின் கீழ் வைப்பில் வைக்கப்படுகின்ற தொகைக்கு பதிலாக்கப்படுகிறது.

**வைத்தியசாலைகள்**

19. (i) வைத்தியசாலை ஒன்றின் உரிமையாளர் அவ்விடத்தில் உற்பத்தியாகும் (ஏற்படும்) கழிவுப் பொருட்களை கீழ்க்கண்ட விதத்தில் தேர்ந்து வேறாக்கல் வேண்டும் :-

(அ) உணவுக் கழிவுகள், உயிரியல் கழிவுகள் ;

(ஆ) மீளப் பாவனைக்குரிய கழிவுகள் மீண்டும் பாவனைக்கு மாற்றக்கூடிய கழிவுகள் ;

(இ) இவ்வுப யாப்பில் (இ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருள் வகைகள் தவிர வேறு கழிவுகள்;

(ஈ) வைத்தியசாலைக்குரிய கழிவுகள் ;

(உ) இடத்தைக் கூட்டியதின் பின்னர் சேகரமாகும் தூசிகள் மற்றும் உலர்வுடைய கழிவுகள்.

(ii) (i) ஆவது உப பிரிவின் கீழ் (அ), (ஆ) பிரிவுகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருள் வகைகளை வெவ்வேறான உறைகளில் போட்டு அவற்றை அகற்றும் வரை பொருத்தமான இடமொன்றில் களஞ்சியப்படுத்தல் வேண்டும். (i) வது உப பிரிவின் கீழ் (இ), (ஈ) பிரிவுகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருள் வகைகளை அதற்காக விசேடமாகச் செய்யப்பட்ட பாத்திரத்தில் (தொட்டியில்) அல்லது உறைகளில் போட்டு வைக்க வேண்டியதுடன் அதற்காக வேறாக்கப்பட்ட இடத்தில் வைத்தல் வேண்டும். 1980 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் குறித்த வைத்தியசாலைக்கு விநியோகம் செய்யப்பட்ட சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய அக்கழிவுப் பொருட்களை அகற்றுதல் வேண்டும்.

(iii) 1 ஆவது உப பிரிவின் (அ), (ஆ) பிரிவுகளில் விசேடமாகக் குறிப்பிட்டுள்ள கழிவுப் பொருள் வகைகளை அதிகாரம் பெற்ற கழிவுப் பொருள் சேகரிப்பாளருக்கு அல்லது சபையால் காலா காலத்தில் தீர்மானிக்கப்படும் கட்டணமொன்றை செலுத்துவதன் மூலம் கழிவுப் பொருள் சேகரிப்பவருக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

(iv) இத்துணை யாப்பில் பொருள் கோடல் சம்பந்தமாக வேறொரு பொருள் கோடல் தேவைப்பட்டாலான்றி ''வைத்தியசாலை'' என்பதற்கு ஏதாவதொரு நோயினால் அல்லது குறைபாட்டினால் அவதியுறுப வர்களுக்கு அல்லது மிருகங்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக உத்தேசிக்கப்படும் ஒரு இடம் (எவ்வாறு விபரஞ் செய்தாலும்) ஆவதுடன் தனியார் மருத்துவமனை, மகப்பேற்று மருத்துவமனை, சிகிச்சை நிலையம், மருத்துவ நிலையம், மிருக வைத்திய சாலை, மிருகச் சிகிச்சை நிலையம் ஆகியன உள்ளடங்கும்.

''ஆபத்துக்குரியதுமான சுகாதார பாதுகாப்பு கழிவுகள்'' என்பதற்கு சிகிச்சை நிலையக் கழிவுகள், உடல் பாகங்கள், நச்சு வகைகள், தொற்று நோய்க் கிருமிகள், அவசரமாகப் பரவக்கூடிய தொற்றுகள் ஆகிய சிறு கழிவுகள், ஊசிகள் போன்றவை.

**ஏனைய முயற்சிகள்**

20. (i) இல. 8 முதல் 19 வரை உள்ள துணைவிதிக்களில் விசேடமாகக் குறிப்பிடப்படாத வியாபாரம் ஒன்றை நடாத்தும் ஒருவர் அல்லது மக்களின் பங்களிப்புடன் பொதுமார்க்க சம்பந்தப்பட்ட சமூக, கலாசார அல்லது கல்விச் செயற்பாட்டு ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தும் ஒருவர் இச்செயற்பாடுகளால் அல்லது அவ்வாறான நிறுவனம் ஒன்றை நடாத்துவதால் அவ்விடத்தில் உற்பத்தியாகின்ற (சேகரமாகின்ற) கழிவுப் பொருட்களை கீழ்க் கண்ட விதத்தில் வேறாக்கல் வேண்டும் :-

(அ) உணவு வகைக் கழிவுகள், உயிரியல் கழிவுகள் ;

(ஆ) மீளப் பாவனைக்கு உகந்த கழிவுகள், மீண்டும் பாவனைக்காக மாற்றம் செய்யக்கூடிய கழிவுகள் ;

(இ) ஆபத்திற்குரிய கழிவுகள் ;

(ஈ) இடத்தைக் கூட்டுவதால் சேகரமாகின்ற தூசிகள் மற்றும் உலர் கழிவுகள்.

(ii) (i) ஆவது உப பிரிவின் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள வேறுபாடுகளை ஏற்பாடு செய்யும் ஒருவர் அச்செயற்பாட்டின் மூலம் உண்டாக்குகின்ற கழிவுகளைச் சேகரிக்க விசேட செயல் வழிமுறை ஒன்றை செய்வதற்காக சபைக்கு அறிவித்தல் வேண்டும்.

(iii) தேர்ந்து வேறாக்கிய கழிகளை அகற்றும் வரை தனியார் உறையில் அடைத்து ஏற்புடையதான இடமொன்றில் வைத்தல் வேண்டும்.

(iv) இத்துணைவிதியின் (i) வது உப பிரிவின் (அ), (ஆ) பிரிவுகளில் விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருள் வகைகளை அதிகாரம் பெற்ற கழிவுப் பொருள் சேகரிப்பவர் ஒருவருக்கு அல்லது (i) வது உப பிரிவில் (இ) பிரிவில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள்களுடன் சபையால் காலா காலத்தில் எடுக்கப்படும் தீர்மானத்தின்படி கட்டணம் ஒன்றைச் செலுத்துவதன் பேரில் பேரில் நகர கழிவுப் பொருள் சேகரிப்பாளர் ஒருவருக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

### வீதிகளும் பொது இடங்களும்

21. (i) ஆணையாளர் அவர்களால் பிரதேசாதிபதியுடன் கலந்துரையாடி சபையின் அனுமதியின் கீழ் கீழ்க்காணும் கருமங்களைத் திட்டமிடுவதற்கும், கட்டுப்படுத்துவதறகும் பரிபாலனம் செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும் :-

(அ) மாநகர சபை பிரதேச எல்லைகளுக்குள் அமைந்துள்ள வீதிகள், (பகிரங்க) பொது நிலையங்கள் பெருந்தெருக்கள், பொதுவடிகால் அமைப்புகள், நீரோடைகள் மற்றும் பொது விற்பனை நிலையங்கள் ஆகியவற்றை சுகாதார முறைப்படி நடாத்துதல்;

(ஆ) வீதிகள், பாதைகள் இரு பக்க ஓரங்களில் பொது நிலையங்களிலும் போதியளவு குப்பைத் தொட்டிகளை அமைத்து (விநியோகித்து) பராமரிப்புச் செய்தல்;

(இ) விழாக்களின் போதும், விசேட சந்தர்ப்பங்களிலும் சபையால் தீர்மானிக்கும் ஏற்பாடுகள் உள்ள சந்தர்ப்பங்களிலும் சபையில் தீர்மானிக்கப்படும் போது அல்லது விழாக்கள் விசேட ஏற்பாடுகள் சந்தர்ப்பங்களில் முடிவுகள் எடுக்கும் போது குறித்த விசேட ஏற்பாடுகள் சந்தர்ப்பங்களில் ஒழுங்கமைப்பாளரின் கோரிக்கையின் பேரில் அல்லது பொது நிலையங்களில் பாவனைக்காக நடமாடும் கழிவுகள்குப்பைத் தொட்டிகளை விநியோகித்தல்;

(ஈ) வதிவிடப் பிரதேசங்களில் பொருத்தப்பட்டுள்ள பொது கழிவுப் பொருள் குப்பைத் தொட்டிகள் அல்லது கொள்கலன்கள் சுகாதார முறைப்படி பராமரிப்புச் செய்து நடாத்தப்படவும் அதனருகில் வசிக்கும் மக்களுக்கு இடைஞ்சல்கள் ஏற்பட முன்னர் அக்குப்பைத் தொட்டிகளில் அல்லது கொள்கலன்களில் போடப்பட்டுள்ள கழிவுகளை அகற்றுதல்;

(உ) மேற்குறித்த பிரிவுகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் பற்றிய முறைப்பாடுகள் கிடைத்தவுடன் அவற்றை விசாரணை செய்து அவசரமாக செயற்படல்.

(ii) சபையால் விசேடமாக ஊத்தை, குப்பைக் கூளங்களை போடுவதற்காக விநியோகிக்கப்படும் குப்பைத் தொட்டிகளில் நீர்த்தன்மையுடைய, வியாபார, நிறுவன தொழிநுட்ப மற்றும் வேறு வகையான கழிவுகளை போட்டு வைத்தல் என்பன எவரொருவரும் செய்தல் கூடாது.

### பிரதேச சபைகளின் கடமைகள்

22. (i) ஆணையாளரால் பிரதேச சபை தலைவர் அவர்களுடன் கலந்துரையாடப்பட்டு சபையின் அனுமதியின்கீழ் கீழ்க்காணும் கருமங்களை திட்டமிடல், கண்காணிப்புச் செய்தல், கட்டுப்படுத்தல் மற்றும் பரிபாலனம் செய்தல்.

(அ) கழிவுப் பொருட்களைக் குறைப்பதற்காக மீளப் பாவனைக்கு மீண்டும் மாற்று முறையில் பாவனைக்குரியதாக்கல் செய்தல்;

(ஆ) கழிவுப் பொருட்களை தேர்ந்து வேறாக்கல், ஒன்று சேகரித்தல், களஞ்சியப்படுத்தி விடுவித்தல், வெளியாக்கல் சம்பந்தமாக உணர்வுகளை ஏற்படுத்தும் செயல் முறைத் திட்டங்களை நடாத்தல், அல்லது ஊடகங்களின் மூலம் பிரசாரம் செய்தல்;

(இ) மீளப் பாவனை செய்யும் மாற்று முறையில் மீண்டும் பயன்படுத்தல் செயற்திட்டங்களில் ஈடுபாடுடைய சிறு வியாபார முயற்சியாளர்களுக்கு வசதிகள் செய்து கொடுத்தல்;

(ஈ) மேற்படி செயல்முறைத் திட்டங்களில் தொடர்புடையவர்களை ஊக்குவித்தல்;

(உ) கழிவுப் பொருட்கள் வெளியேற்றல் முறை பற்றிய வேறு வித்திலான முறைகளைக் கையாளுதல்;

(ஊ) நகரத்தில் ஒவ்வொரு பிரதேசங்களிலுள்ள ஒவ்வொரு விதத்திலான கழிவுப் பொருள் வகைகளுக்காக சபையால் முடிவெடுக்கப்படும் பிரகாரம் கழிவுப்பொருட்களை சேகரிக்கும் திகதிகள், நேரங்கள், முறைகள் இன்னும் கட்டணங்கள், கழிவுப் பொருட்களை ஒன்று சேர்க்கும் கரும (வேலை) குறிப்பொன்று செய்தல் பகிரங்க விடுமுறை தினங்களில் கழிவுப் பொருட்களை சேகரிப்பதற்கான நிபந்தனைகள் என்பன அக்கரும குறிப்பு அட்டவணையில் உள்ளடக்கப்படல் வேண்டும்;

(எ) அதிகாரம் பெற்ற கழிவுப் பொருட்களை சேகரம் செய்பவருக்கு வேறாக ஒப்படைக்கப்படாத ஏதாவது வேறாக்கல் கழிவுப் பொருட்களை கால அட்டவணைக்கிணங்க குறித்த நேரத்தில் சேகரித்தல்;

(ஏ) அதிகாரம் பெற்ற கழிவுப் பொருட்களை சேகரம் செய்பவருக்கு வேறாக ஒப்படைக்கப்படாத ஆபத்திற்குரிய கழிவுப் பொருட்களையும் வேறேதாவது கழிப்பொருட்களையும் சுகாதார முறைப்படி கொண்டு செல்லல் ;

(ஐ) ஆபத்திற்குரியதான கழிவுப் பொருட்கள் அல்லது ஆணையாளரினால் குறிப்பிடப்பட்ட வேறேதாவது கழிவுப் பொருள் வகைகள் தவிர வீதியைக் கூட்டுவதனால் வடிகால்களை சுத்தப்படுத்துவதால், பொதுஇடங்களை சுத்தம் செய்வதனால்சேகரமாகும் கழிவுகளை பொதுகுப்பைத் தொட்டிகளில் சேகரமாகின்ற கழிவுப் பொருட்கள் சபையின் தொழிலாளர்களால் சேகரம் செய்யப்படுகின்ற கழிவுப் பொருள்கள் அதிகாரம் பெற்ற கழிவுப்பொருள்கள் சேகரம் செய்பவருக்கு ஒப்படைத்தல்;

(ஒ) உணவு மற்றும் உயிரியல் மீளப் பாவிக்கக்கூடிய கழிவுப் பொருட்களை செயல்முறையில் முடியுமான வரை முழுமையாக அல்லது பகுதியாக ஒழுங்கமைக்க, செயற்

படுத்த, வேலைத்திட்டமொன்றும் உட்பட நகர கழிவுப் பொருட்களை சேகரஞ் செய்பவர்களால் சேகரஞ் செய்யப் படும் வேறாக்கப்பட்ட கழிவுப் பொருட்கள்சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கவும் இச்செயல் முறைகளால் நிராகரிக்கப்படும் மற்றும் கழிவுப் பொருள் வகைகளின் வேறு விசேடமற்ற கழிவுப் பொருட்களையும் ஆணையாளரால் அனுமதிக்கப்படும் விதத்தில் அகற்றுவதற்கான ஏற்ற முயற்சிகள் மேற்கொள்ளல்;

(ஓ) மத்திய சுற்றாடல் அதிகார சபையுடன் கலந்துரையாடி ஆணையாளரால் அனுதிக்கப்படுகின்ற விதத்தில் ஆபத்திற் குரிய அனைத்து கழிவுப் பொருட்களையும் அகற்றுதல்;

(ஔ) 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க அனுமதிப்பத்திரம் அல்லது சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரமொன்று பெற்றுக் கொள்ளுதலும் அவ்வனுமதிப்பத்திரத்தை அல்லது சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தில் விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குக் கீழ் கழிவுப் பொருட்களை எரித்தல் அல்லது சுகாதார முறைப்படி நிலங்களை கரைப்படுத்தல்;

(க) கழிவுப் பொருட்களை கூட்டுதல் சேகரம் செய்தல், தேர்ந்து வேறாக்கல், கொண்டு செல்லல் (வேறு இடத்திற்கு) மாற்றுதல், அகற்றுதல் போன்ற வேலைகளில் ஈடுபடுகின்ற ஊழியர்களுக்கு ஏற்ற உடைகள் கையுறைகள், முகமூடி, பூட், சப்பாத்து என்பன விநியோகம் செய்தல்;

(ச) வீடொன்று அல்லது வேறு இடமொன்றில் நிர்மானம் செய்தல் அல்லது புனர் நிரமானம் செய்தல் ஆகியவற்றுக்காக சபைக்கு விண்ணப்பப்பத்திரம் ஒன்று முன்வைத்திருக்கும் சந்தர்ப்பத்தில் நிர்மானித்தல் அல்லது புனருத்தாரனம் செய்தல் காரணமாக உண்டாகின்ற கழிவுப் பொருட்களை அகற்றும் விதம் மற்றும் குறிப்பிட்ட வேலைகளை ஆரம்பிக்கும் கட்டத்திலும் முடிக்கும் கட்டம் இடித்த கட்டிட கற்குவியல்களை, இடுபாடுகளை களஞ்சியப்படுத்தல், சரிபடுத்தல் அகற்றுதல் போன்ற ஏற்பாட்டு முறைகள் பற்றிய விபரங்களை பரிசீலனை செய்தலும் அனுமதித்தலும்;

(ட) சபையின் இடங்களுக்கான உள்ளகக் கழிவுப் பொருள்கள் முகாமைத்துவ திட்டங்களை ஆக்கஞ் செய்தல்;

(த) 2000 திண்ம கழிவுப் பொருள் முகாமைத்துவம் பற்றிய தேசிய உபாய வழிமுறைகள் இன்னும் உரிய சட்டங்களுக்கமைய விபரமாக குறைந்த பட்சம் ஒவ்வொரு கலண்டர் வருடம் பூரணமாகின்ற மற்றும் கடைசியான அகற்றுதல் சம்பந்தமாக 03 வருடங்கள் மேலைக்கு பூரணமாகின்ற திண்ம கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ நடைமுறைத் திட்டங்களை ஆக்கஞ் செய்தலும் நடைமுறைப்படுத்தலும் அத்திட்டம் பூரணமாகின்ற கால எல்லைப் பிரகாரம் சபையால் வருடா வருடம் அனுமதித்தல்

(ப) (அ) முதல் (ப) வரையான பட்டியலிலுள்ள செயற்பாடுகள் சம்பந்தமாக கிடைக்கப்பெறுகின்ற ஏதாவதொரு முறைப்பாடு அது ஏற்புடையாவது ஏற்படப் போகும் இடைஞ்சலுக்காயின் மூன்று நாட்களுக்குள்ளும் வேறு முறைப்பாடுகளாயின் பதின்நான்கு நாட்களுக்குள்ளும் விசாரணை செய்தலும் உடனடியயாக தேவைப்படும் நடவடிக்கை எடுத்தலும்.

### அனுமதிப்பத்திரங்கள்

23. (i) கழிவுப் பொருட்கள் மீள்சுழற்சி பாவனைக்கு எடுக்கப் படுகின்ற மற்றும் மாற்றம் செய்வதன் மூலம் பாவனைக்கு உட்படுத்து கின்ற சேதனப் பசளை, உயிரியல் வாயு, அல்லது வேறு உற்பத்திகள் உற்பத்தி செய்கின்ற எவரும் கீழ்க்காணும் விடயங்களைப் பூரணப்படுத்துவதாயின் அக்கருமங்களுக்காக அவருக்கு சபையால் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படும் :-

(அ) சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதியின் பிரகாரம் நகர எல்லைக்குள் அல்லது வேறு உள்ளூராட்சி நிறுவன பிரதேசமொன்றில் ஏதாவது ஒரு வியாபாரத்தை நடாத்தல்;

(ஆ) 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் விநியோகிக்கப்படுகின்ற சுற்றாடல், பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் கைவசமிருத்தல்;

(இ) சேகரிக்கப்பட்ட கழிவுப் பொருட்களுக்காக சபையால் அனுமதிக்கப்பட்ட தரத்திற்கு ஏற்ப தீர்மானிக்கப்படுகின்ற கழிவுப் பொருட்கள் சேகரம் செய்யும் மையங்களை விநியோகித்தல்;

(ஈ) குறித்த வியாபாரம் பிரதேச சபை எல்லைக்குள் நடாத்தப்படுவதாயின் சபையால் காலா காலத்தில் முடிவு செய்யும் பிரகாரம் அக்கழிவுப் பொருட்களை சேகரம் செய்வதற்காக கட்டணமொன்றை ஆணையாளருக்கு செலுத்துவதன் மூலம் கழிவுப் பொருட்களை ஒழுங்காக்கும் போது அல்லது எரிக்கும் போது மீதமாகின்ற அல்லது நிராகரிக்கப்படுகின்ற அல்லது உப உற்பத்தியாக்கஞ் செய்கின்ற கழிவுகளை சபை அனுமதிக்கும் பிரகாரம் சபைக்கு ஒப்படைக்க இணங்குதல்;

(ii) சபை அனுமதிப்பத்திரம் வழங்குவதை நிராகரிக்குமிடத்து மறுத்தல் செய்யுமிடத்து அவற்றிற்கான காரணத்தை விண்ணப்பதாரர் கேட்பதாயின் 30 தினங்களுக்குள்அதற்கான காரணத்தை எழுத்து மூலம அறிவித்தல் வேண்டும் ;

(iii) ஆணையாளரால் செல்லுபடியாகும் காலப் பகுதிக்குள் சேகரம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்ட கழிவுப் பொருள் வகைகளை அல்லது குறித்த கழிவுப் பொருட்களை சேகரம் செய்வதற்கு அனுமதியளிக் கப்படுகின்ற பிரதேசங்களும் வேறு ஏற்ற நிபந்தனைகளும் அனுமதி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும் ;

(iv) இத்துணைவிதியின் (i) உப பிரிவின் கீழான ஏற்பாடுகளுக்கமைய செயற்படாதவிடத்து இத்துணைவிதியின் கீழ் விநியோகம் செய்யப்பட்ட அனுமதிப்பத்திரம் செல்லுபடியற்றதாகுதல் வேண்டும்.

(v) (iv) வது உப பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் அனுமதிப்பத்திரம் ஒன்று செல்லுபடியற்றதாக்கிய சந்தர்ப்பத்தில் எவரொருவராவது கழிவுப் பொருட்களை சேகரம் செய்யவோ அல்லது பெற்றுக் கொள்ளவோ செய்யாதிருத்தல் வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் அனுமதிப்பத்திரத்தை செல்லுபடியாக்கியுள்ளமை பற்றி பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வண்ணம் ஆணையாளர் ஊடகங்கள் மூலமாக போதிய அளவு பிரசாரம் செய்தல் வேண்டும்.

**கழிவுப் பொருட்களை ஒதுக்கித் தள்ளிவிடக்கூடிய பிரதேசங்கள்**

*24.* சபையால் கழிவுப் பொருட்களை ஒதுக்கித்தள்ளி விடக்கூடிய விடயத்திற்காக ஒதுக்கப்பட்ட பிரதேசத்திற்கு அதிகாரம் பெறாத ஒருவர் உட்பிரவேசிக்கக்கூடாது. அத்துடன் நடமாடாதிருப்பதுடன் அப்பிரதேசத்தில் பொருளொன்றை பாத்திரம் ஒன்றை எறிகின்ற பொருளொன்றை வைத்தல், கலத்தல், அகற்றல் செய்தல் கூடாது. எவரும் விசேடமாகக் குறிப்பிடப்படும் நிபந்தனைகளின் பிரகாரம் சபையால் அனுமதி அளிக்கப்பட்டாலன்றி சபையால் காலாகாலத்தில் உத்தரவிடும் தடைசெய்யப்பட்ட கழிவுப் பொருட்களை போடாதிருத்தல் வேண்டும்.

*25.* அனுமதிக்கப்படும் ஏதாவது நிபந்தனையின் கீழ்ஆணையாளரினதும் மத்திய சுற்றாடல் அதிகாரியின் எழுத்தினாலான முன் அனுமதியின்றி எவரும் மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள எந்தவிடத்திலும் அல்லது வசதியற்றதாக அதற்குப் புறம்பான இடமொன்றில் உண்டாகின்றி (சேகரமாகும்) கழிவுப்பொருட்களை போடுவதற்காக விநியோகம் செய்தல் பிரயோசனப்படுத்தல் கூடாது.

**ஏனையவைகள்**

*26.* (i) ஆணையாளருக்கு அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட ஒருவருக்கு அனைத்து சாதாரண நேரங்களிலும் எந்தவொரு இடத்தினுள் உட்பிரவேசிக்கவும் அதன் உரிமையாளர் அல்லது வசிப்பவர் இவ்வுப யாப்பின் ஏற்பாடுகளுக்கமைய செயல்படுகின்றாரா என பரிசீலனை செய்யவும் அதிகாரமுண்டு.

(ii) ஏதாவது இடத்தின் உரிமையாளர், வசிப்பாளர், பொறுப்பாளர், முகாமையாளர் அல்லது அதில் வசிக்கும் அல்லது வேலை செய்யும் ஒருவர் ஆகிய எவராவதுஆணையாளருக்கு அல்லது அதிகாரம் பெற்ற அதிகாரி ஒருவருக்குத் தேவைப்படும் தகவல்களை முன்வைத்தல் வேண்டும்;

(iii) இத்துணைவிதியின் கீழ் ஆணையாளருக்கு அல்லது அதிகாரம் பெற்ற அதிகாரி ஒருவருக்கு தமது அதிகாரங்களைப் பாவிக்கும் போது எவரும் இடைஞ்சல்கள் செய்யக்கூடாது.

*27.* சபையால் காலா காலத்தில் எடுக்கப்படும் முடிவுகளின் பிரகாரம் இவ்வுப யாப்பை நடைமுறைப்படுத்தும் அதிகாரம்பெற்ற அதிகாரிக்கு ஊக்குவிப்புப்படிகளைப் பெற முடியும்.

*28.* இத்துணைவிதியின் எந்தவொரு ஏற்பாட்டையாவது மீறுகின்ற எவருக்கும் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் குற்றத்திற்கு குற்றவாளியாகின்றார்.

**பொருள் கோடல்**

*29.* இத்துணைவிதியின் கருமங்களுக்காக வசனங்களுக்கு பொருள் கோடல் சம்பந்தமாக வேறு பொருள்கள் தேவைப்பட்டாலன்றி,

"கழிவுப் பொருட்கள் அல்லது திண்ம கழிவுப் பொருட்கள்" என்பது அதை அகற்றுபவருக்கு நுகர்வுப் பெறுமதியற்ற பொருள் என்பதுடன் குப்பை கூளம், சிதறிக்கிடக்கும் பொருட்கள், ஊத்தை, பாதைகளை சுத்தப்படுத்தும் போது சேகரமாகும், கழிவுப் பொருட்கள், தூசிகள், மலம், வேறு மற்றும் சாம்பல் என்பன பொருள்படும்;

"உணவுக் கழிவுகள்" மனிதனின் நுகர்வுக்கு பிரயோசனப்படுத்த முடியாத இறைச்சி, மீன், கோழி இறைச்சி, முட்டை, மரக்கறிவகைகள், பழவகைகள் மற்றும் ஏனைய உணவுப் பொருள்களாகும்.

"ஆபத்திற்குரிய கழிவுகள்" என்பது மக்களின் சுக வாழ்வுக்கு அல்லது சுற்றாடலுக்கு இடைஞ்சல் நஷ்டம் விளைவிக்கும் நச்சுத்தன்மையுடைய எரியக்கூடிய, நோய்களைப் பரப்புகின்ற, அரித்துத் திண்ணக்கூடிய இரசாயன மாற்றமுடைய, கதிரியக்கத் தன்மையுடைய கழிவுகள்.

"சேகரம் செய்தல்" என்பது அதிகாரம்பெற்ற சேகரிப்பாளர் அல்லது நகர கழிவுப் பொருட்கள் சேகரிப்பாளர் என்போரால் குப்பை கூளங்களை, கழிவுப் பொருட்களை மீண்டும் பயன்படுத்துவதற்கு ஏற்றதான, பதனஞ் செய்வதற்குரியதான, எரித்தலுக்கான கழிவுகளை கொண்டு செல்வதற்கான வசதிகளுக்கு கழிவுப் பொருட்களை சேகரித்தலாகும்.

'கலப்பு உரம்" காபன் கழிவுப் பொருள்கள் உயிர் சேதனமாகியதன் பின்னர் கிடைக்கப்பெறும் உற்பத்தி எனப்படும் இவை மண்ணை வளமாக்கு தன்மையை அடைகின்றது.

"காரியதரிசி" என்பது நகரம் சம்பந்தப்பட்டவரை மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அதிகாரம்) கீழ் நகரத்திற்காக தாபிக்கப்பட்ட நகர சபையின் ஆணையாளரைக் குறிப்பிடுவதாகும். இன்னும் அந்நகர சபையின் ஆணையாளருக்குப் பதிலாக நியமிக்கப்பட்ட ஒருவராவார் ; மற்றும் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின்கீழ் ஆணையாளரின் அதிகாரங்கள் கடமைகள் கருமங்கள் என்பனவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு அல்லது செய்வதற்கு அதிகாரம் அளிக்கப்பெற்ற அச்சபையின் உத்தியோகத்தர் ஒருவர் அதிகாரம் அளிக்கப்பட்ட அளவில்.

"களஞ்சியப்படுத்தல்" என்பது உரித்தாளர்களுடைய அல்லது வசிப்பாளரின் இடத்தினுள் அல்லது அனுமதிக்கப்பட்ட பொது சேகரிக்கும் இடத்தில் கழிவுப் பொருள்களைப் போடுதல் அல்லது வைத்தல்.

"கட்டணம்" என்பது சபையால் காலாகாலத்தில் தீர்மானிக்கப் படுகின்ற ஏதாவது ஒன்றுக்கான கட்டணமாகும்.

"வீட்டுத் தோட்டக் கழிவுகள்" என்பது வீட்டுத் தோட்டத்திலுள்ள மரங்களிலிருந்து அல்லது கன்றுகளிலிருந்து அகற்றப்படும் (கிளைகளும்) பகுதிகளும் வீட்டுத் தோட்டத்திலிருந்து அகற்றப்படுகின்ற கற்கள், மண் என்பன.

"உயிர் சேதனக் கழிவுகள்" என்பன கிருமிகளால் அரிக்கப்பட்டு உக்கிப் போன கழிவுகள்.

"பொது இடங்கள்" என்பன பாதை ஒன்று திடலொன்று, பொது நிலம் ஒன்று பாதைப் பாதுகாப்பு ஓரங்கள், ஆறு, நீர் ஓடையொன்று, பொதுக் கட்டிடம் ஒன்று, மயானம் ஒன்று, பஸ் தரிப்பிடமொன்று, புகையிரத நிலையமொன்று, தடாகமொன்று, நீர்த் தேக்கமொன்று, குளமொன்று. களப்பொன்று, உப ஆறொன்று, நீரோடை ஒன்று, கடல், கடற்கரை, பொது மக்களால் பிரயோசனப்படுத்தப்படும் இடங்கள்.

''மாற்று வடிவமைப்பான கழிவுப் பொருள்கள்'' என்பது கழிவுப் பொருட்களை கழிவுப் பொருளென இனங்காண முடியாதபடி சுய தன்மையை மாற்றி புது நுகர்வு உற்பத்தி (வாடிக்கை) ஒன்றாகச் செய்யும் கழிவுப் பொருட்கள்.

''மீளப் பாவிக்கக்கூடிய கழிவுப் பொருள்கள்'' என்பது கழுவுவதால், கிருமிகள் அழிதல் அல்லது வேறு முறைகளால் சுத்தம் செய்த பின்னர் பிரயோசனப்படுத்தக்கூடிய பொருள்கள் என பொருள்படும்.

''போக்குவரத்து'' என்பது, மனிதர்களால், மிருகங்களால் அல்லது இயந்திரத்தினால் செயற்படுத்தப்படுகின்ற முறைகள் மூலம் கழிவுப் பொருட்கள் ஒன்று சேர்க்கும் இடத்தில் இருந்து அவற்றைப் பதப்படுத்துதல், வெளியாக்குதல் என்பவற்றுக்காக குறிப்பிட்டுள்ள இடத்திற்கு கொண்டு செல்லுதல் எனப் பொருள்படும்.

''தொட்டி/பாத்திரங்கள்/வேறு உறைகள்'' என்பது துணைவிதியில் குறிப்பிட்டுள்ள தேவைகளுக்கேற்ப கழிவுப் பொருட்களைக் களஞ்சியப்படுத்தல், விடுவித்தல், ஒன்று சேர்த்தல், கொண்டு செல்லுதல் என்பவற்றிற்காக பாவிக்கப்படும் தொட்டியொன்று, பாத்திரமொன்று, உறையொன்று அல்லது வேறு இடக்கூடிய பொருட்கள் எனப் பொருள்படும்.

''அதிகாரம் பெற்ற சேகரிப்பாளர்'' என்பது கழிவுப் பொருட்களை சேகரிப்பதற்கு அல்லது பெற்றுக் கொள்வதற்கு ஆணையாளர் அவர்களால் அனுமதிப்பத்திரம் ஒன்று பெற்றுக் கொண்ட ஒருவர் ஆவார் எனப் பொருள்படும்.

''அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்'' என்பது இத்துணைவிதியின் கீழ் ஏற்பாடாகியுள்ள அரச கருமங்களை செய்வதற்கு அல்லது செயற்படுத்துவதற்கு ஆணையாளரால் எழுத்து மூலம் அதிகாரம் பெற்ற ஒருவர் எனப் பொருள்படும்.

''வெளியாக்குதல்'' என்பது மீண்டும் பாவிக்க முடியாததும் மாற்று முறைகளைக் கையாள முடியாததும் பிரயோசனப்படுத்த முடியாததுமான அனைத்துக் கழிவுப் பொருட்களையும் நிரந்தரமாக வேறுபடுத்தி வைப்பதற்கு காணியொன்றின் மீது அல்லது காணியொன்றினுள் சேகரித்து வைத்தல் எனப் பொருள்படும்.

''மாற்றக்கூடிய இடங்கள்'' என்பது சபையால் இக்கருமங்களுக்காக குறிப்பிடப்படும் இடம் எனப் பொருள்படுவதுடன் அவ்விடத்திலிருந்து மீளப்பாவிப்பதற்கும், சரிப்படுத்துவதற்கும், வெளியாக்குவதற்கும் வசதியாக கழிவுப் பொருட்களை எடுத்துச் செல்வதற்கு திறமைவாய்ந்த முன்னேற்றமடையக்கூடியதுமான கழிவுப் பொருட்களை மிகவும் சிறியளவிலான வாகனங்களிலும் பெரிய வாகனங்களிலும் வேறு இடங்களுக்கு எடுத்துச்செல்லும் இடம் எனப்பொருள்படும்.

''ஒரு நபர்'' என்பது கூட்டமைக்கப்பட்ட அல்லது கூட்டமைக்கப்படாத கம்பனியொன்றின் அல்லது பல நபர்களைக் கொண்ட சங்கம் ஒன்றின் குழுவெனவும் பொருள்படும்.

''நகர கழிவுப் பொருட்களை ஒன்று சேகரிப்பவர்'' என்பது தொட்டிகளுக்கும், பாத்திரங்களுக்கும் கழிவுப் பொருள்களைக் கூட்டிப் போடுதல், ஒன்று சேர்த்தல், பெற்றுக் கொள்ளல், வெளியாக்குதல் போன்ற கருமங்களுக்காக சபையினால் ஈடுபடுத்தப்படுகின்ற ஊழியர் ஒருவர் அல்லது இக்கருமங்களை செய்வதற்காக சபையுடன் ஒப்பந்தமொன்றிற்கு உடன்பட்டிருக்கும் ஒருவர் எனப் பொருள்படும்.

''வேறாக்கல்'' என்பது இவ்வுப யாப்பில் அமைக்கப்பட்டுள்ள தன்மைகள், விதிமுறைகளுக்கேற்ப கழிவுப் பொருட்களை வெவ்வேறாக தேர்ந்து வேறாக்கல் எனப் பொருள்படும்.

''ஒழுங்குபடுத்தல்'' என்பது கழிவுப் பொருட்களை பிரயோசன முடைய நிலைமைக்கு மாற்றக்கூடிய வழிமுறைகள் எனப் பொருள்படும்.

''சபை'' என்பது ........ பிரதேச சபை எனப் பொருள்படும்.

''பிரதேச சபை அதிகாரப் பிரதேசம்'' என்பது பிரதேச சபை கட்டளைச் சட்டத்தின் (252 ஆவது அதிகாரம்) அதிகாரத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்படுகின்ற பிரதேசம் எனப் பொருள்படும்.

''சுகாதார முறையில் நிலங்களை நிறைத்தல்'' என்பது அந்நிலங்களை அண்டிய சமூக சுகாதார மற்றும் சுற்றாடல் ஆகியவற்றின் பிரதிபலிப்புக்களைக் குறைப்பதற்கு இலங்கையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கட்டளைகளுக்கு இணங்க (தரம்) கழிவுப் பொருட்களை நிலத்தினுள் கடைசியாக புதைத்தல் எனப் பொருள்படும்.

''உரிமையாளர் அல்லது வசிப்பாளர்'' என்பது ஓரிடத்தில் உரிமையாளர் அல்லது உரிமையாளருக்காக அற்றோனி அதிகாரம் பெற்ற ஒருவர் அல்லது உரிமையாளரால் தனது கைத்தொழிலை அல்லது கைத்தொழிற்சாலை என்பவற்றின் முகாமைத்து வத்திற்காக நியமனம் செய்யப்பட்ட பிரதிநிதியொருவர் அல்லது பொறுப்பாளர் ஒருவர் அல்லது வாடகைக்கு பெற்ற ஒருவர் ஆகியோர் உட்படுவதுடன்வேறு நபர்களின் உத்தரவின் கீழ் செயல்படுகின்ற முகாமையாளர் ஒருவர் எனப் பொருள்படும்.

4-88/6